தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்

முனைவர் அ. சிவபெருமான்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள்

முனைவர் அ. சிவபெருமான்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

இராமலிங்க அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், சிங்கப்பூர்)

வரிசை எண் : 5

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamil̲arignar Aṭikaḷāciriyarin̲ ciruvar ilakkiyap pāṭalkaḷ
Author	:	Dr. A. Sivaperuman Associate Professor Department of Annamalai University
General Editor	:	Dr. T. Mahalakshmi Senior Research Assistant International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	635
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	viii+88
No. of Copies	:	1200
Price	:	Rs. 30/- (Rupees Thirty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Child Literature

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

தேசியக்கவி பாரதியும் பல கவிஞர்களும் பாப்பா பாட்டு, சிறுவர் கதைகள், சிறுவர்க்கான படைப்புக்கள் என இளந் தலைமுறையினரே எதிர்கால நாட்டின் தூண்கள் என உணர்ந்து தாங்கள் இச்சமூகத்திற்குச் சொல்லி வைக்க வேண்டிய அறக் கருத்துகள் மற்றும் நீதி நெறிகள்ஆகியவற்றைச் சிறுவர்களுக்குச் சொல்லி வைத்தனர்.

அறிஞர் பார்வையில் சிறுவர்கள்
ஔவையார் பார்வையில் சிறுவர்கள்
அதிவீரராம பாண்டியர் பார்வையில் சிறுவர்கள்

உலகநாதபண்டிதர் பார்வையில் சிறுவர்கள் சிவப்பிரகாச சுவாமிகள் பார்வையில் சிறுவர்கள் வீரமாமுனிவரின் பார்வையில் சிறுவர்கள் எனப் பலரின் சிறுவர்க்கான கருத்துகளை விரிவுற விளக்கியுள்ளார் நூலாசிரியர். தமிழ்ச்சிறுவர், மலையாளச் சிறுவர், கன்னடச் சிறுவர்; பிறநாட்டுச் சிறுவர் அனைவரும் சிறுவர்களே எனும் கருத்தினை மனங்கொண்டு மலையாளம், கன்னடம் மற்றும் பிறநாட்டுச் சிறுவர் இலக்கியங்கள் எனத் திராவிட இலக்கியங்களிலும் சிறுவர் இலக்கியங்கள் குறித்த சிந்தனைகள் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்
பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்
உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்

மேற்பாடல் அதிவீரராம பாண்டியரின் விசாலப் பார்வையைக் காட்டுகின்றது. பெரியவர்கள் செய்ய இயலாத செயல்களைச் சிறியவர்கள் செய்துவிட்டால் அவர்கள் பெரியவர்கள் தான் என்பதை மேற்பாடல் சுட்டுகின்றது என்று விளக்கும் நூலாசிரியர் திறன் பாராட்டுக்குரியது.

வட்டமான வெண்ணிலா
வானில் வந்துநின்றது
குட்டிப்பூனை பாலென்றெண்ணிக்
குதித்து நக்கப்பார்த்தது

வறிய சிறிய குழந்தைகள்
வந்துவானை நோக்கின
சிறிய தோசை என்று கருதிச்
சிரித்துக் கையை நீட்டின

எனும்படியான பலவிதமான சிறுவர்க்கான பாடல்களையும் பலசெய்திகளையும் காட்டிப் பக்கங்கள் தோறும் சிறுவர் இலக்கிய வளங்கள் என எண்ணுமளவிற்கு இந்நூல் சிறப்புப் பெற்றுள்ளது.

நூலாசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவன முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் தி. மகாலட்சுமிக்கு அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா.கௌசல்யா ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

முன்னுரை

இச்சொற்பொழிவானது அடிகளாசிரியரின் பல்வேறு தமிழ்ப்பணிகளில் சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்கும் பணியில் 'சிறுவர் இலக்கியம்' என்ற தலைப்பில் பாடிய பாடல்களின் தொகுப்புப் பற்றியும், அப்பாடல்களில் அடிகளாசிரியர் வெளிப்படுத்தியுள்ள எண்ணங்கள் பற்றியும் தமிழுலகம் அறிந்து கொள்ளும் வண்ணம் ஆய்ந்திடும் வகையில் ஆற்றப்படுகின்றது.

அடிகளாசிரியரின் "சிறுவர் இலக்கியம்" என்ற படைப்பிலக்கிய நூல் அடியேனால் பதிப்பிக்கப் பெற்றது. பதிப்பின் சிறப்பைப் பல்வேறு அறிஞர்களும், நமது (முன்னாள்) குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களும் பாராட்டியுள்ளனர்.

சிறுவர்களின் உலகத்தைப் புரிந்துகொள்ளத் தாமும் சிறுவனாக மாறிவிட வேண்டும் என்ற அடிகளாசிரியரின் துடிப்பு இச்சிறுவர் இலக்கியப் பாடல்களின் வழியே புலனாகின்றது.

இளமைக் காலத்தில் தாம் பள்ளியில் கல்வி கற்க இயலாத நிலை ஏற்பட்டும், தன்னால் இயன்றவரை தனிப் பயிற்சியாகவே படித்துப் புலவர் பட்டம் பெற்ற அடிகளாசிரியர் சிறுவர்களிடமும் அத்தகைய கல்வி வேட்கை எழவேண்டும் என்று விரும்புகின்றார்.

அடிகளாசிரியர் சிறுவர்களுக்காகப் பல்வேறு காலங்களில் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றையெல்லாம் தேடித் தொகுத்துப் பதிப்பித்துள்ளேன். இன்னும் எஞ்சியுள்ள பாடல்களையும் பதிப்பிக்க முயற்சிகளை மேற்கொள்ள ஆவலாயுள்ளேன்.

சிறுவர்களுக்கான இலக்கியம் படைத்தல் தற்காலத்தில் அரிதினும் அரிதாகக் காணப்படுகின்ற நிலையாகும். நவீன மயமாகிவிட்ட இக்காலத்தில் உறவுமுறைகள் புறக்கணிக்கப்படுகின்றன. பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே இடைவெளி உருவாகிக் கொண்டுள்ளது. இச்சூழல் இப்படியே வளருமாயின் நிலை என்னவாகுமென்று அறிஞர் பெருமக்கள் பெரிதும் வருந்துகின்றனர்.

அடிகளாசிரியர், நவீன காலத்தின் இயந்திரக் கரங்களில் இருந்து குழந்தைகள் விடுபட்டு அவர்கள் மனிதக் குழந்தைகளாக வளர வேண்டும்; இயந்திரக் குழந்தைகள் ஆகிவிடக் கூடாது என்று கருதி அதைத் தனது கருத்தாகக் கூறியும் வருகின்றார்.

தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் என்பது பொழிவுத் தலைப்பாகும். இத்தலைப்பில் ஆற்றப்படும் பொழிவு பின்வரும் ஐந்து இயல்களாக வகைபடுத்தப் பெற்றுள்ளது.

1. சிறுவர் இலக்கிய முன்னோடிகள்
2. தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியம் - ஓர் அறிமுகம்.
3. அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் இயற்கை.
4. அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்.
5. தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களில் கருத்தியல் பண்பு.

சிறுவர்களுக்கான இலக்கியம் படைத்தல் என்பது அரிய கலையாகும். அக்கலையின் தோற்றம் வளர்ச்சி முதலான செய்திகளை அறிவிக்கும் வகையில் முதல் இயலும், ஏனைய மூன்று இயல்கள் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களை ஆராயும் நோக்கிலும் அமைக்கப்பெற்றுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த சிறுவர் இலக்கியம் குறித்து தனித்து விரிவாக ஆராயப்பட வேண்டுமென்பதால் அச்செய்திகளை இப்பொழிவில் குறிப்பிடவில்லை.

அடிகளாசிரியரின் உள்ளக் கருத்தைச் சிறுவர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்ற பெருவிருப்பத்தாலேயே இச்சிறுவர் இலக்கியம் என்ற நூலைப் பதிப்பித்தேன்.

நூலின் சிறப்பினைப் பிறர் அறியும் வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினர் இராமலிங்க அபிராமி அறக்கட்டளையின் சார்பாகச் சொற்பொழிவினை நிகழ்த்த நல்லதொரு வாய்ப்பினை நல்கினார்கள். அவ்வாய்ப்பினைப் பெறற்கரிய பேறாக எண்ணி உவகை அடைகின்றேன்.

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பொறுப்பு திருமிகு முனைவர் ம.இராசேந்திரன் அவர்கட்கும், இந்நாள் இயக்குநர் பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்கட்கும், ஒருங்கிணைப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும் ஏனைய தமிழ் நெஞ்சங்கட்கும் அடியேன் நன்றியுடையேனாவேன்.

இச்சொற்பொழிவினை நிகழ்த்த அடியேனுக்கு இசைவளித்ததுமல்லாமல் என்னை மிகவும் ஊக்குவித்து இசைவு வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர், பதிவாளர், தமிழியல்துறைத் தலைவர் ஆகியோருக்கு அடியேன் என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேனாவேன்.

முனைவர் அ. சிவபெருமான்



ஆசிரியரைப் பற்றி

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் முனைவர் அ. சிவபெருமான் அவர்கள், தொல்காப்பியச் செம்மல் என்று அழைக்கப் பெறும் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்களின் திருமகனாவார். இவரது தந்தையார் செம்மொழித் தமிழாய்வு மையத்தின் தொல்காப்பிய விருதினை பெற்றுள்ளார் (2009). தம் தந்தையாரைப்போல் எளிமையும், அறிவியல் திறனும் பெற்றவர்.

இளம் வயது முதலே நூல் பதிப்புப் பணியைத் தொடங்கிய சிவபெருமான் இந்நாள் வரை நூலாசிரியராக 13 நூல்களையும், உரையாசிரியராக 5 நூல்களையும், பதிப்பாசிரியராக 25 நூல்களையும் உருவாக்கிய பெருமையர். இவர் எழுதிய "இலக்கியங்களில் வானியல்" என்னும் நூல் தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதினையும் (2009) இவர் பெற்றுள்ளார். சோதிடக் கலையில் முனைவர் பட்டம் பெற்ற இவர் அக்கலையோடு தொடர்புடைய வானியல், மருத்துவம் பற்றியும் நூல்களை எழுதியுள்ளார். இவருடைய நூல்களை முன்னாள் குடியரசுத் தலைவர் அ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களும், தமிழக விஞ்ஞானி திரு. சுஜாதா அவர்களும் ஏனைய அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் சொந்தப் பொருட் (4-1/2 இலட்சம்) செலவில் மிகப் பழைய சிவன் கோயில் ஒன்றைப் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்து அக்கோயிலின் தருமகர்த்தாவாகவும் விளங்கி அக்கோயிலைப் புரந்தும் வருகின்றார் என்பது அரிய செய்தியாகும்.

பொருளடக்கம்

		பக்கம்
	அணிந்துரை	
	முன்னுரை	
	ஆசிரியர் குறிப்பு	
1.	சிறுவர் இலக்கிய முன்னோடிகள்	1
2.	தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியம் - ஓர் அறிமுகம்	15
3.	அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் இயற்கை	40
4.	அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்	55
5.	தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களில் கருத்தியல் பண்பு	69
	பின்னிணைப்பு - 1	83
	பின்னிணைப்பு - 2	86

இயல் - 1

சிறுவர் இலக்கிய முன்னோடிகள்

முன்னுரை

சிறுவர்களுக்கான இலக்கியம் படைத்தல் என்பது மிக அண்மைக்காலத்தில்தான் வடிவம் பெற்றது. இன்றைய நவீன உலகத்தில் சிறுவர்களை ஈர்க்கும் பலதிறப்பட்ட வடிவங்களில் இலக்கிய உத்திகள் கையாளப்படுகின்றன. இன்று சிறுவர் இலக்கியம் மிகப் பெரிய அளவில் உலகம் முழுதும் பரந்து காணப்படுகின்றது.

இன்று பரந்து காணப்படுகின்ற சிறுவர் இலக்கியம் தோன்றுவதற்கு முன்னோடிகளாக விளங்கிய பெருமக்களை அறிந்து கொள்ளவும் உலக மொழிகளில் தமிழில்தான் முதன்முதலில் சிறுவர் இலக்கியம் தோன்றியது என்பதை உணர்த்தவும் இவ்வியல் முனைகின்றது. குறிப்பாக ஔவையாரே சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி என்று தெளிவுபடுத்தவும் இவ்வியல் விரும்புகின்றது.

அதிவீரராம பாண்டியர், உலகநாத பண்டிதர், சிவப்பிரகாச சுவாமிகள், வீரமாமுனிவர் ஆகியோர் தமிழ்ச் சிறுவர் இலக்கிய உலகிற்குப் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர் என்பதையும் இவ்வியல் குறிக்க முற்படுகின்றது. குழந்தைப் பருவத்திலே இலக்கியம் படைத்த பெருமக்களையும், மலையாள, கன்னட, சிறுவர் இலக்கியம் குறித்தும், பிறநாட்டுச் சிறுவர் இலக்கியம் குறித்தும் இவ்வியல் தொட்டுக்காட்ட முயன்றுள்ளது.

சிறுவர் இலக்கியம் – சொல்லும் பொருளும்

மக்களின் இளமைக் காலத்தைக் குறிக்கும் (Childhood) சொல்லாகச் சிறுவர் என்ற சொல் விளங்குகின்றது. சிறுவர் இலக்கியம் என்று வழங்கப்படுகின்ற சொல் மக்களின் இளமைக்காலம் குறித்த இலக்கியம் என்பதாக அமைவதால் அது கால ஆகுபெயராக நிற்கின்றது.

சிறுவர் இலக்கியம் என்றால் சிறுவர்களால் படைக்கப்பட்ட இலக்கியம் என்றும் பொருள்கொள்ளப்படலாம். சிறுவர்கள் இலக்கியம் எழுதுவது என்பது அரிதாகும். எனவே, இங்குச் சிறுவர்களின் இலக்கியம் என்ற ஐந்தனுருபு ஏற்புடையதாக அமையாது. சிறுவர்களைப் பற்றிய இலக்கியம் என்ற இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கத் தொகையாக அமைதலே நலமாகும்.

சிறுவர்களைப் பற்றி, சிறவர்களுக்காகப் பெரியவர்களால் படைக்கப் பட்டவையே சிறுவர் இலக்கியமாகும். அரிதினும் அரிதாக சிறுவர்களே செய்த இலக்கியங்களும் உள்ளன. எடுத்துக் காட்டாக மூன்று வயதில் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரமும், ஐந்து வயதில் குமரகுருபரர் பாடிய மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழும் சிறுவர்களின் இலக்கியங்கள் ஆகும்.

பன்னிரண்டு வயதில் இயேசு சொற்பொழிவு இலக்கியம் படைத்தார். ஏழு வயதில் ஆதிசங்கரர் கனகதாரா தோத்திரம் பாடினார். மகாகவி பாரதியார் ஒன்பதாம் வயதில் கவிதை இயற்றினார். இவர்கள் அனைவரும் "சிறுவர்களின் இலக்கிய" உடைமையாளர்கள் ஆவர்.

சிறுவர்களைக் கவர்கின்ற வகையில் சொல்லாலும், பாட்டாலும், கூறப்படுகின்ற செய்திகள் எல்லாம் சிறுவர் இலக்கியமாகக் கொள்ளப்படுகின்றன.

தமிழ்மொழிச் சிறுவர் இலக்கியம்

தமிழ்மொழியில் எத்தனையோ புலவர்கள் இருப்பினும் ஔவைப் பெருமாட்டியே தமிழர் அனைவரும் அறிந்த புலவராகத் திகழ்கின்றார். சிறுவர்களுக்காக முதன்முதலில் இலக்கியம் படைத்தவர் என்ற பெருமையை ஔவையாரே பெறுகின்றார். நாம் முதல் வகுப்பில் அ, ஆ என்று தமிழ் நெடுங் கணக்கை அறிவதற்கு வாய்ப்பாக **அறம் செய விரும்பு**. **ஆறுவது சினம்** என்று ஆத்திசூடியை இயற்றியவரும் அவரே ஆவார்.

சிறுவர்கள் விரும்பும் வகையில் ஓரிரு சொற்களில் அகரநிரலில் அமைந்த ஆத்திசூடி என்ற இலக்கியமே தமிழின் முதல் சிறுவர் இலக்கியமாக ஏன், உலகின் முதல் சிறுவர் இலக்கியமாகவே திகழ்கின்றது. பள்ளியில் சேர்க்கப்படுகின்ற சிறுவர்கள் முதன்முதலில் அறிகின்ற இலக்கியமாக ஆத்திசூடி விளங்குகின்றது.

12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையாருக்கு முன்பே 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் தமது ஐந்தாம்

திருமுறையில் (97ஆம் பதிகம்) உயிரெழுத்துகளையும், மெய்யெழுத்துகளையும் முதலாக வைத்துப் பாடல்களை இயற்றியுள்ளார் என்ற செய்தியும் இங்கு அறியத்தக்கதாகும். இவ்வகையில் ஔவையாருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் திருநாவுக்கரசராவார்.

தமிழர்கள் தங்கள் வாழ்வில் மறக்க இயலாத இலக்கியங்களாக ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஆகியவை விளங்குகின்றன. வாழ்வின் எந்தப் பொழுதிலும் எந்த இடத்திலும் இவற்றிலுள்ள கருத்துகளையே மேற்கோள் காட்டிப் பேசுகின்ற அளவிற்கு இவ்விலக்கியங்கள் முதலிடம் பெறுகின்றன. ஏனெனில், **இளமையில் கல், பசுமரத்தாணி** போன்ற சொற்றொடர்கள் மெய்யாகும் வண்ணம் தொடக்கக் கல்வியில் கற்பிக்கப்படுகின்ற ஔவையாரின் இலக்கியங்கள் இறப்பு வரையிலும் தமிழர்களின் மனத்தில் நிலைத்து நிற்கின்றன. எனவே, "உலகச் சிறுவர் இலக்கியத்தின்" முன்னோடியாகத் தமிழ்ப்பெருமாட்டி விளங்குகின்றார் என்பதில் ஐயமேதுமில்லை இதற்காக உலக அளவில் தமிழர்களாகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

ஔவையாரும் சிறுவர் இலக்கியம் படைத்த நிகழ்வும்

ஔவையார் சிறுவர் இலக்கியம் படைத்த நிகழ்வே மிகுந்த சுவையுடைய நிகழ்வாகும். காட்டு வழியே சென்று கொண்டிருந்த ஔவையாரிடம் "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்று கேட்டு மாடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் அவரை மடக்கி விட்டான். ஔவையாருக்கோ வருத்தமான வருத்தம். நாடு முழுதும் தன்னைத் தமிழ்ப்பெருமாட்டி என்று புகழும்போது தான் ஒரு சிறுவனிடம் தோற்றுவிட்ட செயல் அவரை உறங்கவிடாமல் வாட்டியது.

மேற்கூறிய சூழலில்தான் ஔவையாருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. பெரியவர்களைவிடச் சிறுவர்கள் அறிவுக் கூர்மையுடன் விளங்குகின்றனர். பெரியவர்களுக்குக் கூறப்படும் அறிவுரைகள் ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. நாம் ஏன் சிறுவர்களுக்காக இலக்கியம் படைக்கக் கூடாது? என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டார். சிறுவர்கள் அறிவுக் கூர்மையுடையவர்கள் என்பதையும், அவர்கள் பெரியவர்களை வென்றுவிடும் ஆற்றல் உள்ளவர்கள் என்பதையும் உணர்த்த, தான் தோற்றுப்போன நிகழ்வே நல்ல எடுத்துக்காட்டு என்று கருதினார். தான் தோற்றுப்போனதை உலகுக்கு மறைத்து விடாமல்

வெளிப்படுத்தவும் முயன்றார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

> கருங்காலிக் கட்டைக்கு நாணக்கோ டாரி
> இருங்கதலித் தண்டுக்கு நாணும் – அருங்கானில்
> காரெருமை மேய்க்குங் காளைக்கு நான்தோற்றது
> ஈரிராவுந் துஞ்சாதென் கண்'

இப்பாடல் அவரின் பெருந்தன்மையையும் காட்டுகின்றது.

அடுத்து, சிறுவர்களுக்கு இலக்கியம் படைக்க வரைமுறைகள் வேண்டும் என்பதையும் ஔவையாரே வகுத்துள்ளார். அஃதாவது சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலே சிறுவர் இலக்கியத்திற்கான அடிப்படை வரையறை என்பதையும் அவரே உணர்த்தியுள்ளார்.

மன்னரும் சிறுவரும்

சிறுவர்களுடன் விளையாடிப் பழகி எளிய வாழ்க்கை வாழ்ந்த ஔவையார் சிறுவர் இலக்கியம் பாடியது வியப்பில்லை. ஆனால் மன்னராக வாழ்ந்த ஒருவர் சிறுவர்களுக்காக இலக்கியம் படைத்துள்ளார் என்பதே வியப்பானதாகும்.

பாண்டியர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பது பொதுவான செய்தி. பாண்டியமரபில் வந்த அதிவீரராம பாண்டியர் என்ற மன்னர் சிறுவர்களுக்காக வெற்றி வேற்கை என்ற இலக்கியம் படைத்ததே சிறப்புச் செய்தி.

சிறுவர்களுக்குக் கூறும் செய்திகள் அவர்களை ஈர்ப்பவைகளாகவும், சுருக்கமாகவும், மனத்தில் பதியும் வண்ணமாகவும் இருக்க வேண்டும். இவ்வகையில் நான்கு சொற்கள் மட்டுமே உள்ள அடிகளால் அதிவீரராமபாண்டியர் இயற்றியுள்ள வெற்றிவேற்கை குறிப்பிடத்தக்கதாகும். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஆகியவற்றை அடுத்து, தமிழர் மனத்தில் பதிந்துள்ள சிறுவர் இலக்கியம் வெற்றிவேற்கையாகும்.

அரச பரம்பரையில் சிறுவர்களுக்காக இலக்கியம் படைத்தவர் என்ற பெருமையை அதிவீரராம பாண்டியர் அடைகின்றார். சிறுவர் இலக்கிய முன்னோடி அரசராக இவரைத் தமிழுலகம் அறிந்துள்ளது.

உலகநாத பண்டிதரும் சிறுவர் இலக்கியமும்

சிறுவர்கள் எப்போதும் துருதுருவென எதையாவது செய்துகொண்டே இருப்பார்கள். அவர்கள், தாம்

செய்பவையெல்லாம் சரியா? தவறா? என்று அறிந்து செய்வது கிடையாது. அவர்களிடம் தீமைகளைச் செய்யாதே என்று எடுத்துக் கூறினால் அவர்கள் அதனை ஏற்றுத் தீமைகளை விலக்கி விடுவர். இவ் உளவியலை நன்குணர்ந்த உலகநாத பண்டிதர் என்னும் புலவர் உலகநீதி என்னும் இலக்கியத்தைச் சிறுவர்களுக்காகப் பாடியுள்ளார். அவர், அவ்விலக்கியத்தின் முதலடியில் தொடங்கி இறுதிஅடி வரைக்கும் 'வேண்டாம்' என்ற எதிர்மறைக் கட்டளைச் சொல்லையே பயன்படுத்தியுள்ளார். அவ்விலக்கியத்திலிருந்து சில அடிகள் வருமாறு:

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்[2]

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்[3]

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்[4]

கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்[5]

மேற்கூறிய பாடலடிகளைத் தமிழக மக்கள் என்றும் மனத்தில் கொண்டுள்ளனர். அத்துடன் அப்பாடலடிகள் இன்றும் தமிழகச் சிறுவர்களுக்குப் பாடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

துறவியும் சிறுவர்களும்

உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்து விட்ட துறவிகளும் குழந்தைகளின் மேல்கொண்ட அன்பைத் துறக்க இயலாது. குழந்தைகள் என்பதனால் துறவிகளும் அவர்களுடன் கூடி விளையாடும் குழந்தையாகி விடுவர்.

பட்டினத்தார் கடற்கரையில் சிறுவர்களுடன் கண்ணாமூச்சி விளையாடினார் என்பது வரலாறு. அதுபோன்றே முற்றும் துறந்த துறவியான துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாமே சிறுவனாக இருப்பதாக எண்ணிக் கொண்டு 'நன்னெறி' என்ற சிறுவர் இலக்கியத்தைப் படைத்துள்ளார்.

சிறுவர் இலக்கியம் படைத்த துறவி என்ற வகையில் சிவப்பிரகாசர் முன்னோடியாகத் திகழ்கின்றார்.

உரைநடை சிறுவர் இலக்கியம்

இத்தாலி நாட்டிலே பிறந்து மதத்தைப் பரப்ப இந்தியாவிற்கு வந்தவர் வீரமாமுனிவர் ஆவர். இத்தாலிய நாட்டு வித்தகத் தமிழராகிய வீரமாமுனிவர் தமிழ் மண்ணிலே தங்கி, தமிழால் ஈர்க்கப்பட்டுத் தமிழுக்காகவே வாழ்ந்தவராவர். இவர் தமிழுக்குப் பலபுதுமைகள் செய்த முன்னோடியாவர். தமிழிலக்கண விளக்கம், அகராதி, சிற்றிலக்கியம் என்று பல துறைகளில்

தமிழ்ப்பணியாற்றியுள்ளார். இப்பணிகளுள் சிகரம் வைத்தாற்போல் விளங்குவது உரைநடைப் பணியாகும். தமிழில் உரைநடைப் பணியைத் தொடங்கி வைத்த பெருமை இவருக்கே உண்டு.

தமிழ் உரைநடையின் தந்தை என்று தமிழர்களால் அன்புடன் அழைக்கப்படும் வீரமாமுனிவர் தந்தைக்கே உரிய அன்பு மனத்துடன் முதன் முதலாக உரைநடையில் தந்தது சிறுவர் இலக்கியமே. "பரமார்த்த குருவும் சீடர்களும்" என்ற கதைநூல்தான் தமிழுலகின் முதல் உரைநடைநூல். இது சிறுவர்களுக்காக நகைச்சுவை உணர்வு பொங்க எழுதப்பட்டுள்ளது. சிறுவர்களின் உளநிலை தெரிந்த ஒருவரே இத்தகைய அரிய செயலைச் செய்ய இயலும்.

இன்றும் பரமார்த்தகுரு கதைகளுக்கு தமிழர்களிடம் மதிப்பு உள்ளது. சிறுவர்களைப் புரிந்துகொள்ள அன்பும் அன்பைப் புகட்ட நகைச்சுவையுணர்வும் வேண்டும் என்ற உளவியலை வீரமாமுனிவர் கடைப்பிடித்துள்ளார். குறிப்பிட்ட மதத்தினரால் தந்தை என்று அழைக்கப்பட்டவர் இன்று தமிழர்கள் அனைவருக்குமே தந்தையாய் நிற்க அவரது சிறுவர் இலக்கியம் காரணமாக உள்ளதைப் பலராலும் மறுக்க இயலாது.

சிறுவர்களைப் பற்றிய இலக்கியம்

சிறுவர்களைப் பற்றிய இலக்கியம் என்ற வகையில் முதன்முதலில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களே முன்னோடி என்ற வகையில் தோன்றின. பிள்ளைத்தமிழ் இலக்கிய வரலாற்றில் முன்னோடியாகத் திகழ்வது, "மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழே" ஆகும். இதனைப் படைத்தவர் குமரகுருபரர் ஆவர். குமரகுருபரர் சிற்றிலக்கியங்களின் கடல். இருப்பினும் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழே இவருக்கு அழியாப் புகழைத் தந்துள்ளது.

பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருபாலர் பற்றியும் எழுந்துள்ளன. பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் பெரியவர்களையே சிறுவர்களாக்கிக் காணும் இலக்கியமாகும். எனவே, இவற்றில் கற்பனைச் சுவை மிகுந்திருக்கும். குமரகுருபரரின் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் பெண்பால் பிள்ளைத் தமிழாக, அவ்வகை இலக்கியத்தின் முன்னோடியாக விளங்குகின்றது.

சிறுவர் இலக்கியத்தில் தாலாட்டு

சிறுவர்களை முதன்முதலில் தாய்வழியாகச் சென்றடைகின்ற இலக்கியம் தாலாட்டாகும். இது, பெரும்பாலும்

தனிப்பாடல் வகையிலும், நாட்டுப்புற இலக்கிய வகையிலும் காணப்படுகின்றது. தாலாட்டுப் பாடலுக்கு ஆசிரியராக யாரையும் கூற இயலாது. சிறுவர் இலக்கியங்கள் தோன்றுவதற்குத் தாலாட்டுப் பாடல்கள் அடிப்படையாக உள்ளன.

பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் தாலப்பருவம் என்ற பருவம் தாலாட்டை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. மாரியம்மன் தாலாட்டு, மதுரைவீரன் தாலாட்டு போன்றவை மக்களிடம் செல்வாக்குப் பெற்றுள்ளன.

> அத்தை அடிச்சாளோ அல்லிப்பூத் தண்டாலே
> மாமன் அடிச்சாரோ மல்லிப்பூத் தண்டாலே
> ஆரடிச்சா சொல்லியழு–ஆக்கினைகள் செய்திடுவேன்
> நீரடிச்சு நீர்விலகும் – நிம்மதியா தூங்கிவிடு[6]

என்று சொற்கோவைகளுடன் தாலாட்டுப் பாடல்கள் விளங்குகின்றன. உலகத்திற்கே தமிழகம்தான் தாலாட்டுப்பாடலுக்கு முன்னோடியாக விளங்குகின்றது. தாலாட்டுப் பாடல்கள் உறவுமுறை, குடிப்பெருமை, வீரஉணர்வு, அன்பு உணர்வு, முதலானவற்றைச் சிறுவர்களிடம் அறிமுகம் செய்து வைக்கின்றது. குழந்தைப் பருவத்திலே கேட்கப்படும் தாலாட்டுப் பாடல்கள் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியாகும்.

அறிஞர்கள் பார்வையில் சிறுவர்கள்

ஔவையார் முதல் அடிகளாசிரியர்வரை சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் தங்கள் தங்கள் பார்வையில் சிறுவர்களைக் கவரும் செயல்களைக் காணவே முயல்கின்றனர். அவர்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டியே அவர்களது பார்வையும் அமைந்துள்ளது. ஒருவர் காலத்து நடைமுறை ஒருவர் காலத்தில் ஒத்து வராது. இருப்பினும் ஔவையார் போன்ற பேரறிஞர்கள் எக்காலத்தும் ஒத்துவரக்கூடிய செய்திகளையே கூறிச்சென்றுள்ளனர்.

ஔவையார், அதிவீரராம பாண்டியர், உலகநாத பண்டிதர், சிவப்பிரகாச சுவாமிகள், வீரமாமுனிவர் ஆகியோர் பார்வையில் சிறுவர் இலக்கியப் பாடல்கள் எவ்வாறிருந்தன என்பதைச் சுருக்கமாக அறிவோம்.

ஔவையார் பார்வையில் சிறுவர்கள்

தன்னைத் தோற்கடித்தவன் ஒரு சிறுவனே ஆனாலும் அவனைக் காளை என்று பெரிய மனிதனாகவே ஔவையார் காட்டுகின்றார். சிறுவர்கள் சிறுவர்களாகவே தொடரக்கூடாது

அவர்கள் பெரியவர்களாக மிகப்பெரியவர்களாக வளரவேண்டும் என்பது ஔவையாரின் விருப்பமாகும். எனவேதான் ஆத்திசூடியில் "அறம் செயவிரும்பு"[7] என்று கூறிச் சிறியவனைப் பெரியவானக்கும் வழியைக் கூறுகின்றார். இது எக்காலத்திற்கும் ஏற்ற தேற்றமான கருத்தாகும்.

கீழோர் ஆயினும் தாழவுரை[8]

என்று சிறுவயதிலேயே பணிவின் சிறப்பைச் சிறுவர்களின் மனத்தில் பதியவைக்கின்றார். இதன்மூலம் சிறந்த தமிழகத்தை உருவாக்க ஔவையார் பெரிதும் சிறுவர்களையே நம்பியிருந்தமை புலப்படுகின்றது.

சிறுவர் இலக்கியம் அற இலக்கியமாகவும், விளையாட்டு இலக்கியமாகவும் விளங்கும் வகையில் அமைய, சிறுவர்களை மாறுபட்ட கோணத்தில் கண்ட முதல்புலவர் ஔவைப் பெருமாட்டியே ஆவார். ஆகவே, சிறுவர்களை மாறுபட்ட கோணத்தில் காண்பதற்கு அவரே முன்னோடி என்பதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.

வெட்டனவே மெத்தனவே வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவும் கோல்பஞ்சில் பாயாது-நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்[9]

பாட்டின் பொருள் வருமாறு

"வெட்டென்ற கடுமையான சொற்கள் மெத்து என்ற மென்மையான செற்களை வெல்லாவாம். ஆற்றலால் மெத்தென்ற சொற்களே வெட்டென்ற சொற்களை வென்று விடுமாம். நெடிய இரும்பினாலே செய்யப்பட்ட கடப்பாரை என்னும் கருவிக்கு நெகிழாத கருங்கற் பாறையானது தன்விடரில் முளைத்த பச்சை மரத்தின் வேருக்கு நெகிழ்ந்து பிளந்து விடும்"[10]

மேற்பாடல் கருத்து சிறுவர்களைப் பற்றிய அவரது கருத்தை அறிய வைக்கின்றது. இரும்பு போன்ற பெரியவர்கள் செய்ய இயலாததை மரவேர் போன்ற சிறுவர்கள் செய்துவிடுவர் என்ற கோணத்தில் ஔவையாரின் பார்வை அமைந்துள்ளது. இக்கருத்து எக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஒன்றாகும்.

இவ்விடத்தில் ஔவையர் அருளிய ஆத்திசூடியில் வந்துள்ள "வெட்டெனப் பேசேல்"[11] என்பதையும் ஒப்பு நோக்குக. இதனையே அடிகளாசிரியர் "மெத்தெனப் பேசு" என்று அறிவுறுத்துவார்கள்.

சிறுவர் இலக்கியமாகக் கருதப்படும் ஔவையார் அருளிய நல்வழிக்கு அடிகளாசிரியர் அருமையான உரையெழுதியுள்ளார் (1999) என்பதும் குறிக்கத்தக்க செய்தியாகும்.

அதிவீரராம பாண்டியர் பார்வையில் சிறுவர்கள்

மன்னராக விளங்கிய அதிவீரராம பாண்டியர் சிறுவர்களின் உளவியலைப் புரிந்து கொண்டு அவர்களை நோக்கியுள்ளார்.

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்
பெற்றார் எல்லாம் பிள்ளைகள் அல்லர்
உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்[12]

மேற்பாடல் அதிவீரராம பாண்டியரின் விசாலப் பார்வையைக் காட்டுகின்றது. பெரியவர்கள் செய்ய இயலாத செயல்களைச் சிறியவர்கள் செய்துவிட்டால் அவர்கள் பெரியவர்கள்தான் என்பதை மேற்பாடல் சுட்டுகின்றது.

பெரியோர்களால் தீர்த்து வைக்க முடியாத வழக்கு ஒன்றைக் கரிகாலன் என்னும் சிறியவன் பெரியவர்போன்று வேடமிட்டுத் தீர்த்து வைத்தான். அப்போதுதான் அவனைச் சிறியவன் என்று கருதியது தவறு என்பதை உலகத்தார் உணர்ந்தனர்.

பெற்றவர்கள் எல்லோரும் பிள்ளைகள் ஆகமுடியாது என்பது தந்தையைக் கொன்றுவிட்டு அல்லது சிறையில் அடைத்துவிட்டு ஆட்சிக்கு வந்த வடஇந்திய மன்னர்களின் வரலாற்றில் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆகவே சிறுவர்களை நல்வழிப்படுத்துவது மன்னனின் கடமை என்பதை உணர்த்துவதில் முன்னோடியாக அதிவீரராம பாண்டியர் விளங்குகின்றார்.

உலகநாத பண்டிதரின் பார்வையில் சிறுவர்கள்

ஔவையார் **அறம் செய விரும்பு[13]** என்று நேர்முறையில் கூறிய சொற்களைவிட,

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்[14]

என்று உலகநாத பண்டிதர் "எதிர்மறையில்" கூறியுள்ள சொற்கள் சிறுவர்களை மிகவும் ஈர்த்துள்ளன.

அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே என்று மிரட்டும் வகையில் கூறினாலும், அப்படிச் செய்தால் பூச்சாண்டிகிட்டே பிடிச்சுக் கொடுப்பேன் என்று கூறினாலும் பிள்ளைகள் எதிர்மறைக் கருத்தால் சிதைக்கப்படுவர். இக்கருத்தை

நன்குணர்ந்த உலகநாத பண்டிதர் "வேணான்டா செல்லம்" என்ற பாணியில் தன்கருத்துகளைக் கூறிச் சிறுவர்களைக் கவருகின்றார்.

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்[15]

என்னும் சொற்கள் சிறிதளவும் மிரட்டல் இலலாத கனிவுடன் திகழ்வதால் சிறுவர்கள் எதிர்மறையாய் உணராமல் உடன்படுகின்றனர். எனவே, உலகநாத பண்டிதர், சிறுவர் இலக்கியத்தில் உளவியலைப் புகுத்திய முன்னோடி ஆகின்றார்.

சிவப்பிரகாச சுவாமிகள் பார்வையில் சிறுவர்கள்

சிறுவர்கள் தாங்கள் வாழ்கின்ற சூழலைப் பிரதிபலிக்கின்ற தன்மையுடையவர்கள். அவர்களிடம் நன்மை விதைக்கப்படும்போது நன்மையும், தீமை விதைக்கப்படும்போது தீமையும் விளையும். நன்மையான சூழலில் வளர்க்கப்படும் சிறுவர்கள் துன்பங்கள் வந்தபோதும் தங்கள் சூழலை மாற்றிக் கொள்ள மாட்டார்கள் என்பது சுவாமிகளின் துணிபு.

எப்போதும் இறைவன் புகழ்பாடிக் கொண்டிருக்கும் சிவபாத இருதயருடன் இருந்ததால் மூன்று வயது ஞானசம்பந்தன் "தோடுடைய செவியன்" என்று தேவாரம்பாடி "சிறுவர் இலக்கியவாதி" ஆனான். அதுபோலவே வள்ளல்களின் பிள்ளைகளும் தாங்கள் வறுமையுற்றாலும் மனத்தளவில் வள்ளலாகவே வாழ்வர் என்று சுவாமிகள் தெளிவுபடுத்துகின்றார்.

எந்தைநல் கூர்ந்தான் இரப்பவர்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ-பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அறம் பையின்கீழ்
கன்றும் உதவும் கனி[16]

என்று ஒப்பற்ற உவமையால் அவ்வுண்மையைப் புலப்படுத்தும் சுவாமிகள் சிறுவர் இலக்கியம் கண்ட துறவிகளில் முன்னோடியாக விளங்குவதில் ஐயமில்லை.

வீரமாமுனிவரின் பார்வையில் சிறுவர்கள்

வீரமாமுனிவர் என்றும் அருட்தந்தை மக்களை நல்வழிப்படுத்த வந்த ஆயர். அவர் சிறுவர்களை ஆட்டு மந்தையில் ஓடும் குட்டிகளாகக் கண்டார். ஆட்டுக் குட்டிகளை ஆயன், "மே . . .டுர். . . உர்ரே" என்று பல்வேறு சிரிப்பு வரவழைக்கும் ஒலிகளை ஒலித்து ஓட்டும்போது அவை ஒழுங்காகச் செல்லும். அதைப்போன்றே சிறுவர்களைச் சிரிக்க வைத்துக் கூறுகின்ற கருத்துகள் அவர்களின் மனத்தில் நீங்கா இடம்பிடிப்பதை உணர்ந்த

வீரமாமுனிவர் நகைச்சுவையைச் சிறுவர்களிடம் ஊட்டுகின்றார். குதிரை முட்டை வாங்கிய கதை, குதிரைக்குத் தூண்டில் போட்ட கதை போன்ற கதைகள் தமிழ்ச் சிறுவர்கள் பெரியவர்களானாலும் மறக்க இயலாமல் உள்ளவை. மேலும் அக்கதைகள் உலக அறிவைப் பெற வேண்டும் என்ற கருத்தில் கூறப்பட்டுள்ளதால் சிறுவர்கள் மனத்தில் என்றும் தங்கிவிடுகின்றன.

"வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்" என்ற மருத்துவமுறை அறிந்து இலக்கியம் படைத்தவர்களில் வீரமாமுனிவரே முன்னோடியாவார்.

மலையாள சிறுவர் இலக்கியம்

தமிழ்மொழியின் சகோதர மொழியான மலையாள மொழியில் சிறுவர் இலக்கியங்கள் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தோன்றின. இதற்கு வித்திட்ட முன்னோடியாக 'செறுசேரி' என்பவரைக் குறிப்பிட வேண்டும்.

கன்னடச் சிறுவர் இலக்கியம்

கன்னட மொழியில் சிறுவர் இலக்கியம் என்று தனித்துக்காண இயலாத நிலையில், 1972இல் மைசூர் ஜனபதபளக் என்ற அமைப்பு வெளியிட்ட சிசுபிராசகளு என்ற மழலைப் பாடல்கள் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதுவே கன்னடச் சிறுவர் இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்கின்றது. இவ்வமைப்பைத் தொடர்ந்து இராமகௌடா என்பவரும் இதே ஆண்டில் கன்னட சிசு பிராசகளு என்ற தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார். தனியொருவர் முயற்சி என்ற வகையில் கன்னடச் சிறுவர் இலக்கிய உலகிற்கு இவர் முன்னோடியாகத் திகழ்கின்றார்.

கன்னடத்தில் இடுபெயர் கொண்ட குழந்தைப் பாடல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. விளையாட்டில் தோற்கும்போதும், தின்பண்டங்களைப் பங்கிட்டுக் கொள்ளும்போதும், கேலி, பரிகாசம் செய்யும்போதும் இடுபெயர் வைத்துத் திட்டிக் கொள்ளும் வகையில் குழந்தைப்பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

செறுசேரி என்பவர் கண்ணன் குழந்தையாக இருந்து நிகழ்த்திய குறும்புகளையும், வீரச்செயல்களையும் 'கிருஷ்ண கதா' என்ற நூலின் வழியாக வெளியிட்டார். அதுவே மலையாள சிறுவர் இலக்கியத்தின் முதல்படியாகும். பின்னர் மக்கள் கவிஞர் என்று புகழ்பெற்ற குஞ்சன் நம்பியார் பஞ்சதந்திரக் கதைகளைக் கிளிப்பாட்டு வடிவத்தில் எழுதியுள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் (1824) வாழ்ந்த பெஞ்சமின் பெய்லி என்பவர்

ஆங்கிலமொழியில் எழுதப்பட்ட சிறுவர் கதைகளை மலையாளத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். மலையாள உரைநடை இலக்கியத்தில் வந்த முதல் சிறுவர் இலக்கியம் இதுவே. எனவே, உரைநடை சிறுவர் இலக்கிய முன்னோடியாகப் பெஞ்சமின் பெய்லி கருதப்படுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற மலையாள குழந்தைக் கவிஞர் குஞ்சுண்ணி ஆவார். இவர் ஏராளமான குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளார். மற்றைய குழந்தைக் கவிஞர்கள் இவரையே முன்னோடியாகக் கொண்டு குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளனர்.

குழந்தைகளுக்கான அறிவியல் நூல்களை எழுதி முன்னோடியாகத் திகழ்பவர் அடக்காபுத்தூர் பி.டி. பாஸ்கர பணிக்கர் ஆவார்.

பிறநாட்டுச் சிறுவர் இலக்கியங்கள்

சிறுவர்களுக்கு என்று இலக்கியம் படைக்கும் முறை மேலை நாடுகளில் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில்தான் தோன்றியது. சிறுவர்களைக் கதைத் தலைவர்களாக (child heroes) கொண்ட புதினங்களும், இசைப்பாடல்களும் (Rhymes) நிறையத் தோன்றின. அத்தகைய இளம்கதைத் தலைவர்களில் ராபின் ஹீட் என்ற பாத்திரம் சிறப்புடையது. இந்தக் கதாபாத்திரத்தை, டான்க்விக்ஸாட் என்ற நாவலாசிரியர் உருவாக்கியுள்ளார்.

நாட்டுப்புறச் சிறுவர் இலக்கியங்கள் குறிப்பாக இளவரசி சிண்ட்ரெல்லா போன்ற சிறுகதை இலக்கியங்கள் ஆங்கில மொழியில் எழுந்தன.

அமெரிக்காவில் வால்ட்டிஸ்ட்னி உருவாக்கிய விலங்குகளின் கேலிச் சித்திர உருவங்களை அடிப்படையாக வைத்து டொனால்டு வாத்து, மிக்கி சுண்டெலி, டாம்நாய், ஜெர்ரி பூனை ஆகியோரைக் கதாபாத்திரங்களாகக் கொண்ட கேலிச்சித்திரக் கதைகள் மேனாடுகளில் புகழ்பெற்றன.

சூப்பர்மேன், ஸ்பைடர் மேன் என்ற கற்பனைக் கதாபாத்திரங்களைக் கொண்ட கதைகள் மேலை நாட்டுச் சிறுவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. அண்மைக்காலத்தில் ஹாரிபாட்டர் என்ற கதாபாத்திரம் மிகவும் பிரபலமடைந்துள்ளது.

முடிவுரை

இவ்வியலில் இதுகாறும் ஆய்ந்து கண்ட செய்திகளின் அடிப்படையில் கீழ்க்காணும் முடிபுகள் பெறப்படுகின்றன.

1. சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி மொழி தமிழே ஆகும்.
2. தமிழ்மொழிச் சிறுவர் இலக்கியத்திற்குத் தமிழ்ப் பெருமாட்டி ஔவையாரே முன்னோடியாவார்.
3. மன்னரும் சிறுவர் மனப்பான்மையுடன் இலக்கியம் படைப்பர் என்பதற்கு அதிவீரராம பாண்டியர் முன்னோடியாகத் திகழ்கின்றார்.
4. "செய்ய வேண்டாம்" என்ற வேண்டுகோள் முறையில் சிறுவர் இலக்கியம் படைப்பதில் உலகநாத பண்டிதர் முன்னோடியாகத் திகழ்கின்றார்.
5. துறவிகளும் சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்க இயலும் என்பதற்குச் சிவப்பிரகாச சுவாமிகள் முன்னோடியாக விளங்கிக் காட்டுகின்றார்.
6. இன்றைய பயன் நோக்கில் பார்த்தால் நீதி இலக்கியங்கள் சிறுவர்களுக்கான இலக்கியப் பாடமாகப் பயன்படுகின்றது. அந்த வகையில்தான் இவற்றை நான் சிறுவர் இலக்கியத்திற்கான முன்னோடிகள் என்று கூறியுள்ளேன். இக்கண்ணோட்டத்தில் இதனைப் பல திறப்பட்டோர் ஆய்வுக்குட்படுத்தினால் ஒரு சரியான முடிவை நோக்கி பயணிக்க முடியும்.
7. தமிழ்ச்சிறுவர் உரைநடை இலக்கியத்திற்கு இத்தாலிய நாட்டு வித்தகத் தமிழரான வீரமாமுனிவர் முன்னோடியாக விளங்குகின்றார்.
8. மலையாளச் சிறுவர் இலக்கிய உலகிற்கு செறுசேரியே முன்னோடியாவார்.
9. மலையாள உரைநடை சிறுவர் இலக்கியத்திற்கு முன்னோடியாக பெஞ்சமின் பெய்லி கருதப்படுகின்றார்.
10. கன்னடச் சிறுவர் இலக்கியத்திற்குக் கௌடா முன்னோடியாவார்.
11. ஆங்கிலச் சிறுவர் இலக்கியத்திற்கு டான்க்விக் ஸாட் முன்னோடியாவார்.
12. அமெரிக்காவில் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர் வால்ட் டிஸ்னி.

சான்றெண் விளக்கம்

1. ஔவையார், தனிப்பாடல் திரட்டு.
2. உலகநாத பண்டிதர், உலகநீதி, பாடல் 2.
3. மேலது, பாடல், 3.
4. மேலது, பாடல், 4.
5. மேலது, பாடல், 5.
6. நாட்டுப்புறப்பாடல் திரட்டில் உள்ள பாடல்.
7. ஔவையார், ஆத்திசூடி, அடி. 1.
8. ஔவையார், கொன்றைவேந்தன், அடி. 17.
9. ஔவையார், நல்வழி, பாடல் 33.
10. திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும், பதிப்பாசிரியர் அடிகளாசிரியர், பக். 59, 60.
11. ஔவையார், ஆத்திசூடி, அடி-105.
12. அதிவீரராம பாண்டியர், வெற்றிவேற்கை, அடி. 18,19, 20, 21.
13. ஔவையார், ஆத்திசூடி, அடி 1.
14. உலகநாத பண்டிதர், உலக நீதி, பாடல் 1.
15. மேலது, அடி 3.
16. சிவப்பிரகாசர், நன்னெறி, பாடல் 17.

இயல் - 2

தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியம் - ஓர் அறிமுகம்

முன்னுரை

தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தமிழறிஞர் அடிகளாசிரியர் படைத்துத் தந்துள்ள 'சிறுவர் இலக்கியம்' ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் இவ்வியல் எழுதப்பட்டுள்ளது. 'சூரியனுக்கு அறிமுகம் தேவையில்லை' என்றாலும் அவரது குழந்தை இலக்கியத்தின் மேன்மையைப் புரிந்துகொள்ளவும் உலகிற்கு வெளிப்படுத்தவும் இச்சொற்பொழிவு முயல்கிறது.

அவரது சிறுவர் இலக்கியத்தில் பல்வேறு சிறப்புகள் பொதிந்து கிடக்கின்றன. இருப்பினும் சிறுவர் இலக்கியச் சிறப்புகள், சிறுவர் இலக்கிய ஆசிரியர் வரலாறு, சிறுவர் இலக்கியத்தின் பொருள் நயம், சிறுவர் இலக்கியத்தில் காணப்படும் மெய்ப்பாடுகள், சிறுவர் இலக்கியத்தில் உவமை அழகு, சிறுவர் இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைகள் முதலியன பற்றி இவண் காண்போம்.

பனித்துளியில் பனைமரம் நிழலுருவாய்த் தெரிதல்போல அரிய கருத்துகள் சிறுவர் இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.

சிறுவர் இலக்கியச் சிறப்புகள்

இன்றைய இளைஞரே நாளை இந்த உலகை ஆளப்போகும் தலைவர்கள். அவர்களை உருவாக்குவதில் சிறுவர் இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

பெரும்புலவர்கள் நூற்றுக்கணக்கில் தமிழகத்தில் வாழ்ந்த பொழுதும் சிறுவர்களுக்காக இலக்கியம் படைக்க வேண்டும் என்று எவரும் நினைக்கவில்லை. ஔவையார் மட்டுமே குழந்தைகளை உருவாக்கும் தாயுள்ளத்தோடு சிறுவர் இலக்கியங்களைப் படைத்தளித்தார்கள்.

ஆத்திசூடி

கொன்றை வேந்தன்

வாக்குண்டாம்

நல்வழி

ஆகிய நூல்களைப் படைத்து வரலாற்றில் தனிப்புகழ் எய்தினார். அதிவீரராம பாண்டியர், வெற்றிவேற்கையைப் படைத்துத் தந்தவர். உலகநாத பண்டிதர் உலகநீதி என்னும் நூலைப் படைத்து அருளினார். இவர்கள் மட்டுமே சிறுவர்க்குப் புரியும் வகையில் முற்காலத்தில் நூல்களை வழங்கினர். பிற்காலத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மகாகவி பாரதியார், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, அழ. வள்ளியப்பா முதலியோர் குழந்தை இலக்கியம் எழுதியளித்தார்கள் போன்ற செய்திகளை முன்னர் அறிந்தோம்.

இவர்களை முன்னோடிகளாகக் கொண்டு குகையூர் தமிழறிஞர் அடிகளாசிரியர் சிறுவர் இலக்கியம் என்ற நூலைப் படைத்துள்ளார்.

தொல்காப்பியம் போன்ற பெரும் இலக்கண நூல்களுக்கு உரைவிளக்கம் எழுதிய செம்மாந்த புலமையாளர் இறங்கி வந்து சிறுவர்களுக்காக எளிய தமிழில் இனிய நடையில் உள்ளம் கவர்ந்திடுமாறு படைத்திருப்பது பாராட்டுக்குரியது.

108 தலைப்புகளில் தமது சிந்தனைகளைப் பிள்ளைக் கவியாக வெளிப்படுத்தியுள்ளார். நூற்றியெட்டு என்ற எண்ணிக்கை மிகவும் சிறப்புடையது. மந்திரங்களாக வழங்கும் கடவுள் திருநாம அர்ச்சனைகள் நூற்றியெட்டே ஆகும். ஐந்தெழுத்து மந்திரத்தை நூற்றியெட்டு முறை உச்சரிக்கும் வழக்கம் உள்ளது. இவ்வாறு மேலானதாகக் கருதப்படும் எண்ணிக்கையில் தனது குழந்தைப் பாடல்களை அய்யா வழங்கியுள்ளது போற்றுதற்குரியது.

கடவுள் வாழ்த்து தொடங்கி சிறந்த பண்புகள் ஈறாக இவரது சிந்தனைகள் சிறகடித்துப் பறக்கின்றன சிறுவரோடு சிறுவராகக் கலந்து குழந்தை உள்ளத்தோடு இப்பாடல்களை எழுதியுள்ளார். சிறந்த மனிதராகச் சிறுவர்கள் உருவாக இப்பாடல்கள் பயன்படுகிறது என்பதில் ஐயமில்லை.

சிறுவர் இலக்கிய ஆசிரியர் அடிகளாசிரியர் வரலாறு

தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி வட்டத்தின் தென்கோடியில் வடவெள்ளாறு என்னும் ஜீவநதியின் வடக்கெல்லையில் உள்ளது குகையூர் என்னும் கூகையூர். இவ்வூரில்தான் தமிழறிஞர் அடிகளாசிரியர் பிறந்தார்.

திருமூல நாயனாருடைய கொள்கையில் பயிற்சியுடைய சித்தநாதர் என்னும் சித்தர் ஒருவர் இவ்வூருக்கு வந்து ஆற்றங்கரைப் புதருள் தங்கிச் சிவயோகச் சமாதியை மேற்கொண்டிருந்தார் - அவர் அட்டமா சித்தியிலும் வல்லவராய் இருந்தார்.

அவ்வூரை ஆண்டிருந்த குறுநில மன்னனாகிய மாலாங்கன் என்பவன் சித்தநாதருடைய பெருமையை உணர்ந்து தன் மனைவியுடன் வந்து பேரன்புடன் அவருக்குப் பணிவிடை செய்தொழுகினான். அவ்விருவருடைய பேரன்பினையும், மகப்பேறின்றி மூப்படைந்துள்ள நிலையினையும் உணர்ந்த சித்தநாதர் அவ்விருவரையும் இளமை உடையவராக ஆக்கி வீரசைவ சமயநெறியை மேற்கொண்டு வாழுமாறு செய்தார். மா அம்மாலாங்களிலிருந்து அவன் பரம்பரை **சித்தநாதேச்சுராதீனம்** என வழங்கிற்று. அப்பரம்பரையில் பிற்காலத்தில் பட்டத்துப் பெரியசாமி ஐயர் என்பவர் வளர்ந்து வந்தார். அவர் மனைவி குங்கும அம்மாள் அவ்விருவருக்கும் கி.பி. 1910இல் சாதாரணயாண்டு சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் ஞாயிற்றுக் கிழமை தனுசு இலக்கினத்தில் பூசம் நாளில் அடிகளாசிரியர் முதல் மகனாகப் பிறந்தார். இவரின் பிள்ளைப் பெயர் குருசாமி **அய்யர்** என்பதாகும்.

பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கத் தலைவர் மறைமலையடிகளார் கருத்துப்படி அடிகளாசிரியர் எனப் பெயரை மாற்றிக்கொண்டார்.

இளமைக்காலமும் கல்வியும்

இவருக்கு ஏழாம் ஆண்டில் தந்தையார் இயற்கை எய்தினார். இவர் தாயார் குங்கும அம்மாள் என்பவர்தான் இவரைப் பேணிப் புரந்து கல்வி கற்குமாறு செய்தார். பெரம்பலூருக்கு அண்மையிலுள்ள நெடுவாசல் என்னும் ஊர் இவரது தாயார் பிறந்த ஊராகும். தாய்மாமன் இருவராவர். மூத்தவர் கு. சுப்பிரமணிய தேவர் இளையவர் கு. சிவப்பிரகாச தேவர் ஆவார். இவ்விருவரும் நன்கு தமிழ்ப் பயின்றவர்கள். மருத்துவக்கலை சோதிடக்கலை ஆகியவற்றிலும் வல்லவர்கள். அடிகளாசிரியர் இவர்கள் வீட்டில் தங்கி தமிழ்ப்பயிற்சியும் வடமொழிப் பயிற்சியையும் பெற்றார்.

பெரம்பலூரில் வாழ்ந்த மருதவிடார் என்பவரிடம் சோதிடமும், வீ. குமாரவீரையர் என்பவரிடம் நன்னூல் காண்டிகை உரையும் பாடமாகக் கேட்டறிந்தார். 1937இல் இவர் தனியாகப்

பயின்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்வெழுதித் தமிழ்ப்புலவர் பட்டத்தைப் பெற்றார்.

மயிலம், கல்லூரிப் பணி

14.7.1938இல் மயிலம் திருமடத்தில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி என்ற பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி தோன்றிற்று. அக்கல்லூரியில் இவர் முதலாசிரியராக அமர்ந்தார். அக்கல்லூரி பல்கலைக் கழக ஒப்புதல் பெற்றபின் 1.7.1941 இலிருந்து 30.11.1941 வரை விரிவுரையாளராகவும் 11.2.1942லிருந்து 1.7.1950 வரை துணைத் தலைவராகவும் அங்குப் பணியாற்றினார்.

கரந்தைக் கல்லூரிப் பணி

பின்னர் 3.7.1950 இலிருந்து 3.7.1970 வரை தஞ்சாவூர் கரந்தைப் புலவர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றினார். 4.4.1970இல் ஓய்வு பெற்றார்.

ஓய்விற்குப் பின்

சேலம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்திருந்த தனியார் தமிழ்க் கல்லூரியில் முதல்வராக மூன்றாண்டுகள் பணியாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் ஆராய்ச்சியாளராக ஓராண்டு (1977) பணியாற்றினார்.

20.1.1982ஆம் நாளிலிருந்து 1.10.1985ஆம் நாள்வரை தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சுவடிப் புலத்தில் சிறப்புநிலை இணைப்பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பிய ஆராய்ச்சியைச் செய்து வந்தார்.

குடும்பம்

இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்[1]

என்று தமிழுக்காக வாழ்ந்துவரும் பேராசிரியர் அடிகளாசிரியர் தாம் பிறந்த ஊரிலே கூரை வீட்டிலே மண்தரையில் இன்னமும் அமர்ந்து இந்த மண்ணோடு இருக்கும் பற்றை நினைவுபடுத்துவார்போல வளங்குன்றிய வாழ்வே வாழ்ந்து வருகிறார்.

அறிவுசான்ற மூன்று ஆண்மக்களும், அமைதி என்ற மூன்று பெண்மக்களும் வாசுகி அனைய மனையாளுமே இவரது சொத்துக்களாக உள்ளனர். சிந்தனை செய்தே சிறந்த இவர் ஊடல் இன்று பலரின் சிந்தனைக்கு உரியதாக உள்ளது. எழுதி எழுதியே

முதிர்ந்த இவரது கைகள் எழுத மறுக்கின்றன. நடந்தே சிறந்த கால்கள் நடை தடுமாறுகின்றன. ஆனால் சிந்தனை மட்டும் தடுமாறாமல் தமிழையே இன்றும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அகவை (99) முதிர்ந்த நிலையில் எந்த ஆசையும் அற்று தம் நூல்கள் அச்சேறி உலாவர வேண்டுமென்ற பற்று ஒன்றுடன் மட்டுமே இவர் வாழ்ந்து வருகிறார்.

அடிகளாசிரியர் தமிழ்ப்பணி

> என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு[2]

என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமதுமுதிர்ந்த வயதிலும் தமிழ்ப்பணி செய்து வருகின்றார். ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கும் பணியை இவர் ஆற்றி வந்தார். அன்றியும் இடையறாது உழைத்துத் தமிழில் நூல்கள் எழுதுவதிலும் ஈடுபட்டுள்ளார். இதுகாறும் இவர் உரை நூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 57 நூல்களைப் படைத்துள்ளார். அந்நூல்களின் பட்டியல் பின்னிணைப்பில் இடம் பெற்றுள்ளது.

அடிகளாசிரியர் பெற்ற பாராட்டுக்கள்

1. 1967ஆம் ஆண்டு இராசபாளையம் மணிமேகலை மன்றத்தார் நிகழ்த்திய தொல்காப்பியம் இரு சூத்திர விளக்கக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதற்பரிசு பெற்றுள்ளார்.
2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் மடாலயத்தைச் சேர்ந்த தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் இவரைப் பேரூர் ஆதீனப் புலவராக்கிச் செந்நாப்புலவர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்.
3. விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி தமிழ்க் கவிஞர் மன்றத்தினர் இவருடைய தொல்காப்பியம் எழுத்ததிகாரப் பதிப்பினைப் பாராட்டி, பொன்னாடைப் போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கியுள்ளனர்.
4. தமிழ்மொழிக்கு எண்ணிறைந்த சேவைகளைப் பல்லாண்டுகாலம் சலியாது செய்து வருகின்றமையால் திருக்கோவிலூர் பண்பாட்டுக்கழகம் 1992ஆம் ஆண்டிற்குரிய கபிலர் விருதை இவருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

5. சென்னைக் கம்பன் கழகத்தினர் இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிச் சான்றிதழும் பணமுடிப்பும் வழங்கினர்.

6. மயிலம் பொம்மபுர ஆதினம் இவருக்குக் "கற்பனைக் களஞ்சிய நம்பி" என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. (12.10.1998)

7. தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இவரெழுதிய திருமூலமும் பேருரையும் என்ற ஆய்வு நூலை 1998ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுள் சிறந்த நூலாகக் கருதி ரூபாய் பத்தாயிரத்தை வழங்கி சிறப்பித்துள்ளது. (15.1.00)

8. காஞ்சிபுரம் ஸ்ரீ சங்கரமடம் இவருடைய சைவப் பணியைப் பாராட்டிக் கௌரவித்து, இவருக்குப் பத்தாயிரம் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தது. (18.1.04)

பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களின் வாழ்க்கை வரலாறு வளரும் இளைஞர்களுக்கு ஒரு பாடமாகும். பல்வேறு இன்னல்களுக்கிடையே படித்து முன்னேறி தான்கற்ற கல்வியால் சமுதாயம் மேம்பட உழைக்கும் அவரது சிந்தனைகள் வரவேற்க வேண்டியனவாகும்.

சிறுவர் இலக்கியம் பொருள் நயம்

பேராசிரியர் அடிகளாசிரியர் படைத்துள்ள சிறுவர் இலக்கியம் ஓர் இனிய விருந்துபோல் உள்ளது. பலாச்சுளை போன்ற பாடல்கள் பொருள் நயத்தாலும் ஓசை இனிமையாலும் உள்ளத்தைக் கவர்கின்றன. அவருடையப் பாடல்களின் நயத்தை அறிய முயல்வோம்.

பொதுக் கடவுள் வாழ்த்து

கடவுள் வாழ்த்து எல்லா மதத்தினருக்கும் பொதுவாய் அமைந்துள்ள நயம் போற்றுதற்குரியது.

எங்கும் கடவுள் இருக்கிறது
    இதனால் உலகம் நடக்கிறது
அங்கும் இங்கும் அதைத்தேடி
    அலைந்து நானும் திரிவதில்லை[3]

என்று தொடங்கும் பாடல் மூலம் கடவுள் எங்கும் இருக்கிறார். அவரால் உலகம் இயங்குகிறது. அவரைத் தேடி அலைய வேண்டாம். ஏனென்றால் அவர் எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறார் என்னும் கருத்தை இளம்பிள்ளையின் நெஞ்சேற்குமாறு கூறியுள்ளார்.

அடுத்த பத்தியில் வழிபடும் முறையைக் கூறுகிறார்.

அதிகாலையிலே எழுந்திடுவேன்
அகத்தில் அன்பாய் நினைந்திடுவேன்
துதிகள் பலவும் பாடிடுவேன்
தூய மனத்தைப் பெற்றிடுவேன்[4]

அதற்கடுத்த இரண்டு பத்திகளில் இறைவனை வழிபடுவதால் கிடைக்கும் பயன்களைப் பட்டியலிடுகிறார்.

ஆண்டவன் தன்னை வழிபாட்டால்
அன்பும் அறிவும் உண்டாகும்
அன்பும் அறிவும் உண்டானால்
அருளும் பொருளும் உண்டாகும்
அருளும் பொருளும் உண்டானால்
அவனிக் கெல்லாம் நலஞ்செயலாம்
அவனிக் கெல்லாம் நலம்செயவே
ஆண்டவன் தன்னைப் பணிகின்றேன்[5]

உலக நன்மைக்காகவே கடவுளைப் பணிகிறேன் என்று கூறுவது ஆசிரியரின் பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது.

இறைவனும் ஏழையும்

ஏழைகளுக்குச் செய்யும் உதவி இறைவனைச் சென்று சேர்கிறது. குழந்தை முருகன் பற்றிப் பாடல்பாடும் அடிகளாசிரியர் தனது பாடல் முடிவில்.

ஏழைச் சிறுவரெலாம் – நாம்
ஏத்தும் இளமுருகன் – அவர்
வாழ உணவளித்தால் – முருகன்
வந்து மகிந்திடுமே!
கந்தையைப் போக்கியவர் – இடையில்
கட்ட உடையளிக்கில்– நம் தம்
சொந்த முருகனுக்கே – பட்டுச்
சோழ கொடுத்ததுவாம்.
ஏழைச் சிறுவருக்கே – கல்வி
ஏற்றம் அளித்திடிலோ–குருக்
கோழி முருகனுக்கே – உளத்தில்
கோடி மகிழ்ச்சிவரும்
நாட்டின் குழந்தையெலாம் – நமக்கு
நல்ல முருகர்களாம் – அவர்
வாட்டம் உறாதபடி – என்றும்
வாழ்ந்திடச் செய்திடுவோம்![6]

தெய்வத்தைப் பாடவந்த ஆசிரியர் இளைஞர்களை எல்லாம் முருகர்களாக எண்ணி அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுகிறார். ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறார். ஔவையார் கூட,

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பதரிது
அதனினும் கூன்குருடு செவிடு நீங்கிப் பிறப்பதரிது[7]

என்னும் பாடலில் மானிடப் பிறவியைப் பாராட்டுவார். அதுபோல ஆசிரியரும் மேற்கண்ட பாடலில் குழந்தைகளைப் போற்றி, குழந்தையே தெய்வம் என்று கூறுகிறார். அவர்களுக்குச் செய்யும் உதவியால் முருகனுக்கு மகிழ்ச்சி பிறக்கும் என்றும் சீராட்டுகிறார். அடிகளாசிரியரின் கருணை உள்ளம் இவ்வரிகளில் வெளிப்படுகிறது. இத்தகைய உயர்ந்த உள்ளம் படைத்தமையால்தான் முருகப்பெருமான் அவருக்குப் பதினாறு பேறுகளும் வழங்கி அருள்செய்திருக்கிறார்.

நல்லபாட்டு

நல்ல பாட்டு என்னும் தலைப்பில் அடிகளாசிரியர் பாடியுள்ள பாட்டு தலைப்பைப் போலவே ஒரு நல்ல பாட்டாகவே உள்ளது.

நல்ல பாட்டைப் பாடனும்
நாட்டை வாழ வைக்கணும்
கல்லைப் போன்ற நெஞ்செலாம்
காதில் போட்டுக் கரையனும்
வெல்லம் போல இனிக்கலாம்
வேம்பைப் போலக் கசக்கலாம்
நல்ல கருத்தை உணர்த்தனும்
நாட்டைத் திருத்த முயலனும்
ஏட்டில் வழங்கும் சொற்களால்
எழுதும் பாடல் சிலருக்கே
நாட்டில் வழங்கும் சொற்களால்
நாமும் பாடில் பலருக்காம்
சின்ன நல்ல சொற்களால்
சேர்த்துத் தொடர்க ளாக்கியே
பொன்னைப் போன்ற கருத்தெலாம்
பொருந்தி விளங்கப் பாடனும்
கண்ணைக் கவரும் அழகுடன்
காலை மலரும் பூக்கள்போல்
எணணந் தன்னை இழுத்திடும்
இனிய பாட்டை எழுதனும்[8]

நல்ல பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகவே மேற்பாடல் உள்ளது. கல்நெஞ்சமும் கரையுமாறு அப்பாடல் அமையவேண்டும். நல்ல கருத்துகளை உணர்த்த வேண்டும். நாட்டில் வழங்கும் மொழியில் பலபேருக்கும் பயன்படும் வகையில் பாடவேண்டும். சின்ன சொற்களால் பொன்னைப் போன்ற கருத்துகள் அமையப் பாடவேண்டும். பூக்கள்போல மனத்தை இழுப்பதாக அமையவேண்டும் என்று ஆசிரியர் கூறும் பொருள்நயம் பாராட்டிற்குரியது. பூக்கள் மனத்தைத் தன்பால் இழுப்பதுபோலப் பாக்கள் மக்களைக் கவர்ந்திழுக்க வேண்டும் என்பது ஆசிரியரின் சிந்தனைத் திறனைக் குறிப்பிடுகிறது.

ஆசிரியரின் சோதிட அறிவு

வானமீன்களைப் பற்றி ஆசிரியர் பாடும்பொழுது,

> **இருபத் தேழாய் வானில் விளங்கி**
> **எழிலைச் செய்யும் மீன்களே**
> **இருபத் தேழில் திங்கள்**
> **நடந்தால் எமக்குக் கிடைக்கும் மாதமே!**
> **இருபத் தேழில் ஞாயிறு**
> **நடந்தால் எமக்குக் கிடைக்கும் வருடமே![9]**

என்றவாறு பாடியுள்ளார்.

மேடம் முதல் மீனம்வரை பன்னிரண்டு இராசிகள் உள்ளன. ஓர் இராசிக்கு இரண்டேகால் நட்சத்திரங்கள் வீதம் பன்னிரண்டு இராசிகளுக்கும் இருபத்தேழு நட்சத்திரங்கள் ஆகிறது (12 x 2¼ = 27) (9/4 x 12 = 27). சந்திரன் இந்த இருபத்தேழு நட்சத்திரங்களையும் திங்கள் ஒவ்வொன்றாகக் கடந்து வந்தால் ஒரு மாதம் ஆகும். இதையே சூரியன் கடப்பதற்கு ஓர் ஆண்டாகும். இத்தகு மாதம், ஆண்டு கொண்டு மக்கள் காலக்கணக்கைச் செய்து வருகின்றனர். ஆசிரியரின் சோதிட அறிவைக் காட்டும் பகுதி இதுவாகும். தனது சோதிட அறிவால் நட்சத்திரங்களின் பயன்பாட்டினைத் தேர்ந்து தெளிந்து உணர்த்துகிறார். இப்பகுதி மிகுந்த நயமான பகுதியாகும்.

ஒன்றை ஒன்றாய்க் கருதுக

"ஒன்றை ஒன்றாய்க் கருதும் குழந்தை உலகம்" என்ற பாடல் மிகவும் நயமாக உள்ளது.

> பாப்பா செய்யும் காரியங்கள்
> பார்க்கப் பார்க்க வியப்பாகும்
> கேட்பா றற்றுக் கிடக்கின்ற
> கிளிஞ்சலைக் கல்லைப் பொறுக்கிக்கொள்ளும்.

காசுக ளென்றே பெயர்வைக்கும்
　　கருத்தாய்க் கொடுத்து வாங்கிக்கொள்ளும்
தூசினைப் போலே சிலர் நினைந்துத்
　　தொட்டால் அவரைக் கடிந்துகொள்ளும்.

ஒன்றை ஒன்றாய்க் கருதிடுதல்
　　உயர்ந்த புலவன் கருத்தென்பர்
என்றும் அந்தக் கருத்தினையே
　　இயற்றி மகிழும் குழந்தையினம்[10]

இப்பாடல் குழந்தைகளின் மனநிலையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஆசிரியர் தாமும் புலவர் ஆதலால் புலவர் உள்ளத்தை அறிந்து உள்ளார். தனது அனுபவத்தால் குழந்தை உள்ளமும் அவருக்குப் புரிந்துள்ளது. இரண்டும் ஒன்றுபடுத்திக் கூறும் நயமான பகுதியாகும். ஒரு பொருளை வேறொரு பொருளாய்க் கருதிக் கொள்வதன் மூலம் குழந்தை தனக்குத்தானே மகிழ்ச்சி கொள்கிறது. சிறுவர் இலக்கியத்திற்கேற்ற சிறந்த இலக்கியத் தரம் வாய்ந்த நயமான பாடலாகும் இது.

இன்பம் தரும் பொருட்கள்

இன்பம் தரும் பொருட்கள் என்ற தலைப்பில் ஒரு பாடல் வருமாறு:

வேனிலுக்குள் வேனில்
　　விரும்பும்இள வேனில்
பொழுதுக் குள்ளே பொழுது
　　பொலியுஞ்சிறு மாலை;
கோள்களுக்குள் கோளே
　　குளிர்ந்தஇளங் திங்கள்;
காற்றினுக்குள் காற்று
　　கலந்துவரும் தென்றல்;
மக்களுக்குள் மக்கள்
　　மகிழுஞ்சிறு மக்கள்
இப்பொருள்கள் ஒன்றாய்
　　இயைந்த நின்றால் இன்பே[11]

மேற்பாடலில் பயின்று வரும் சொற்களில் ஏதோ ஒரு மாயம் மறைந்துள்ளது. இப்பாடலைப் படிக்கப் படிக்க உள்ளம் மகிழ்கிறது. ஆசிரியரின் புலமைத்திறம் போற்றுதற்குரியது. சிறுவர் பாடல்களுக்கே வேண்டிய ஓசைக்கட்டுமானம் ஆசிரியருக்கு நன்றாகக் கைவந்திருக்கிறது. மிகவும் நயமான பாடல் இதுவாகும்.

கிராமங்களில் அவலம்

எட்டுநாட்கள் விடுமுறை என்பதால் பள்ளித் தோழர்கள் பட்டிக்காட்டைப் பார்க்கப் போனார்களாம். கட்டை வண்டியில் ஏறிச் செல்கிறார்கள்.

மட்டில் லாத வேகத்தோடு
மாடு ரெண்டும் சென்றன
கட்டை வண்டி கடகட என்று
காரைப் போல ஓடிற்று
குட்டிச் சுவரும் கூரைவிடும்
குப்பை மேடும் நிறைந்ததோர்
பட்டிக் காட்டை நாங்களடைந்து
பார்த்துப் பார்த்துக் கலங்கினோம்!
ஒட்டிப் போன உடம்பினோடு
உடையி லாத சிறுவர்கள்
வெட்டி யாகத் திரிதல்கண்டு
விசனம் நாங்கள் கொண்டனம்
இளைச்ச எருதை ஏரில்பூட்டி
இங்கும் அங்கும் உழுதிடும்
களைச்ச உழவர் தம்மைக் கண்டு
கவலை நாங்கள் கொண்டனம்
கல்வி செல்வம் நாகரீகம்
காணும் மூன்றும் இன்றியே
அல்லல் கொண்ட அந்த மக்கள்
அவதி கண்டு வாடினோம்[12]

"ஒரு மகிழ்ச்சியான விடுமுறை அனுபவத்தை எண்ணிக் கொண்டு சென்ற சிறுவர்கள் கண்களில் யதார்த்த உலகின் அவலங்கள் தெரிந்து அவர்களை வாடி வருத்தப்பட வைக்கின்றன". இன்னும் முன்னேறாத கிராமங்களை எண்ணி ஆசிரியர் புலம்புவது இப்பாடலில் அடிநாதமாக ஒலிப்பதும் நமது காதுகளில் கேட்கிறது. கிராமங்களைப் படம்பிடித்துக் காட்டும் இப்பாடல் வெளிப்படுத்துவது அவலச் சுவையாகும். இவ்வவலம் மாறிப் புதுயுகத் தென்றல் கிராமங்களை நோக்கி வீசி அவர்களை உயர்த்த வேண்டும் என்று உள்ளம் கவலைப்படுகிறது.

சிறுவர் இலக்கியத்தில் காணப்படும் மெய்ப்பாடுகள்

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப[13]

என்றார் தொல்காப்பியர். இவர் கூறும் எண்வகை மெய்ப்பாடுகள் சிறுவர் இலக்கியத்தில் காணப்படுவதை இவ்வியலில் காண்போம். ஆசிரியரின் பாடல்களைப் படிக்கும்போது மனத்தில், மெய்ப்பில் பலவிதமான உணர்வுகள் தோன்றுகின்றன. அவற்றையே மெய்ப்பாடாக வகைப்படுத்தி ஒவ்வொன்றாகக் காண்போம்.

நகை

சிறுவர் பெரியவர் அனைவருக்கும் பிடித்தது நகைச்சுவை உணர்வு. இந்த நகைச்சுவை உணர்வு "சிறுவர் இலக்கியத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. அவற்றுள் ஒன்றைப் பதச்சோறு போலக் காண்போம்.

"மாப்பிள்ளை விட்ட எலி" என்ற பாடல் மிகுந்த நகைச்சுவை உணர்வு தோன்ற பாடப்பட்டுளளது.

தம்பிப் பையன் வீட்டினிலே
தடபுட லான கல்யாணம்
தட்டில் லட்டைக் கொட்டி வைத்தார்
தகுதி யாக மூடவில்லை
ஆசை தோன்ற எலிகளெலாம்
அங்கே வந்து குவிந்தனவே.
நேச மான விருந்தினரைப் போல்
நிம்மதி யாகத்தின்றனவே.
ஓசை இன்றி எலிகளெலாம்
ஓட்டம் பிடித்து ஒளிந்தனவே.
சின்னஞ் சிறிய சுண்டெலிபோல
சீக்கிரம் ஓட முடியவில்லை
தின்னும் லட்டுக் குவியலுக்குள்
திருடனைப் போல ஒளிந்ததுவே
பந்திக் கெல்லாம் பரிமாற
பரிவாய்த்தட்டை எடுத்துச்சென்று
குந்தி யிருந்தோர் இலைகளிலே
குறித்து வைத்தார் ஒவ்வொன்றாய்!
தலைமை யான மாப்பிள்ளைமுன்
தலைவாழையிலைப் போட்டிருந்தார்
இலையில் லட்டென்று எண்ணிக் கொண்டே
எலியை தூக்கி வைத்தார்கள்.
வைத்த உடனே சுண்டெலிதன்
வாலைத் தூக்கி ஓடிற்று!
மைத்துனர் எல்லாம் கைகொட்டி
மாப்பிள்ளை விட்ட எலியென்றார்[14]

மேற்கண்ட பாடலில் சிறந்த நகைச்சுவை உணர்வு வெளிப்படுகிறது. மேலும் ஆசிரியரின் குரங்கு பற்றிப் பாடலிலும், குட்டிக் குரங்குக் கலியாணம் முதலிய பாடல்களிலும் நகைச்சுவை உணர்வு புலப்படுகிறது. சிறுவர்களுக்காகப் பாடப்பட்டுள்ள பாடல்களில் நகைச்சுவை சிறுவர்களைச் சிரித்து மகிழவைத்து உற்சாகப்படுத்தும். சிறுவர் உளவியல் அறிந்த ஆசிரியர் ஆன்றனுபவித்துக் காட்டும் நகைச்சுவை மெய்ப்பாடு படித்துப் பரவசப்பட வேண்டிய ஒன்றாகும்.

அழுகை

குழந்தைகளை அடிப்பது என்பது ஆசிரியருக்கு பிடிக்காத ஒன்று. அதுவும் நன்கு விசாரிக்காமல் அடிப்பது பாவமான செயல் என்கிறார். பின்வரும் பாடலில் ஆசிரியரின் மனம் சிறுவர்களுக்காக இரங்குவது புலப்படுகிறது.

நாயிக் குட்டியும் கண்ணுக்குட்டியும்
நடுத் தெருவிலே குதிச்சிது
நானும் பாப்பும் சேர்ந்துக் கிட்டு
நகைச்சி மகிழ்ந்து பார்த்திட்டோம்.
பாயும் பசுவு நாயிக் குட்டியைப்
பாய்ந்து வந்து துரத்திச்சு;
பயந்தி டாமல் நாயிக் குட்டியும்
பாய்ந்து விலகிக் குரைச்சிச்சு.
சிரிச்ச பாப்பு மிகவும் பயந்து
சீறிச் சீறி அழுதுச்சி:
எரிச்ச லுடனே தாயும்வந்து
என்னை அடிச்சித் திட்டிச்சு
பார்த்தி டாமல் கேட்டி டாமல்
பாலர் தம்மை அடிப்பது
பாவம்! பாவம்! இதனைப் போலப்
பழிப்பு வேறு இல்லையே![15]

தீர விசாரிக்காமல் சிறுவர்களை அடிப்பது போன்ற பழிக்கத் தக்க செயல் வேறொன்றும் இல்லை என்று கூறிச் சிறுவர்களை அடிக்காதீர்கள் என்று கூறுகிறார் ஆசிரியர்.

இளிவரல்

கல்வி கற்கும்பொழுது காமச் சிந்தனைகளை வளர்ப்பது தவறானது. அஃது இளிவரல் என்னும் இகழ்ச்சிச் சுவைக்குரியது. இதனைக் 'கல்வியும் காமமும்' என்ற தலைப்பில் ஆசிரியர் கூறுகிறார்.

கல்விப் பயிரை வளர்த்திடுங்கால்
காமக் களையை வளர்க்காதீர்!
நல்ல மனத்தில் கல்வியையே
நாளும் நாளும் வளர்த்திடனும்!
தனக்கும் உலகம் முழுவதற்கும்
தக்க நலனைக் கல்விதரும்
தனக்கு மட்டும் சிற்றின்பைத்
தந்தே அழிக்கும் புன்காமம்
காமம் உடற்கு நோய்விளைக்கும்
கல்வி அறிவை மிகவிளைக்கும்
ஏமம் எதுவென் றாய்திடணும்
இளையோர்க்கு இதனை இயம்புகிறேன்
உயர்ந்த கல்வி கற்றிடுங்கால்
உளத்தில் காமம் உண்டாயின்
அயர்ந்தே போகும் அக்கல்வி
அந்தோ! பயனை இழந்தீரே![16]

மேற்கண்ட பாடலில் ஒழுக்கத்தின் மேன்மையும், ஒழுக்கத்தின் அவசியமும் மறைமுகமாகச் சுட்டப்படுகிறது; காமத்தின் புன்மை கல்வியின் மேன்மை இரண்டும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏமம் எதுவென்று ஆராய்ந்து பின்பற்ற வேண்டும் என்று ஆசிரியர் கூறுவது பாராட்டிற்குரியது.

மருட்கை

மருட்கை என்பது வியப்புச் சுவையைக் குறிக்கும். சிறுவர் இலக்கியத்தில் வட்டமான வெண்ணிலா என்னும் தலைப்பில் ஆசிரியர் பாடியுள்ள பாடல் வியப்புச் சுவையைக் காட்டுகிறது.

வட்டமான வெண்ணிலா
வானில் வந்து நின்றது
குட்டிப் பூனை பாலென்றெண்ணிக்
குதித்து நக்கப் பார்த்தது.
வறிய சிறிய குழந்தைகள்
வந்து பானை நோக்கின
சிறிய தோசை என்றுகருதிச்
சிரித்துக் கையை நீட்டின.
செல்வர் வீட்டுக் குழந்தைகள்
மசன்ன வெள்ளிக் குடையிது
சொல்லு கின்ற பணத்தைத் தந்து
சுருக்கில் வாங்கும் என்றன.
கற்றில் லாத மாணவர்
கலைநி றைந்த மதியினை

உற்ற தேர்வில் குண்டென்றெண்ணி
ஓடி வீட்டுள் மறைந்தனர்.
கண்ணன் மதியைக் கண்டனன்
கட்டி வெண்ணெய் என்றனன்
விண்ணி லுள்ள வெண்ணெய்க்கட்டி
வேண்டும் என்று கத்தினான்
தங்க பாப்பு கண்டது
தலையில் அணியும் பூவிது
இங்குகொண்டு வந்து கொடுங்கள்
எனக்கு வேண்டும் என்றது[17]

மேற்கண்ட பாடலில் காண்பவர்கள் எல்லாம் தமக்குத் தோன்றிய பொருளாக நிலாவைக் கண்டு வியக்கின்றனர். பூனைக்குப் பாலாய், குழந்தைகளுக்குத் தோசையாய், வெள்ளிக் குடையாய், படிக்காத மாணவர்களுக்கு தேர்வில் பெறும் '0' பூஜ்யம் என்ற குண்டு மதிப்பெண்ணாய், கண்ணனுக்கு வெண்ணையாய், பாப்பாவுக்குப் பூவாய்த் தோன்றுகிறது. பலவிதப்பொருள்களாய் வியந்து நோக்கும் சிறுவர்கள் வெண்ணிலவை அடைய விரும்புகின்றனர். ஆசிரியர் தமது கற்பனைத் திறனை வெளிப்படுத்தி அவரவர்க்கு ஏற்ற பொருளாய் நிலவைச் சித்திரிக்கிறார். கள்ளமில்லாத பிள்ளைமனம் கொண்டுள்ள ஆசிரியர் குழந்தையாக மாறி அவர் உள்ளக் குறிப்பின்படி நிலவை வியந்து கூறும் திறம் பாராட்டிற்குரியது. வியப்புச்சுவை தோன்ற வெண்ணிலவைப் பல்வகைப் பொருள்களாக ஆசிரியர் வருணிக்கிறார்.

அச்சம்

பூனையின் செயல்கள் அச்சம் தருவதாய் உள்ளன. 'குண்டு குண்டு பூனையார்' என்னும் தலைப்பில் ஆசிரியர் பாடியுள்ள பாடல்கள் சிறுவர்களுக்கு அச்சம் ஊட்டுவதாக உள்ளன.

குண்டு குண்டு பூனையார்
கூச்சலின்றிச் செல்லுவார்
ஒண்டிச் சென்று எலியையெல்லாம்
ஒழித்துக் கட்டி வெல்லுவார்.
குருவி பிடித்துத் தின்னுவார்
கோழிக் குஞ்சும் கவ்வுவார்
பருக்கை மேலும் ஆசைகொண்டு
பனை சட்டி உருட்டுவார்![18]

பிற உயிர்களைக் கொன்று தின்னும் பூனையின் செயல் பயங்கரமாக உள்ளது. சிறுவர்களுக்கு அச்ச உணர்வைத் தோற்றுவிக்கிறது. ஆசிரியர் பூனையின் செயல்களை மிக அழகாகப்

படம்பிடித்துக் காட்டியுள்ளார். நாம், பூனை, குரங்கு, அணில் எனச் சிறுவர்களுக்குப் பிடித்த விலங்குகளை எல்லாம் பாடும் ஆசிரியரின் திறம் போற்றுதற்குரியது. இப்பாடலின் இறுதியில் பிறருக்கு அச்சம் ஊட்டும் பூனை நாயைக் கண்டால்தான் அச்சம் அடைந்து ஓடி மறைவதாகக் கூறியிருப்பது கருதத்தக்கது. அச்சத்தின் உச்சமாக இதனைக் கொள்ளலாம்.

பெருமிதம்

பெருமிதம் என்றால் மேம்பாடு என்று பொருள். தன்னைச் சார்ந்தவர் கொண்டுள்ள உயர்ந்த பண்பால் மேம்பாட்டால் கொள்ளும் உணர்வு பெருமிதமாகும். ‘எங்கள் பையன் நல்ல பையன்” என்று தந்தை கூறுவதாக ஆசிரியர் பாடியுள்ளார். அப்பாடல் பெருமித உணர்வைக் காட்டுகிறது.

எங்கள் பையன் நல்ல பையன்

இணையி லாத பையனே!
தங்கும் நல்ல பண்பு பெற்ற
தங்க மான பையனே!
அழகு தோன்ற தேர்வை எழுதி
அதனில் முந்தி நிற்பவன்
பழகுதற்கு இனிய நூலைப்
பார்த்துப் பார்த்துக் கற்பவன்.
உண்மை உண்டு பொறுமை உண்டு
உறுதி உண்டு : நன்மையில்
திண்மை உண்டு திறமை உண்டு
தெளிவும் உண்டு நெஞ்சிலே[19]

என்னும் வைர வரிகள் அமைந்த இப்பாடல் ஒரு நல்ல மாணவனின் பண்புகளைக் காட்டுகிறது. ஆசிரியர் அவர்களின் நல்ல சிந்தனைகளே இப்படிப்பட்ட நல்ல பாடல்களாக உருவாகிறது. சமுதாயம் மேம்பட வேண்டும் என்ற ஆவல் இதுபோன்ற மேம்பட்ட நினைவுகளிலே எப்போதும் சுற்றிச் சுழல்கிறது. அதனையே எண்ணுகிறது. பாடுகிறது.

வெகுளி

அடிகளாசிரியர் புதிய சமுதாயம் உருவாக வேண்டும். சாதி, மத வேறுபாடில்லாத சமத்துவ உலகமாக அது விளங்க வேண்டும் என்று பேரவா படைத்தவர். புதிய புரட்சி தோன்றி உலகையே மாற்றி அமைக்கவேண்டும். ஆதலால் அனைவரும் உயர்ந்து விளங்க வேண்டும். ஒற்றுமையோடு மக்கள் அனைவரும் சிறந்து வாழ வேண்டும் என்று எண்ணுபவர். ஆனால் அவரது சிந்தனைக்கு

நேர்மாறாய் நடப்பது கண்டு அவருக்குக் கோபம் ஏற்படுகிறது. சமுதாயப் புரட்சிக் கனவுகளைக் காண்பவர்களுக்கு மக்களின் செயல்பாடுகள் வெறுப்பை உண்டாக்குகின்றதால் பாடுகிறார்.

இட்லி தட்டிப் போட்டார்கள்
இனிய வடையை வார்த்தார்கள்
சட்டினி தன்னை இடித்தார்கள்
சாம்பார் பொடியை அரைத்தார்கள்
சோற்றைக் கூட்டி வைத்தார்கள்
சுவைபெறக் குழம்பை வடித்தார்கள்
ஏற்ற வாழைக் காயை கரைத்து
இனிய ரசமாய் வைத்தார்கள்
நெய்யில் சோற்றை மிக ஊற்றி
நிதமும் கரைத்துக் குடித்தார்கள்

கையால் எடுத்துப் பாயசத்தைக் கவளம் ஆக உண்டார்கள்.

சேலையை இடையில் கட்டிக்கொண்டே
சிரித்து வந்தார் ஆண்களெலாம்
ஆலையில் நெய்த வேட்டிகளை
அணிந்து வந்தார் பெண்களெலாம்
புரட்சி செய்தார் நம்தோழர்
புதய புரட்சி இதுவாகும்
திரட்சி யாக உலகீரே
தினமும் இதனைப் புரிவீரே![20]

மேற்கண்ட பாடலில் மக்களின் போலியான போக்குகளைக் கண்டு வெகுண்ட ஒரு கவிஞனின் சினம் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. " புரட்சி செய்தால் நம்தோழர் - புதிய புரட்சி இதுவாகும். திரட்சியாக உலகிலே! தினமும் இதனைப் புரிவீரே! என்று ஆசிரியர் கூறுவது அங்கதச் சுவையோடு உலகைப் பழிப்பதாக உள்ளது.

உவகை

உவகை என்பது மகிழ்ச்சியாகும். இம் மகிழ்வுணர்வு தோன்ற ஆசிரியர் பல பாடல்கள் பாடியுள்ளார். ஒரு பாடலைப் பார்ப்போம்.

சின்ன பாப்பு! சின்ன தங்கம்!
என்ன செய்யுறே?
சீக்கிரமாய்ப் பாலைக்காய்ச்ச
அடுப்பு மூட்டுறேன்

பாலைக் காய்ச்சி பசியைத் தீர்க்கக்
குடிக்கப் போறியா?
பானையிலே தயிரைத் தோய்ச்சுக்
கடையப் போறியா?
குடிப்பதற்கும் கடைவதற்கும்
பாலைக் காய்ச்சலே!
குழந்தைக்காகப் பாலைக் காய்ச்சிக்
கொடுக்கப் போகிறேன்
யார் குழந்தை? எங்கிருக்குது?
எனக்குச் சொல்லனும்
யாரும் அதனை வளர்ப்பதற்கே
எண்ண வில்லையா?
தாயும் இல்லை! தந்தை இல்லை
மிக இரங்கணும்
தச்சன் செய்து விற்று விட்டான்
தயவும் இன்றியே!
காசு கொடுத்து ஆசை யாக
நானும் வாங்கினேன்
கவலை கொண்டு அன்று முதல்
நான் வளர்க்கிறேன்[21]

மரப்பாய்ச்சி பொம்மையை வைத்துக்கொண்டு அதனைக் குழந்தையாக எண்ணி வளர்ப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இரண்டு குழந்தைகள் பேசிக் கொள்வதுபோல எழுதப்பட்டுள்ள இப்பாடல் மிகவும் சுவையாக உள்ளது. கலித்தொகையில் வரும் உறழ்கலிகளைக் கற்றவர் ஆசிரியர். அதனால் இதுபோன்ற வினாவிடைப் பாடல்களை எழுதுவது அவருக்குக் கைவந்த கலையாகிறது. மரப்பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடும் குழந்தையின் மகிழ்ச்சி படிப்பவருக்கும் தொற்றிக் கொள்கிறது அல்லவா!

சாந்தம்

சாந்தம் என்ற மெய்ப்பாடு சமநிலை என்றும் கூறப்படும். எண்வகை மெய்ப்பாட்டிற்கும் மேலாகக் கூறப்படும் ஒன்பதாவது சுவை இதுவாகும். இதுவும் சேர்த்து 'நவரசச்சுவை' என ஒன்பது சுவைகள் வழங்கப்படுகின்றன.

எங்கள் தமிழே! நீ வாழ்க!
எல்லோருக்கும் நீ வாழ்க!
திங்கள் தனக்கும் ஒளிநல்கும்
தெய்வக் கதிர்போல் நீ வாழ்க!

அகமும் புறமும் இனிக்கின்றாய்!
அன்பினை நாளும் வளர்க்கின்றாய்!
முகமும் விழியும் யாவையும் போல்
முதன்மை கொண்ட முத்தமிழே!
தந்தை தாயர் தமதின்றித்
தாத்தா பாட்டியும் யேசிட்டார்!
எந்தும் உளத்திலும் இப்பொழுதும்
இயல்பாய் எழுந்து உயர்கின்றாய்[22]

என்று தமிழை வாழ்த்திப் பாடும் பாடல் 'சாந்தம்' என்ற சுவைக்குக் காட்டாக உள்ளது. மக்கள் அனைவரும் பேசி மகிழ்வது உன்னாலே என்று மொழியின் பெருமை பேசுகிறார். எமது தந்தை தாய் மட்டுமில்லை எங்கள் தாத்தாவும் பாட்டியும் பேசி மகிழ்ந்த மொழியே எங்கள் உள்ளத்தில் இப்பொழுதும் எழுந்து வளர்கின்றாய் என்று ஆசிரியர் கூறுவது பாரதியார்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே[23]

என்று பாடும் பாடலுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

மேற்கண்டவாறு ஆசிரியர் ஒன்பான் சுவைகளும் தோன்றப் பாடியிருக்கும் சிறுவர் இலக்கியம் காலத்தை வென்று வாழும் காவியமாகும். இவ்வுலகு உள்ளவரை ஒலித்துக்கொண்டே யிருக்கும் ஒப்பற்றப் பாடல்களாகும். இதனைப் பாடிய ஆசிரியர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இன்னும் பல நூல்களைத் தரவேண்டும்.

சிறுவர் இலக்கியத்தில் உவமை அழகு

அடிகளாசிரியர் தமதுகல்வி, கேள்வி அறிவினால் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியுள்ளார். அவர் படைத்த நூல்கள் ஏராளம். ஒன்றை ஒன்று விஞ்சக்கூடிய பெருமை வாய்ந்தவை அவை ஒவ்வொன்றும் கருத்தாலும், உவமை நலனாலும் பெருமைபெற்றவை. ஆசிரியர் பாடியுள்ள "சிறுவர் இலக்கியம்" என்ற நூலில் சிறந்த உவமைகள் கூறியுள்ளார் அவற்றைக் காண்போம்.

கண்ணைக் கவரும் அழகுடன்
காலை மலரும் பூக்கள்போல்
எண்ணம் தன்னை இழுத்திடும்
இனிய பாட்டை எழுதணும்[24]

என்ற பாடலில் 'பூக்கள் போல்' எண்ணம் தன்னை இழுத்திடும் இனிய பாடல் என்கிறார். பூக்கள் தனது நிறத்தாலும் அழகாலும், வடிவத்தாலும், மணத்தாலும் மனத்தைக் கவர்கிறது. அதுபோலப் பாடல்களும் தனது வடிவம், பொருள், உணர்ச்சி, உவமை அழகு போன்ற பண்புகளால் மனத்தைக் கவருகின்றன. இதனையே பாரதியும் 'நெஞ்சுக் கனல் மணக்கும் பூக்கள்' என்று கூறுகிறார்.

அடுத்த பாடலில்,

> தின்னு கின்ற வெல்லம்போலத்
> தித்திக் கின்ற பாடலாம்[25]

என்று அவர் கூறுவது இனிமையானதாகும். வெல்லம் இனிப்பதுபோலப் பாடலும் இனிக்கிறது. குழந்தைப் பாடலுக்கேற்ப எளிய உவமையை வழங்கும் ஆசிரியரின் அறிவுத்திறம் பாராட்டிற்குரியது.

காலைப் பொழுதைப் பாடும்பொழுது,

> பொன்னை உருக்கி நீராக்கிப்
> பூமியில் எங்கும் பொழிவதைப் போல்
> என்னை மயக்கிச் சூரியனும்
> எங்கும் தங்கத் தொளிசெய்தான்[26]

சூரிய ஒளி பொன்னை உருக்கிவளர்த்ததுபோல் உள்ளதாக ஆசிரியர் கூறும் திறம் பாராட்டிற்குரியது.

வெண்ணிலாவைப் பல இடங்களில் வியந்து பாடுகிறார்.

> அண்ணா! அண்ணா! இங்கே வா!
> ஆகாயத்தில் அங்கே பார்!
> காணாம போன பந்திற்குக்
> கவலைப் பட்டு நின்றாயே!
> ஆரோ எறிந்த வெண்பந்து
> ஆகாயத்தே நிற்குதுபார்
> ஏனோ எவரும் தேடவில்லை
> எடுத்து வைப்போம் நம்வீட்டில்
> உரிய பையன் தேடி வந்தால்
> உன்னைக் கேட்டுக் கொடுத்திடுவேன்[27]

என்ற இனிய பாடலில் வெண்ணிலாவைப் பந்து என உவமித்துக் கூறுகிறார். இப்பாடல் ஓசையாலும், கருத்தாலும், உவமையாலும் உள்ளம் கவருகிறது.

மேலும், வெண்ணிலாவைப் பற்றிப் பல இடங்களில் பல்வேறு உவமைகளைக் கூறுகிறார்.

வட்டி போன்ற நிலா[28]

வட்டமான வெள்ளைக் காசு[29]

அழுக்குப் பிடிச்ச தேய்ஞ்ச காசு[30]

மேகம் உன்றன் போர்வையா

மீன்கள் உன்றன் கோர்வையா?

தேக மெல்லாம் கறுத்துப் போச்சுத்

தினமும் திரிதல் நேர்மையா?[31]

சிறு குழந்தை நிலாவே[32]

என்று புதிய உவமைகளைக் கூறிக் கற்போரைப் பரவசப்படுத்துகிறார் சிறு குழந்தைபோன்ற நிலா என்பதும், இளைச்சுபோன நிலா என்பதும் பாராட்டிற்குரிய உவமைகள் ஆகும்.

இரண்டு கண்கள் நீலப் பூ[33]

என்று ஆசிரியர் கூறுவது அருமை. நீல விழிகளை நீலப் பூவாகக் கூறுகிறார். இதுபோன்ற பல இனிய உவமைகளை ஆசிரியர் நூலெங்கும் கையாண்டிருப்பது பாராட்டிற்குரியது.

சிறுவர் இலக்கியத்தில் முற்போக்குச் சிந்தனைகள்

சிறந்த நூலாகிய "சிறுவர் இலக்கியம்" என்ற நூலைப் படைத்துத் தந்து சிறந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். அவற்றைப் பின்பற்றினால் மாணவர்கள் முன்னேறி உயர்வடைவார்கள் என்பது உறுதி. இங்கே அவரது நற்சிந்தனைகளைக் காண்போம்.

சிறந்த பண்புகளைப் பெற வேண்டும் என்ற நோக்கில் அவர் பாடியுள்ள பாடல். . .

சின்னஞ் சிறிய பருவத்தில்
சிறந்த பண்பைக் கற்றுக்கொள்
அன்னை உன்னை வளர்த்திடவே
அன்பை முதலாய் வைத்திருந்தார்
உன்னை வளர்த்த தாயன்பு
உலகை வளர்க்க உதவிடுமே
முன்னே மனத்தில் அன்பையே
முகத்தில் இன்சொல் வந்துவிடும்
இன்சொல் வாய்க்கே அழகாகும்
ஈகை கைக்கே அழகாகும்

உன்சொல் உண்மைக்கு இடமானால்
உனக்கு நன்மை பல உண்டாம்
அன்பினைக் கொண்ட உன்மனதில்
அறிவும் முற்சியும் உண்டானால்
இன்பம் நல்கும் பொருளெல்லாம்
எளிதில் உனக்கு உண்டாமே34

எளிய சிந்தனைகள், சிறுவர்க்கேற்ற சிந்தனைகள், பிள்ளைகளை உருவாக்கும் சிந்தனைகள் சின்ன வரிகளில், தெள்ளத்தெளிவாக ஆசிரியர் கூறுவது பாரட்டிற்குரியது.

நானும் நீயும் கூடி உண்ணும்
நல்ல நண்பும் இன்பமும்
வான மீதில் அமுதம் உண்ணும்
வானவர்க்கும் இல்லையே[35]

நல்ல நண்பனோடு சேர்ந்து பேசுவதும், பழகுவதும் சேர்ந்து உண்ணுவதும் ஆகிய இன்பம் வானவர்க்கும் கிடைக்காத ஒன்று என்று ஆசிரியர் கூறுவது அருமையான சிந்தனையாகும்.

அறிவு விளக்கே சிறந்த விளக்கு அதனை ஏற்றிக்கொள் என்று ஆசிரியர் கூறும் சிந்தனை உயர்ந்த சிந்தனையாகும்.

அறிவு விளக்கு இருந்தால்
ஆக்கம் பலவும் உண்டாம்
வறுமை என்பது இல்லை
வாழும் வழிகள் தெரியும் [36]

அறுகம்புல் மண்ணரிப்பைத் தடுக்கிறது" என்ற அறிவியல் சிந்தனையை ஆசிரியர் அறுகம்புல்லைப் பற்றிப் பாடும் பொழுது கூறுகிறார்.

தாவித் தாவி வேரூன்றித்
தழைத்து நிற்கும் சிறுபுல்லே!
மேவும் மழையால் களையாமல்
மேதினி தனையும் காக்கின்றாய்! [37]

அன்பு, ஊக்கம், கல்வி, உண்மை இவை நான்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் வேண்டும் என்று கருதி 'எது வேண்டும்'? என்று ஒரு பாடல் பாடியுள்ளார்.

அன்பு வேண்டுமா? – தம்பீ
அழகு வேண்டுமா?
அன்பைப் பெற்றால் அழகுவரும்
அன்பு வேண்டுமே! அகத்தில்
அன்பு வேண்டுமே!

ஊக்கம் வேண்டுமா? – தம்பீ!
உடைமை வேண்டுமா?
ஊக்கம் பெற்றால் உடைமை வரும்
ஊக்கம் வேண்டுமே! – அகத்தில்
ஊக்கம் வேண்டுமே!
கல்வி வேண்டுமா? – தம்பீ
செல்வம் வேண்டுமா?
கல்வி பெற்றால் செல்வம் வரும்
கல்வி வேண்டுமே; மனதில்
கல்வி வேண்டுமே!
உண்மை வேண்டுமா?– தம்பீ
திண்மை வேண்டுமா?
உண்மை பெற்றால் திண்மை வரும்
உண்மை வேண்டுமே! எனக்கு
உண்மை வேண்டுமே!
அன்பும் ஊக்கமும் கல்வியும்
உண்மையும் இருந்தால்
பின்பு தோன்றும் யாவையும்
நல்லவே தோன்றும்
இன்பம் எய்திட விரும்புவோர்
யாவரும் மனத்தில்
அன்பை ஊக்கத்தைக் கல்வியை
உண்மையை அடைக![38]

மேற்கண்ட பாடல் மூலம் சிறந்த சிந்தனைகளை இளம் மனத்தில் விதைக்கிறார் அடிகளாசிரியர் நாடு முன்னேற வேண்டும், மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்று விரும்புவதால் அரிய முற்போக்கான சிந்தனைகளை வளர்ப்பதிலே முன்நின்றார்.

நாடு, மொழி, கல்வி, பண்பு, அன்பு முதலியவற்றை முழுமூச்சாகப் பாடும் ஆசிரியரின் சிந்தனை வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.

நல்லதமிழ் நாட்டினிலே
நாங்கள் உதித்தோம்
நாட்டினுக்கு நன்மைசெய
நாங்கள் மதித்தோம்!
எல்லோருக்கும் நன்மைகளை
நாங்கள் எண்ணுவோம்!
செந்தமிழைச் செம்மையுடன்
நாங்கள் பயில்வோம்
சீர்த்தியான மொழிகளையும்
நாங்கள் பயில்வோம்

எந்தமிழில் கலைவரை
நாங்கள் உழைப்போம்
இரவுபகல் அலைகளையே
நாங்கள் இழைப்போம்[39]

என்று நாட்டைப் பற்றியும், மொழிபற்றியும் ஆசிரியர் கூறுவது மதிக்கத்தக்கது. சிறுவர் இலக்கியம் தமிழகம் முழுவதும் பரவவேண்டும். இளைஞர் உலகம் அதனால் பயன்பெற வேண்டும்.

முடிவுரை

1. அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியம் ஒரு சிறந்த இளைஞர் காப்பியம் ஆகும்.
2. ஆசிரியர் வரலாறு மூலம் அவர் முயன்று படித்த முன்னேறியிருப்பது தெளிவாகிறது.
3. சிறந்த இலக்கிய நயமும் பொருள் நயமும் படைத்த தன்னேரில்லாத் தமிழ்ப் பனுவலாகச் சிறுவர் இலக்கியம் திகழ்கிறது.
4. ஒன்பான் சுவைகளும் சிறுவர் இலக்கியத்தில் காணப்படுகின்றன.
5. சிறந்த உவமைகளைக் கொண்டு ஆசிரியர் தாம் கூற வந்த கருத்துகளைத் தெரிவிக்கிறார்.
6. நல்ல சிந்தனைகள், சிறுவர் இலக்கியத்தில் காணப்படுகின்றன. நாடு, மொழி, கல்வி, பண்பு முதலியவற்றின் அருமையை உணர்த்தும் அரிய சிந்தனைகள் ஆங்காங்கு வெளிப்படுகின்றன.

மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் படைக்கப் பட்டுள்ளது. மேலும் அவர்பால் சிறந்த பண்புகளை உருவாக்கும் நோக்கோடு "சிறுவர் இலக்கியம்" படைக்கப்பட்டுள்ளது. நூல் முழுவதும் ஆசிரியரின் புலமைத்திறமும் அரிய உழைப்பும் வெளிப்படுமாறு திகழ்கிறது.

சான்றெண் விளக்கம்

1. தமிழ்விடு தூது, கழகப்பதிப்பு, கண்ணி எண்.151.
2. திருமூலர், திருமந்திரம்.
3. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பாடல்-1, ப-2.
4. மேலது, பா.எண்.1, ப.2.
5. மேலது, பா.எண்.1, ப.2.
6. மேலது, பா.எண்.3, ப.5,6.

7. ஔவையார், தனிப்பாடல்கள், முல்லை நிலையம், 9, பாரதிநகர் முதல்தெரு, தி.நகர், சென்னை-17.
8. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பாடல்-4, ப.7.
9. மேலது, பா.எண். 15, ப.21.
10. மேலது, பா.எண்.48, ப.59.
11. மேலது, பா.எண்.100, ப.110.
12. மேலது, பா.எண்.105, ப.117-118.
13. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல், நூற்பா-1.
14. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பாடல் எண்.84, ப. 93,94.
15. மேலது, பா.எண். 41, ப.52.
16. மேலது, பா.எண்.52, ப.63.
17. மேலது, பா.எண்9, ப.43,44.
18. மேலது, பா.எண்.68, ப.79.
19. மேலது, பா.எண்.30, ப.36-37.
20. மேலது, பா.எண்.85 ப.95.
21. மேலது, பா.எண்.44, ப.54.
22. மேலது, பா.எண்.16, ப.22,23.
23. பாரதியார் கவிதைகள்.
24. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா.எண். 4, ப.7.
25. மேலது, பா.எண்.5, ப.8.
26. மேலது, பா.எண்.7, ப.10.
27. மேலது, பா.எண்.11, ப.16.
28. மேலது, பா.எண்.10, ப.15.
29. மேலது, பா.எண்.9, ப.13.
30. மேலது, பா.எண்.12, ப.17.
31. மேலது, பா.எண்.13, ப.18.
32. மேலது, பா.எண்.14, ப.19.
33. மேலது, பா.எண்.82, ப.91.
34. மேலது, பா.எண்.108, ப.122.
35. மேலது, பா.எண.103, ப.115.
36. மேலது, பா.எண்.91, ப.100.
37. மேலது, பா.எண்.83, ப.92.
38. மேலது, பா.எண்.34, ப.42,43.
39. மேலது, பா.எண்.18, ப.25.

இயல் - 3

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் இயற்கை

முன்னுரை

அடிகளாசிரியர் இயற்கையின் மேற்கொண்ட பற்றினால் இயற்கையோடு கூடிய வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றார். ஆதலால் அவரது சிறுவர் இலக்கியப் பாடல்களில் காணப்படும் இயற்கையை ஆராய இவ்வியல் முனைகின்றது.

சிறுவர்கள் இயற்கையை விரும்பி ஏற்று மகிழ்வதாலும், இயற்கை அவர்களுக்குத் தொகுத்து வைத்துள்ள செல்வங்களை அடிகளாசிரியர் நோக்கில் ஆய்ந்திடவும் இவ்வியல் விரும்புகின்றது.

இயற்கையின் எழிலோவியமான நிலவு சிறுவர்களின் மகிழ்ச்சி மிக்கத் தோழன் என்பதையும் பிற இயற்கைப் பொருட்களோடு சிறுவர்களுக்கு உள்ள தொடர்பையும் இவ்வியல் எடுத்துக்காட்டுகின்றது.

அடிகளாசிரியரின் இயற்கைப் பற்று

அடிகளாசிரியர் இயற்கையின்மீது அளவற்ற காதல் கொண்டவர். தாம் வாழும் சூழல் இயற்கையானதாய் இருந்தால் மனமும் உடலும் நலமாய் விளங்கும், அறிவும் துலங்கும் அத்துடன் திறனும் விளங்கும் என்ற கொள்கையில் சிறிதும் மாறுபாடு இல்லாதவர். அவரின் இந்த இயற்கைக் காதலின் அளவை அவரது, “எங்கள் ஊர்” என்ற உரைநடை இலக்கியத்தில் கண்டு தெளியலாம்.

இயற்கையின் மடியில் வாழ வேண்டும் என்றே குறிஞ்சியும் மருதமும் குலவி மகிழும் தமது சொந்த ஊரான குகையூரை விட்டு அடிகளாசிரியர் ஒரு போதும் வெளியூர் செல்ல விரும்ப மாட்டார். இயற்கையாய் விளைந்த பயிர்களை விறகு அடுப்பில் மண்கலங்களில் சமைத்து உண்பதையே கடைப்பிடிப்பவர். நாகரிகப் புதுமை மிகுந்த தற்காலத்தில் இவரது இல்லம் மட்டும் மண்ணால் ஆன சுவர்களைக் கொண்ட வைக்கோல் வேய்ந்த கூரை வீடாகத்

தான் உள்ளது. அவ்வீடும் ஒருபுறம் திறந்த நிலையில் முற்றம் வைத்த வீடுபோல் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தம் மக்கள் மேன்மையான பணிகளில் இருந்தாலும், அடுக்குமாடி இல்லங்களில் வாழ்ந்தாலும் இயற்கைப் பற்றுமிக்க அடிகளாசிரியர் கூரை வீட்டையே கயிலாயமாகக் கருதி வாழ்ந்து வருகின்றார்.

அடிகளாசிரியர் முதுமையால் தளர்வடைவதற்கு முன்பு காலை உணவு உண்பதற்குள் தம்நிலத்தில் கால் காணி அளவிற்குக் களைக் கொத்திவிட்டு, மாடுகளுக்குப் புல்லும் சேர்த்துவிடுவார். மண்ணில் மனிதன் வேலை செய்யும்போதுதான் பூமித்தாயின் மடியில் அவன் கொஞ்சி விளையாடுவதாகப் பூமித்தாய் பூரிப்படைகின்றாளாம். எனவே, நான் எப்போதும் என் தாய்த்தமிழ் மண்ணாகிய பூமித்தாய் மடியில் கொஞ்சி விளையாட வேண்டும் என்று அடிகளாசிரியர் கூறுவார்.

காலைப் பொழுதில் எழுந்து
கமலக் குளத்தைப் பாரு
மாலைப் பொழுதில் சென்று
மலரும் முல்லையைப் பாரு[1]

என்று அடிகளாசிரியர் பாடியுள்ளார். இதன்வழி காலைப் பொழுதில் எழும் வழக்கத்தை ஓர் இயற்கை இரசனையால் தூண்டுகின்றார்.

கதிரவன் வருவதற்கு முன்பே தாமரைக் குளத்திற்குச் சென்று விட்டால், கதிரவன் எழும் நேரதில் இரவில் குவிந்திருக்கும் தாமரை மெல்ல மெல்ல விரிந்து மலரும். இந்த இயற்கை அழகை பலநாள் இரசித்து இன்பம் கண்டவர் அடிகளாசிரியர். அதனாலே சிறுவர்களைக் காலைப் பொழுதில் எழுந்து சென்று, தாமரைக் குளத்தைக் காணச் சொல்கின்றார்.

மாலையில் இருள் கவியும் நேரத்தில் முல்லை மலர் விரியும். சிறுவர்களுக்குக் கண்பார்வை கூர்மையானது. எனவே, இருள் கவியும் நேரத்திலும் முல்லைமலர் ஒவ்வொரு இதழாக விரிவதைக் கண்டு இரசிக்க அவர்களால் இயலும். ஆகையால்தான் மாலையில் மலரும் முல்லைப் பூவைக் காணச் சொல்கின்றார்.

மலர் மலர்வதைக் காண்பது போன்ற சிறு சிறு இன்பங்கள் இயற்கையின்மீது அதிக அளவு பற்றுக் கொள்ளச் செய்கின்றன.

இன்றுபறித்துச் சமைத்த கறியும்
இன்று கடைந்த வெண்ணெயும்

நன்கு குற்றும் அரிசிச் சோறும்
நல்ல அமுதம் ஆகுமே[2]

என்று அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இயற்கையோடு இயைந்த இந்த உணவு வகைகளைச் சலிப்பின்றி உண்டு வந்ததால்தான் தொண்ணூற்று ஒன்பது அகவையிலும் அடிகளாசிரியர் திடமாக இருக்கின்றார். எனவேதான் இயற்கையோடு இயைந்த உணவு வகைகளை 'நல்ல அமுதம்' என்று அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

அடிகளாசிரியர் நோய் வராமல் தடுக்கவும், நோய் வந்தால் போக்கவும் இயற்கை மருத்துவமே உகந்தது என்ற கருத்துடையவர். அவர்தம் செயல்கள் யாவும் இயற்கை சார்ந்தே நிகழ வேண்டும் என்று விரும்புவார். அடிகளாசிரியரைப் போன்று இயற்கையின் மீது பற்றுக் கொண்டவர்கள் ஒருசிலர் இருந்தாலும் மக்களும் குழந்தைகளும் நோய்களில் இருந்து விடுபட்டு விடுவார்கள்.

இயற்கை என்பதை இறைநிலையாகவும் அடிகளாசிரியர் கருதுகின்றார். அதனாலே இயற்கையாகிய கடவுளை,

எங்கும் கடவுள் இருக்கிறது
இதனால் உலகம் நடக்கிறது[3]

என்று குறிப்பிடுகின்றார்.

கடவுள் என்பது ஆணா, பெண்ணா, உயர்திணையா, அஃறிணையா என்று அறியாத நிலையில் உள்ளதால் 'கடவுள் இருக்கிறது' என்ற படர்க்கை ஒன்றன்பாலாய்க் கடவுளைப் படைத்துக் காட்டியுள்ளார். இயற்கையும் படர்கையாய்ப் பரந்து விரிந்துள்ள ஒன்றாகும். அதுவே உலகத்தையும் நடத்துகின்றது. ஆகவே இயற்கையே கடவுள். அதனால் அடிகளாசிரியர் இயற்கையிடம் அளவிலாத பற்றுக் கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது.

மேலும், அடிகளாசிரியர் இயற்கையிடம் பற்றுக் கொண்டிருக்க இன்னொரு காரணத்தையும் கூறுகின்றார்.

மாடி வீட்டில் வாழ்பவரே
மனத்தில் உமக்கு மகிழ்வுண்டோ
மணலால் வீட்டைக் கட்டுகிற
மகவின் மகிழ்ச்சி தனைப் பாரீர்[4]

என்று கூறுவதன் மூலம் இயற்கையால் தான் மனமகிழ்ச்சி நிலைக்கும் என்கின்றார். மனிதன் தேடி அலைகின்ற இன்பம் இயற்கையில்தான் உள்ளது. மனிதனோ அதை அறியாமல் மாடி

வீட்டில் இருந்து கொண்டு வருத்தமாகவே எப்போதும் வாழ்கின்றான்.

இயற்கை அழுதால் உலகம் செழிக்கும்
மனிதன் அழுதால் இயற்கை சிரிக்கும்[5]

என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார். இக்கூற்றை எதிரொலிப்பதாகவே மாடிவீட்டில் வாழ்பவரே உமக்கு மனத்தில் மகிழ்ச்சி உள்ளதா? என்று அடிகளாசிரியர் வினவுகின்றார்.

இன்பமும் துன்பமும் இயற்கை. இறைவனும் இயற்கை என்பதையெல்லாம் மறந்து இயற்கைச் சூழலை மனிதன் அழித்து வருவதைக் கண்ட அடிகளாசிரியர் மனம் வருந்தி,

காற்றை நன்றாய் வைக்கக்
கற்றுக் கொள்ள வேண்டும்
ஏற்ற நல்ல தொண்டுள்
இதுவே முதன்மைத் தொண்டாம்[6]

என்று பாடியுள்ளார். மனிதனின் முதல் தொண்டாக இயற்கைக் காற்றைக் காத்தல் வேண்டும் என்ற வலியுறுத்துகின்றார்.

இயற்கையில் பற்று மிகுந்த அடிகளாசிரியர் தமது சிறுவர் இலக்கியத்திலும் இயற்கையின் இன்றியமையாமையைச் சிறுவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் இயற்கையுடன் இயைந்து வாழ வேண்டும் என்ற தம் ஆவலை வெளியிட்டுள்ளார்.

அடிகளாசிரியர் குழந்தைகளைத் தெய்வம் என்று கூறாமல் தெய்வத்திற்கு நிகரான இயற்கையாய்க் காண்கின்றார். "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்பது பழமொழி. இயற்கையும் தன்னைக் கொண்டாடும் மனிதனுக்குக் குழந்தையாய் மாறி அழகாகக் காட்சியளிக்கின்றது.

இதோ எந்தன் தெய்வம் – முன்னாலே
நான் ஒரே ஒரு புன்னகையில் – கண்டேனே[7]

என்ற கவிஞர் கண்ணதாசன் அடிகளும்,

உலகப் பொருள் எவற்றும் – முருகாநீ
ஒளிபெற்று வாழ்ந்திடினும்
இலகும் இளைஞரிடம் – முருகா
என்றும் இருப்பாயே[8]

என்ற அடிகளாசிரியரின் அடிகளும் குழந்தையைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றன.

அடிகளாசிரியரின் நோக்கில் இயற்கையும் சிறுவர்களும்

இயற்கையை இரசிக்கின்ற அனுபவிக்கின்ற மனநிலை சிறுவர்களிடம் மிகுந்து காணப்படுகின்றது. இயற்கையின் எழிலோவியமாகத் திகழும் பூமிக்கு அருகில் உள்ளது நிலவு என்னும் துணைக்கோள். இத்துணைக்கோள் மனிதர்களின் வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது.

நிலவின் ஒவ்வொரு அசைவும் மனித வாழ்க்கையுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதை அறிவியல் அறிஞர்கள் வெளிபடுத்திக் காட்டியுள்ளனர். நிலவுக்கு ஏன் மனித வாழ்க்கையில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது என வினவினால், நிலவு என்னும் இயற்கைவடிவம் மனிதன் சிறுவனாக இருந்தபோதே அவனை ஆட்படுத்திக் கொண்டதே ஆகும்.

மனிதன்பால் அருந்தும் நிலையிலிருந்து பழம், சோறு முதலிய திட உணவுகளை உட்கொள்ளத் தொடங்கும்போதே அவனுக்கும் நிலவுக்கும் தொடர்பு, உறவு, பாசம் தொடங்கிவிடுகின்றது. நிலாச்சோறு ஊட்டப்படுகின்றது நிலா விளையாட அழைக்கப்படுகின்றது. அம்மா, மாமா என்ற உறவு ஏற்படுகின்றது.

நிலாவில் பாட்டி வடை சுடுவதாகக் கற்பனை உண்டாகின்றது. நிலாவில் முயல்குட்டி இருப்பதாக உருவகம் உண்டாகின்றது. உலோகத்தைப் பற்றித் தெரியாத வயதிலே "வெள்ளி நிலா" தெரிகின்றது இவ்வாறு இயற்கையும் சிறுவர்களும் என்று உண்டான ஒப்புமை மரபில் நிலாவே முதலிடம் பிடிக்கின்றது. ஆதலால் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களில் நிலாவைப் பற்றிய கற்பனைகளை அறிவோம்.

அடிகளாசிரியர் குறிப்பிடும் நிலாக்கள்

இயற்கையில் பற்றும் சிறுவர்களிடம் அக்கறையும் கொண்ட அடிகளாசிரியர் பல்வேறு வகையான நிலாக்களைச் சிறுவர்களுக்குக் காட்டி மகிழ்கின்றார். அவற்றுள் சிலவற்றை அறிவோம்.

குண்டு நிலா

முழு நிலவு நாளுக்குப் பிறகு வருகின்ற நிலா மிகப்பெரியதாகக் குண்டாக இருக்கும். இதனைக் குழந்தைகள் "குண்டாஞ்சட்டி" நிலா என்றும் அழைப்பர் இந்தக் குண்டு நிலாவை வானில் கண்டு மகிழ்ந்த குழந்தைகள்,

குண்டு குண்டு நிலாவே
　　　　கூட வந்து குலாவே
கண்டு கண்டு மதிப்போம்
　　　　கையைத் தட்டிக் குதிப்போம்[9]

என்று ஆடிப்பாடுகின்றன.

நிலவு பெரியதா என்றால் இல்லை. மனிதன் சிறுவனாக இருப்பதாலே நிலவு பெரியதாகத் தெரிகின்றது. அத்துடன் சிறுவர்களுக்கு இயற்கையிடம் அதாவது நிலாவிடம் எத்தனைப் பிரிவு உள்ளது என்பதை இந்த அடிகள் எடுத்துக் கூறுகின்றன.

எந்தத் தெருவில் ஆடினாய்?
　　　　இந்த அழுக்கைக் கூடினாய்?
சொந்த மாகக் கருதுவோம்
　　　　அம்மா உனக்கு இல்லையா?
சும்மா எங்கே திரியுறே?
　　　　சோறு எங்கே உண்கிறே?[10]

என்று கேள்விமேல் கேள்விகேட்டு நிலாவிடம் தங்களுக்கு உள்ள பரிவையும் பாசத்தையும் காட்டுகின்றன. முழுநிலா நாளுக்குப் பிறகு தோன்றுகின்ற நிலா பெரியதாகவும், மஞ்சள் நிறமாகவும் தோன்றுவதால் அதிலுள்ள கரும்படலம் குழந்தைகளின் கண்ணுக்கு அழுக்காகத் தெரிகின்றது.

நிலாவுக்குக் குளிப்பாட்டி விட அம்மா இல்லையோ என்ற ஐயமும், நிலா தாயில்லாப்பிள்ளை என்ற அனுதாபமும் அந்த இளம் உள்ளங்களில் எழுவதாகக் கற்பனை செய்துள்ள அடிகளாசிரியரின் நயம் நினைந்து நினைந்து மகிழ்வதற்கு உரியதாகும்.

வட்டமான வெண்ணிலா

சிறுவர்கள் பார்வைக்குத்தான் சிறுவர்களே தவிர அறிவில் பெரியவர்கள். அதனால்தான் முருகனைத் தகப்பன்சாமி என்று தமிழர்கள் அழைக்கின்றனர். வடமொழியாளர்கள் குமரகுரு என்று வணங்குகின்றனர்.

இங்கே அறிவிற் சிறந்த குழந்தைகள் நிலாவைக் காண்கின்றனர். தங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விடுகின்றனர். அவர்களது கற்பனை காலாய் பாய்ந்து காற்றில் பறக்கின்றது. அவர்களின் அறிவுத் திறத்தின் உவமை கூட அல்ல உருவக மழையே பொழிகின்றது.

வட்டமான நிலவைப் பூனைப் பார்த்தால் பால் என்று எண்ணுமாம், அதோடு அல்ல அந்தப் பாலை நக்கிக் பார்க்கக் குதித்துக் குதித்து முயலுமாம்.

ஏழை வீட்டுக் குழந்தைகள் அது தோசை என்று கருதி கையை நீட்டி உண்ணத் தருமாறு கேட்பார்களாம். செல்வர் வீட்டுப் பிள்ளைகள் வெள்ளிக்குடை என்று எண்ணி விலைக்கு வாங்கித் தரச் சொல்வார்களாம்.

படிக்கத் தவறிய மாணவர்கள் தேர்வில் மதிப்பெண்ணாகப் பெற்றுவிடக் குண்டு (சுழி) என்று எண்ணி வீட்டிற்குள் ஓடிப்போய் மறைவார்களாம். கடவுளாகிய குழந்தைக் கண்ணன் நிலாவை வெண்ணெய்க் கட்டியென்று எண்ணி அது வேண்டும் என்று கதறி அழுவானாம்.

தங்கம்போன்ற நிறமுடைய பப்பா (சிறுமி) பார்த்துவிட்டு அழகான அந்தப் பூவைத் தலையில் சூடிக் கொள்ள வேண்டும், கொண்டு வாருங்கள் என்று கேட்குமாம்.

இப்படிப் பலரும் தங்கள் கற்பனைக் கேற்றபடி நிலவை உரிமை கொண்டாடும் போது, நல்லதம்பி யான பொதுவுடமையைக் கருதுகின்ற அந்தச் சிறுவனோ,

> இந்த நிலா நாட்டிற்காக ஏற்றுகின்ற விளக்காகும். இதனை உங்கள் சுயநலத்தோடு நீங்களே வைத்துக் கொள்ள விரும்புகின்றீர்கள். நாட்டிற்கு உதவுகின்ற எதையும் நம்முடைய நன்மைக்காக நம்வீட்டில் வைத்துக் கொள்ளும் தன்மை வெறுக்கத் தக்கதாகும்

என்று அறிவுரை கூறுகின்றான்.

எவ்வளவு அழகான கற்பனை, எத்தனை உயர்வான உருவகங்கள். இறுதியில் சிறுவர்களுக்குப் புரிகின்ற வகையிலான நீதி. இப்பாடல் ஒன்றே இயற்கையும் சிறுவர்களும் இணைகின்ற சூழலைத் தன்நோக்கில் காண்கின்ற அடிகளாசிரியன் உயர்ந்த உளப்பாங்கினை வெளிப்படுத்தவல்ல ஒன்றாகத் திகழ்கின்றது அந்தப் பாடல் வருமாறு.

வட்ட மான வெண்ணிலா
வானில் வந்து நின்றது
குட்டிப் பூனை பாலென்றெண்ணிக்
குதித்து நக்கப் பார்த்தது

வறிய சிறிய குழந்தைகள்
வந்து வானை நோக்கின
சிறிய தோசை என்றுகருதிச்
சிரித்துக் கையை நீட்டின

செல்வர் வீட்டுக் குழந்தைகள்
சின்ன வெள்ளிக் குடையிது
சொல்லு கின்ற பணத்தைத்தந்து
சுருக்கில் வாங்கு என்றன

சுற்றி லாத மாணவர்
கலைநி றைந்த மதியினை
உற்ற தேர்வில் குண்டெடன்றென்னி
ஓடி வீட்டுள் மறைந்தனர்

கண்ணன் மதியைக் கண்டனன்;
கட்டி வெண்ணெய் என்றனன்;
விண்ணிலுள்ள வெண்ணெய்க்கட்டி
வேண்டும் என்று கத்தினான்

தங்கப் பாப்பு கண்டது;
தலையில் அணியும் பூவிது
இங்கு கொண்டு வந்துகொடுங்கள்
எனக்கு வேண்டும் என்றது

நல்ல தம்பி கண்டனன்
நாட்டிற்கு ஏற்றும் விளக்கிது
சொல்லு கின்ற சுயநலத்தால்
சூழ்ந்து நின்ற விரும்புறீர்.

நாட்டிற்கு உதவும் பொருளினை
நமது நன்மை கருதியே
வீட்டிற் கொணர்ந்து வைத்திடில்
வெறுக்கத் தக்கது என்றனன்"

நிலவின் பயணம்

நிலா எங்கோ விரைந்து போகின்றது. குழந்தை அதைப் பார்த்து எங்கே போகிறாய் என்று கேட்டு விட்டு, நிலா போவதற்கான காரணங்களைத் தானே கற்பனை செய்து கூறுகின்ற அழகை அடிகளாசிரியர் ஒரு பாடலில் வடித்துள்ளார்.

நிலவே எங்கள் வீட்டுக் குட்டிநாய் குரைப்பதைக் கண்டு அச்சப்பட்டு மலைமேல் ஏறிக் கொள்ளப் போகின்றாயா? மலையில் கரடி உன்னைப் பார்த்து உறுமினால் நீ மறுபடி எங்கே போவாய்? கன்றும் பசுவும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற காட்டை நோக்கிப்

போவாயா? காட்டிலும் நரிகள் ஊளையிட்டால் அதற்குப் பயந்து கடலுக்குப் போவாயா? கடலும் உன்னைக் கண்டால் ஆரவாரத்துடன் சத்தம் போட்டுக் குமுறுமே! வானத்திலே இருக்கலாம் என்றாலும் நாங்கள் விடுகின்ற இராக்கெட்டுகள் உன்னை வந்து வந்து மோதுமே?

ஆகவே நிலாவே நீ துன்பத்துடன் அங்குமிங்கும் அலையாமல் அமைதியாக வாழவேண்டுமானால் ஆற்றின் கரையினில் அமைதியாக விளங்குகின்ற எங்கள் வீட்டிற்கு வந்து தங்கிக்கொள் என்று குழந்தை கூறுகின்றது. இதிலிருந்து குழந்தைகள் அடுத்தவர் துன்பமுற்றால் அவர்களுக்கு உதவும் எண்ணம் மிகுந்தவர்கள் என்பதையும் அடிகளாசிரியர் மிக அழகாக உணர்த்தியுள்ளார். மேற்கூறிய அரிய கருத்தினை உணர்த்தும் பாடல் வருமாறு:

வட்டி போன்ற நிலாவே
வானில் எங்கே போகிறாய்?
குட்டி நாயி குரைச்சுதென்று
குன்றை நோக்கிப் போறியா?
குன்றில் கரடி உறுமினால்
குதிச்சுச் செல்லும் இடமெது
கன்றும் பசுவும் களித்திருக்கும்
காட்டை நோக்கிப் போவியா?
காட்டில் நரிகள் ஊளையிடின்
கடலை நோக்கிச் செல்வாயா?
கடலும் உன்னைக் கண்டவுடன்
கத்திக்கத்திக் குமுறுமே
வானத் தின்கண் நிலைத்து வாழின்
வம்பு வந்து சேருமே
வானவெளி ராக்கெட் எல்லாம்
வந்து வந்து மோதுமே
அமைதியான நல்லிடத்தை
அடைந்து கொள்ள முயன்றிடு
ஆற்றங்கரை எங்கள் வீடு
அமைதி வாழ்வைத் தந்திடும்[12]

மேற்குறித்த பாடலுக்கு ஏற்றவாறு அடிகளாசிரியரும் பணி ஓய்விற்குப் (1970) பின்னர் நகரங்களில் வாழ விரும்பாமல் தமது சொந்த கிராமமாகிய குகையூரில் வந்து தங்கி அமைதியான வாழ்வை இன்றளவும் வாழ்ந்து கொண்டுள்ளார்.அமைதியான வாழ்வை மேற்கொண்டதால்தான் அரியபல தமிழ்ப்பணிகளை நிகழ்த்தியும் வருகின்றார்.

3.3 வானத்து மீன்கள்

வானத்தில் உள்ள விண்மீன்கள் சிறுவர்களைக் களிப்படைய வைக்கின்றன. அவை அவர்களுக்கு வலையில் சிக்காத மீன்களாகத் தெரிகின்றன. அடிகளாசிரியர் விண்மீன்களை மக்களுக்கு அறிவை வழங்கி உதவுவதற்காகவே அவை விண்ணில் தங்கியுள்ளன என்று கூறுகின்றார்.

எண்ணிறந்த விண்மீன்களில் இருபத்து ஏழு விண்மீன்கள் மட்டும் முக்கியத்துவம் கொண்டு விளங்கின்றன. இந்த இருபத்தேழு மீன்களையும் நிலா ஒருமுறை கடந்து சென்றால் நமக்கு 'மாதம்' கிடைக்கின்றது. சூரியன் இவற்றை ஒருமுறை கடந்து சென்றால் 'ஆண்டு' கிடைக்கின்று. இவ்வாறு காலத்தைக் கணக்கிடுவதற்கு இயற்கையில் அமைந்த கருவியாக விண்மீன்களைச் சிறுவர்களுக்கு அடிகளாசிரியர் அறிமுகப்படுத்துகின்றார்.

மேற் கருத்துகளை உணர்த்தும் பாடல் வருமாறு:

வானில் விளங்கும் மீன்கபே
வலையில் சிக்கா மீன்களே
ஞானம் தன்னை மண்ணிற்குதவ
விண்ணில் விளங்கும் மீன்களே
இருபத் தேழாய் வானில்விளங்கி
எழிலை செய்யும் மீன்களே
இருபத் தேழில் திங்கள்
நடந்தால் எமக்குக்கிடைக்கும் மாதமே.

இருபத் தேழில் ஞாயிறு
நடந்தால் எமக்குக்கிடைக்கும் வருடமே
மாதம் வருடம் என்னுமிரண்டால்
மக்கள் காலம் கணிப்பரே.

ஓதும் இரண்டும் காலம்கணிக்க
உதவி செய்யும் கருவியே;
ஆதலாலே வான மீன்கள்
அறிவை நல்கும் கருவியே[13]

மேற்பாடல் இனிய சந்தத்துடன் பாட ஏற்றதாக உள்ளது.

விண்மீனின் இயல்புகளைச் சிறுவன் தன்தம்பிக்குக் கூறுவதாக வருகின்ற பாடலும் உவமைச் சிறப்புடன் உவகை பொங்க உள்ளது.

நீலவானில் உள்ள விண்மீன்கள் நீலக் கடலுள் விளையும் முத்துடன் ஒத்திருப்பதையும், கண்ணைச் சிமிட்டிக் கருத்துரைக்கும் நண்பரைப்போல் விண்மீன்கள் மின்னுவதாயும் அடிகளாசிரியர்

கூறியுள்ளார். மேலும், சூரிய ஒளியில் மீன்கள் மயங்கி நிற்பதைப் போன்று விண்மீன்கள் மறைந்து நிற்பதையும், கடிகாரத்தில் மணி பார்த்தறிதல் போல விண்மீன்களைப் பார்த்துக் காலத்தை அறியும் தன்மையும் உவமித்துக் கூறப்படுகின்றன.

மேற்கருத்தினை உணர்த்தும்பாடல் வருமாறு:

நீலக் கடலில் வெள்ளை முத்து
நிலைத்து மிதத்தல் போலவே
நீல வானில் மீன்க ளெல்லாம்
நிற்கும் அழகை நிமிர்ந்துபார்
கண்ணை சிமிட்டி மனத்தில் நினைந்த
கருத்தைக் கூறும் நண்பர் போல்
விண்ணை அழகு படுத்தி யெங்கும்
விளங்கு மின்னும் மீனைப்பார்
இருட்டில் திரியும் திருட்டுப் பயல்கள்
எல்லாப் பொருளுங் கவருவார்;
இருட்டில் விளங்கும் இந்த மீன்கள்
எங்கள் மனதைக் கவருமே
மாலை மதியம் ஒளியை வீசில்
மங்கி நிற்கும் மீனெலாம்
காலைக் கதிர்தன் வெயிலை வீசில்
கரந்து போகும் அவைகளே
இச்சை யான காலப் பொறியில்
இனிது காலம் அறிதல்போல
உச்சி விளங்கும் மீனைப் பார்த்தும்
உரிய காலம் அறியலாம்[14]

மேற்பாடலில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள 'இருட்டில் திரியும்' என்ற அடிகள் முதல் எங்கள் மனத்தைக் கவருமே" என்ற அடிகள்வரை உள்ள நான்கு அடிகளும் உவமை முற்றாய்ப்பான சுவையுடைய அடிகளாகும்.

பாடலின் இறுதியில் இடம் பெற்றுள்ள,

உச்சி விளங்கும் மீனைப் பார்த்தும்
உரிய காலம் அறியலாம்

என்ற இரண்டடிகள் ஆய்விற்குரிய சுவையான செய்தியாகும்.

பழங்காலத்தில் நாழிகை வட்டில், குறுநீர்க்கன்னல் முதலானவற்றைக் கொண்டு பகலிரவு காலங்களை அறிந்தனர். 'நாழிகைக் கணக்கர்' என்ற ஒருவர் அப்பணிக்காகச் செயல்பட்டார். மேலும், மக்கள் தம்நிழலை அளந்து கணக்கிட்டும், 'துரும்பு' கொண்டும் பகற்காலங்களை அறிந்தனர்.

அக்கால வானியல் நிபுணர்களும், சோதிட வல்லுநர்களும் இரவுக்காலத்தைக் கணிக்கப் பிறிதொரு முறையைக் கையாண்டுள்ளனர். அம்முறையை உணர்த்தும் வெண்பா வருமாறு:

சித்திரைக்குப் பூசமுதல் சீர்ஆவணிக்கு அனுசம்
அத்தனுசுக்கு உத்திரட் டாதியாம் – நித்த நித்தம்
ஏதுச்சமானாலும் இரண்டே காலிற் பெருக்கி
மாதமைந்துதள்ளி மதி [15]

மேற்பாடலில் வந்துள்ள ஏதுச்சமானாலும் என்ற தொடர் அன்றன்று இரவு நாழிகையை அறிந்து கொள்ள வேண்டுமெனில் வானத்தைப் பார்த்து, உச்சமீனைத் தெரிந்து, அதன்பின்னர் நாழிகையைக் கணக்கிட வேண்டுமென்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது.

உச்சமீனைத் தெரிந்து கொண்டு அதன்பின் சித்திரைமாதம் முதல் ஆடி மாதம்வரை என்றால் உச்சமீனிலிருந்து பூசம் நட்சத்திரம்வரைக் கணக்கிடல் வேண்டும். ஆவணி மாதம் முதல் கார்த்திகை மாதம்வரை என்றால் உச்ச மீனிலிருந்து அனுசம் நட்சத்திரம்வரைக் கணக்கிடல் வேண்டும். மார்கழி மாதம் முதல் பங்குனி மாதம்வரை என்றால் உச்சமீனிலிருந்து உத்திரட்டாதி நட்சத்திரம்வரை கணக்கிடல் வேண்டும்.

இவ்வாறு பன்னிரு மாதங்களையும் மூன்று வகையுள் பொருத்தி, ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு நட்சத்திரம் வீதம் மூன்று நட்சத்திரங்களைக் குறித்துள்ளனர். முதலில் எந்த மாதத்தில் இரவு நாழிகையைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அன்றிரவு நிகழும் உச்சமீனை அறிந்து, அதன்பிறகு மேற்படி மாதத்திற்குரிய நட்சத்திரம்வரை எண்ணிக் கணக்கிட்டு அதனை இரண்டே காலிற் பெருக்கி மாதமைத்துக் கழித்து இரவு நாழிகையை அறிதல் வேண்டும்.

மேற்கூறிய ஆராய்ச்சிச் செய்திகளை உள்ளடக்கிய அடிகளாசிரியர்,

உச்சி விளங்கும் மீனைப் பார்த்தும்
உரிய காலம் அறியலாம் [16]

என்று குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

3.4 பூவும் வண்டும்

வெள்ளி நிலவைக் கண்ட வெண்முல்லை பூத்துச் சிரித்ததாம். அதைக் கண்ட வண்டு விரும்பி வந்ததாம். வண்டு பூவைச் சுற்றிப் பாடி ஆடியதைக் கண்டதும் பூவிடம் அன்புத்தேன் ஊறியதாம்.

அந்தத் தேனை வண்டு உண்டு மகிழ்ந்ததாம். இச் செய்தியை அடிகளாசிரியர்,

வெள்ளை நிலா வந்தது,
 வெள்ளை முல்லை சிரித்தது
வெள்ளை முல்லை சிரித்ததும்
 விரும்பி வண்டு வந்தது.
வந்த வண்டு பாடிற்று
 வட்டமாக ஆடிற்று
அந்த முல்லை இதழிலே
 அன்புத் தேனும் ஊறிற்று.
ஊறும் தேனைக் கண்டது
 உள்ளத்தில் காதல் கொண்டது
நாறும் பூவின் இதழினை
 நக்கி வண்டும் உண்டது [17]

மேற்பாடல் சிறுவர்கள் பாடப்பாட இன்பம் பயப்பதாக அமைந்துள்ளது. இதேபோல் பின்வரும் பாடலும் இன்பம் பயப்பதாகும்.

வண்டு நல்ல வண்டு
 வாழும் நல்ல வண்டு
எங்கும் பூவைக் கண்டு
 ஏகித் தேனை மொண்டு
இன்பமாக உண்டு
 இருக்கும் நன்மை கொண்டு [18]

மேற்பாடல் இயைபு சிறக்க அமைந்து பாடுவோருக்குக் களிப்பைத் தருவதாக அமைந்துள்ளது.

மழலை மிழற்றும் குழவியைப் பூவாக உருவகித்து அடிகளாசிரியர் இயற்றியுள்ள பாடல் மனத்தை மயக்கும் வகையில் உள்ளது. அப்பாடல் வருமாறு:

சின்ன பூ சிறந்த பூ
சிரிச்சுச் சிரிச்சுச் குதிக்கும் பூ
அன்னை மடியில் தவழும் பூ
அங்கும் இங்கும் நடக்கும் பூ
கண்ணைக் கருத்தைக் கவரும் பூ
கைகள் ரெண்டும் கமலப் பூ
எண்ண எண்ண இனிக்கும் பூ
இரண்டு கண்கள் நீலப் பூ [19]

3.5 பிற இயற்கைப் பொருட்கள்

அடிகளாசிரியர் தன்னுடைய சிறுவர் இலக்கியத்தை இயற்கையோடு இயைந்த இலக்கியமாகவே படைத்துள்ளார். அவர்

பின்வரும் தலைப்புகளில் பாடியுள்ள பல பாடல்கள் அதற்குச் சான்றாகும்.

1. ஞாயிறு
2. எங்கள் வீட்டுத் தாமரை
3. துயிலெடை
4. இன்பக் கடல்
5. நாகரிகக் காகம்
6. அறுகம் புல்
7. ஆற்றங்கரை
8. பூங்கொத்து
9. நத்தை
10. குரங்கண்ணா
11. குட்டிக் குரங்குக் கல்யாணம்

மேற்தலைப்புகளில் பாடப் பெற்றுள்ள பாடல்கள் இயற்கையின் எழிலை அள்ளிஅள்ளித் தருகின்றன. அத்துடன் அப்பாடல்கள் அறநெறியையும் எடுத்துரைக்கின்றன.

3.6 முடிவுரை

1. அடிகளாசிரியர் இயற்கையை மாற்ற விரும்பாத மனமுடையவர். எளிமையான வாழ்வே இயற்கையோடு இயைந்த வாழ்வென்பதைத் தன் வாழ்வின் மூலமே நிரூபித்து வருகின்றார்.
2. இயற்கை அளித்துள்ள பலவிதமான பொருட்களிலும் நிலவுதான் குழந்தைப் பருவத்தினரை முதன் முதலில் கவர்ந்து அவர்களை மகிழ்விக்கின்றது.
3. சிறுவர்கள் தங்களின் அறிவு வளர்ச்சியினால் உண்டாகின்ற கற்பனையில் நிலவைப் பலவாறான பொருளாக எண்ணி மகிழ்கின்றனர்.
4. நிலவைப் போன்ற வெள்ளை மனமுடைய மழலைகளின் மனநிலையை அடிகளாசிரியரும் தன்னுடைய வெள்ளை மனத்தால் அறிந்து வெளிப்படுத்தியுள்ளார்.
5. உச்ச மீனைத் தெரிந்து கொண்டு அதன் வழியாக இரவுக் காலத்தை அறிய இயலும் என்ற ஆய்வு நுட்பத்தை அடிகளாசிரியர் குறிப்பால் உணர்த்தியுள்ளார்.

6. அடிகளாசிரியர் பல்வேறு இயற்கைக் காட்சிகளையும், விலங்குகளையும் சிறுவர்களுக்கு விளையாட்டுத் திடலாகவும், விளையாட்டுத் தோழர்களாகவும் கண்டு களிப்புற்று அவற்றை அப்படியே வடித்தெடுத்துச் சிறுவர்களுக்காக வழங்கியுள்ளார்.

7. அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் இயற்கை நிறைவான இடத்தைப் பெற்றுள்ளதை உணர்த்தியுள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா. 98, ப.107.
2. மேலது, பா. 103, ப.115.
3. மேலது, பா. 1, ப.2.
4. மேலது, பா. 45, ப.55.
5. கவிஞர் கண்ணதாசன், கவலை இல்லாத மனிதன், திரை இசைப் பாடல்.
6. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா. 53, ப.64.
7. கவிஞர் கண்ணதாசன், பாபு, திரை இசைப்பாடல்.
8. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா. 3, ப.4.
9. மேலது, பா. 8, ப.11.
10. மேலது.
11. மேலது, பா. 9, பக்.13-4.
12. மேலது, பா. 10, ப.15.
13. மேலது, பா. 15, ப.21.
14. மேலது, பா. 65, ப.75.
15.
16. சோதிட கிரக சிந்தாமணி என்னும் பெரிய வருசாதி நூல், பக். 108, 109.
17. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா.79, ப.89.
18. மேலது, பா.80, ப.89.
19. மேலது, பா.82, ப.91.

இயல் - 4

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்

முன்னுரை

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள் என்னும் தலைப்பில் இவ்வியல் எழுதப்பட்டுள்ளது. அவரது சிறுவர் இலக்கியத்தில் பல்வேறு சமுதாயச் சிந்தனைகள் காணப்படுகின்றன. இருப்பினும் கடவுள் சிந்தனை, தமிழ்மொழிச் சிந்தனை, கல்விச்சிந்தனை, தொழில் சிந்தனை ஆகிய நான்கு சிந்தனைகள் மட்டும் ஆராயப்பெற்றுள்ளன. இந்நான்கும் சமுதாயத்திற்குப் பயன்படும் அரிய பெரிய சிந்தனைகளாகும்.

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் கடவுள் சிந்தனைகள்

அடிகளாசிரியர் இயற்றிய சிறுவர் இலக்கியத்தில் கடவுள் சிந்தனைக் குறித்த கருத்துகளை நோக்குவோம். அடிகளாசிரியர் மிகச்சிறந்த ஆன்மிகவாதி ஆவார். அத்துடன் கடவுள் பற்றிய பல்வேறு நூல்களை உருவாக்கியுள்ளார். ஆதலால், அவரது சிறுவர் இலக்கியத்தில் கடவுள் சிந்தனையை ஆராய முற்படுவோம்.

அடிகளாசிரியர் தாம் இயற்றிய சிறுவர் இலக்கியத்தில் மூன்று பாடல்களைக் கடவுள்மேல் பாடியுள்ளார். அப்பாடல்களின் தலைப்புகள் வருமாறு:

1. கடவுள் வாழ்த்து
2. இரண்டு கடவுள் பிள்ளைகள்
3. குழந்தை முருகன்

இனி ஒவ்வொன்றாய் நோக்குவோம்.

முதல் பாடலாகிய கடவுள் வாழ்த்து சிறுவர் இலக்கியத்திற்குக் காப்புச் செய்யுள்போல் அமைந்துள்ளது. அப்பாடல் எல்லா மக்களுக்கும் பயன்படும் பொதுநிலையில்

இயற்றப்பட்டுள்ளது. திருவள்ளுவரின் கடவுள் வாழ்த்தைப் போன்று பொதுநிலையில் அப்பாடல் பாடப்பட்டுள்ளதாகக் கருதலாம். அப்பாடல் வருமாறு:

எங்கும் கடவுள் இருக்கிறது
இதனால் உலகம் நடக்கிறது
அங்கும் இங்கும் அதைத்தேடி
அலைந்து நானும் திரிவதில்லை

அதிகா லையிலே எழுந்திடுவேன்
அகத்தில் அன்பாய் நினைந்திடுவேன்
துதிகள் பலவும் பாடிடுவேன்
தூய மனத்தைப் பெற்றிடுவேன்

ஆண்டவன் தன்னை வழிபட்டால்
அன்பும் அறிவும் உண்டாகும்
அன்பும் அறிவும் உண்டானால்
அருளும் பொருளும் உண்டாகும்.

மேற்பாடல்களின் மையக்கருத்து வருமாறு:

கடவுள் எங்கும் உள்ளார்: அவரால் உலகம் இயங்குகின்றது. அவரை முறையாக வழிபட்டால் அன்பும், அறிவும், அருளும், பொருளும் உண்டாகும். அருளும் பொருளும் உண்டானால் இவ்வுலகத்திற்கு நன்மை செய்யலாம். இவ்வுலகத்திற்கு நன்மை செய்வதற்காகக் கடவுளை வணங்குகின்றேன். இவ்வுலகத்திற்கு நன்மை செய்வதற்காகவே "ஆண்டவனைப் பணிகின்றேன்" என்று அடிகளாசிரியர் கூறியுள்ளதை நோக்குகின்றபோது அவரின் தன்னலமற்ற சிறந்த பண்பை அறிய முடிகின்றது. மேலும், அப்பாடல் அனைத்து நாட்டு மக்களுக்கும் பயன்படும் 'பொதுக் கடவுள் வாழ்த்தாகவும் விளங்குகின்றது, அடிகளாசிரியர் இயற்றிய இரண்டாம் பாடல் சிவபெருமானின் இரண்டு பிள்ளைகளாகிய விநாயகர், முருகன் பற்றியதாகும். மூன்றாம் பாடல் 'குழந்தை முருகன், என்னும் தலைப்பில் பாடப்பட்டதாகும். இப்பாடல், ஏழை சிறுவர்களை எல்லாம் முருகக் கடவுளாகப் பாவிக்க வேண்டும் என்ற கருத்தைக் குறிக்கின்றது. இதனை உணர்த்தும் பாடல் வருமாறு:

ஏழைச் சிறுவரெலாம் – நாம்
ஏத்தும் இளமுருகன் – அவர்
வாழ உணவளித்தால் – முருகன்
வந்து மகிழ்ந்திடுமே

கந்தையைப் போக்கிஅவர் – இடையில்
கட்ட உடையளிக்கில் – நம்தம்
சொந்த முருகனுக்கே – பட்டுச்
சோடி கொடுத்தவாம்இச்சொற்பொழிவினை

நிகழ்த்த அடியேனுக்கு இசைவளித்ததுமல்லாமல் என்னை மிகவும் ஊக்குவித்து இசைவு வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர், பதிவாளர், தமிழியல்துறைத் தலைவர் ஆகியோருக்கு அடியேன் என்றென்றும் நன்றிக் கடப்பாடுடையேனாவேன்.

நாட்டிலுள்ள குழந்தைகள் எல்லாம் 'நல்ல முருகர்களாம், என்ற கருத்துடன் இப்பாடல் முடிவடைந்துள்ளது[3]

அடிகளாசிரியர் சிறுவர் இலக்கியத்தில் மேலே குறித்த மூன்று பாடல்கள் கடவுள் சிந்தனையை உணர்த்தின. இவை தவிர அவ்விலக்கியத்தில் ஏழு இடங்களில் கடவுள் சிந்தனையைக் குறித்துள்ளார். அவை வருமாறு:

தெய்வத்தைப் போற்ற வேணுந்தம்பி[4]

தெய்வத்தை நீயெண்ணிக்கொள் – உன்றன்
தீவினை தீர்வதற்கே[5]

பக்திக் கதையை நீ கூறின்
பரமன் மேலே அன்பாவோம்[6]

காலைப் பொழுதில் எழுந்திடுவோம்
கடவுளை எண்ணித் தொழுதிடுவோம்[7]

சிரத்தில் குட்டிக் கும்பிடலாம்
சிவனார் பெரிய பிள்ளையார்க்கே[8]

சிவனார் பிள்ளை இருவர் தமையும்
சிறப்பாய் வழிபட்டார்
சிறந்த யானைப் பிள்ளை அருளால்
சேர்ந்தால் கயிலாயம்[9]

ஆற்றங்கரை ஆற்றங்கரை
அழகுத்தெய்வம் விளங்குங்கரை[10]

மேற்கூறிய பாடல்களை நோக்குகின்ற பொழுது அடிகளாசிரியரின் கடவுள் சிந்தனையை உணர்ந்துகொள்ள முடியும். இச்சிந்தனையை மனத்தில் வைத்துக்கொள்ளும் சிறுவர்கள் நலமடைவார்கள் என்பது அடிகளாசிரியரின் திண்ணமாகும்.

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத் தமிழ்மொழிச் சிந்தனைகள்

அடிகளாசிரியர் தமிழர், தமிழ்ப் பேராசிரியர், தமிழுக்காக உழைத்து வருகின்ற உத்தமர். ஆதலால் அவரது சிறுவர் இலக்கியத்தில் தமிழ்மொழிச் சிந்தனையை ஆராய்வது ஆய்வாளரின் கடமையாகும்.

அடிகளாசிரியர் தாம் இயற்றிய சிறுவர் இலக்கியத்தில் மூன்று பாடல்களைத் தமிழுக்காக இயற்றியுள்ளார். அவையாவன:

1. தமிழ் வாழ்த்து (16ஆம் பாடல்)
2. தமிழைக் கற்பாய் (173ஆம் பாடல்)
3. தமிழ்ப்பாட்டைத் தாளம் போட்டுப்பாடு (193ஆம் பாடல்)

மேற்கூறிய மூன்று பாடல்களிலும் தமிழின் சிறப்பு, மேன்மை, தமிழுக்கும், இசைக்கும் உள்ள தொடர்பு முதலான பல கருத்துகளை வைத்துள்ளார். தமிழ்நாட்டுச் சிறுவர்கள் ஒவ்வொரு வரும் தமிழைக் கற்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை, அவர்.

தம்பித் தம்பித் தமிழா!
தமிழை நாளும் கற்பாய்
நம்பி நம்பித் தமிழா
நாளும் நாளும் கற்பாய்[11]

என்றவாறு குறித்துள்ளார்.

உலகத்தில் எத்தனையோ மொழிகள் அழிந்துவிட்டன. ஆனால் தமிழ்மொழி மட்டும் இன்றும் சிறப்புடன் உள்ளது என்பதை அவர்,

பழமை உற்ற மொழிகள்
பழுத்து வீழ்ந்து போச்சு
செழுமை உற்ற மொழிகள்
சிறந்து கிளைக்க லாச்சு[12]

என்று குறிப்பிட்டுள்ளார். செழுமையுள்ள மொழி என்பதற்குச் செம்மொழி எனப் பொருள் கொள்க. செம்மொழியாம் தமிழின் சிறப்பை நாளும் உணர்க. தமிழிலக்கியங்கள் அகம் என்றும் புறம் என்றும் பாகுபடும். இப்பாகுபாட்டை அடிகளாசிரியர்,

அகமும் புறமும் இனிக்கின்றாய்[13]

என்று குறித்துள்ளார். இப்பாகுபாடு தமிழ்மொழிக்கு மட்டும் உள்ள பெருஞ்சிறப்பாகும்.

தமிழ்மொழியை முத்தமிழ் என்று அழைப்பார். இயல், இசை, நாடகம் என்பது முத்தமிழாகும். இம்மூன்றுள் இசையைத் தமிழோடு உறவாக்கி அடிகளாசிரியர் பாடல் இயற்றியுள்ளார். இப்பாடல் வருமாறு:

தாளம் போட்டே ஆடு
தமிழின் பாட்டை பாடு
இயலும் இசையும் என்றும்
இனிய நடிப்பும் என்றும்
மூன்று விதமாய் இருக்கும்
முத்தமிழ் என்பது பெயராம்
எல்லாத் தமிழையும் பாட
ஏற்ற தாளம் வேண்டும்
தாளம் போட்டே ஆடு
தமிழின் பாட்டைப் பாடு[14]

தமிழ்மொழியைப் பற்றிய சிந்தனைகளைக் கூறிய அடிகளாசிரியர் தமிழ்ப்பாட்டியாகிய ஔவையைப் பாடியுள்ளார். சிறுவர்களுக்காகச் சிறுவர் இலக்கியம் பாடிய அடிகளாசிரியர் அவ்விலக்கியத்தில் ஔவையை மறவாமல் குறிப்பிட்டுள்ளார். ஔவையை ஏன் அவர் குறிப்பிட்டுள்ளார் என்பதைப் பின்வரும் அப்பாடல் கருத்தே உணர்த்தும்.

எல்லை யில்லாப் பெரிய புலவர்
இருந்த தமிழ்நாட்டில்
இளைஞர் கற்கும் சிறுநூல் செய்ய
ஏனோ மறந்தாரே
அவ்வை என்ற பாட்டி மட்டும்
அந்தக் குறைதீர
ஆத்திசூடி முதலாம் நூல்கள்
அழகாய்ச் செய்தாளே[15]

மேற்கண்டவாறு தமிழ்மொழிச் சிந்தனைகளை அடிகளாசிரியர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட நல்ல சிந்தனைகளை அவர் கூறியதால்தான் தமிழ்மொழிக்கு அளவற்ற தொண்டுகளை மென்மேலும் செய்து வருகின்றார்.

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள்

அடிகளாசிரியர் மிகச் சிறந்த கல்வியாளர் ஏறத்தாழ 35 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றியவர். தற்போது அகவை (98)

முதிர்ந்த நிலையிலும் கல்விப் பணியைச் செய்து வருகின்றார். அவரது பேச்சும், மூச்சும் கல்விதான். ஆதலால் அவர் இயற்றிய சிறுவர் இலக்கியத்தில் கல்விப் பணியைப் பற்றிய சிந்தனைகளை இப்பகுதி எடுத்துரைக்க முயல்கின்றது. அடிகளாசிரியர் கல்விக்காக ஆறு பாடல்களை இயற்றியுள்ளார். இவை தவிர பதினைந்து பாடல்களில் கல்வியைப் பற்றிய சிந்தனைகளைக் குறித்துள்ளார். அவற்றை அறிவோம்.

அடிகளாசிரியர் கல்வியைக் குறித்துப் பாடிய பாடல்களின் தலைப்புகள் வருமாறு :

1. அறிவுக் கடவுள் (21 பா.)
2. பள்ளிக்கூடச் சிறுவர் (23 பா.)
3. மாணவர்க்கு (24 பா.)
4. ஏழை மாணவர் (25 பா.)
5. நமது பாடசாலைகள் (26 பா.)
6. கல்வியும் காமமும் (52 பா.)

மேலது பாடல்கள் முழுக்க முழுக்கக் கல்விக்காக இயற்றப்பட்டவையாகும். அப்பாடல்களுள் சிலவற்றை ஆராய்வோம்.

அடிகளாசிரியர் கடவுள் வாழ்த்துப்பாடலில் இறைவனைப் பாடியிருந்தாலும் கல்வியைப் பற்றிப் பாடும்போது ஆசிரியர்களைக் கடவுளாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை அவர்,

அறிவைக் கொடுக்கும் மெய்க்கடவுள்
ஆசான் வடிவாய் இருக்கிறது
அறிவைக் கொடுக்கும் அதனுடைய
அருளால் உலகம் வாழ்கிறது [16]

என்றவாறு குறித்துள்ளார். ஆசிரியர்களைக் கடவுளாகக் கூறியது மட்டுமின்றி அவர்களால்தான் இந்த உலகமே இயங்குகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். கடவுளால் உலகம் இயங்குகின்றது என்று ஆன்மிகவாதிகள் கூறிவருகின்றனர். அடிகளாசிரியர், ஆசிரியர்களால் உலகம் இயங்குகின்றது என்று குறிப்பிட்டு ஆசிரிய உலகைச் சிறப்பித்துள்ளார்.

சமுதாயத்தை நல்வழிப்படுத்துகின்ற ஆசிரியர்கள் எவ்வாறு பழகவேண்டும் என்பதை,

விரைவே இன்றிச் சினமின்றி
விரும்பி நோக்கி முகமலர்ந்து
உரையால் அறிவைக் கொடுக்கின்ற
உண்மைக் கடவுள் ஆசானே 17

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக்கூட மாணவர்கள் வகுப்பறையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அடிகளாசிரியர் மிக அழகாகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளிக் கூடப் பாலர்களே
படிக்கும் வகையை உணர்வீரே!
ஆசான் பாடம் சொல்லுங்கால்
அங்கே இங்கே பார்க்காதீர்
சொல்லும் கருத்தைக் கேட்டிடுவீர் :
சுருக்க மாக எழுதிடுவீர் :
எல்லாம் விளங்க வில்லையெனில்
எழுந்து பணிவாய்க் கேட்டிடுவீர்
படித்தும் விளங்காப் பகுதிகளைப்
பலபேர் சேர்ந்து சிந்தியுங்கள்
வடித்துக் கருத்தை மனதினிலே
வகையாய் வைக்கப் பயின்றிடுங்கள்
ஒருவர்க்கு ஒருவர் கேட்டிட்டு
உண்மை விடையைக் கூறிடுவீர்
கூறிய படியே எழுதிடுவீர்;
கூறல் எழுதுதல் குணந்தருமே
வகுப்பின் அறையுள் உட்கார்ந்து :
வம்புந் தும்பும் பேசாதீர்
ஒழுங்கும் அறிவும் உதவுதற்கே
உரிய இடம்நம் வகுப்பறையே
பள்ளித் தோழர் தங்களுடன்
பகையைச் சிறிதுங் கொள்ளாதீர்
தெள்ளத் தெளியக் கற்றோர்க்குத்
தீய பகைவர் எங்குமிலை [18]

மேலது பாடலில் உள்ள கருத்துக்கள் மாணவர்களுக்கு கல்விக்குரிய இலக்கணச் சட்டங்களாக விளங்குகின்றன. அக்கருத்துக்களைப் பின்பற்றி நடந்தால் மாணவர் சமுதாயம் விரைவில் உயர்வடையும்.

அடிகளாசிரியருடைய இளமைக்காலம் வளமுடையதாக இல்லை. இவரின் தந்தையார் ஏழாம் வயதில் இறந்துவிடவும் கல்வியும் தடைப்பட்டது. ஆதலால், அவரால் இளமையில்

கல்வியைத் தொடர முடியவில்லை இச்செய்தியை அவரே பாடலாக எழுதியுள்ளார். அப்பாடல் வருமாறு:

கந்தற் சட்டையும், கழித்திடு சுவடியும்
கைதனிற் பழஞ்சோறும்
சொந்தக் கால்களால் நடந்திடு நடையுமே
துணையெனக் கொண்டோராய்
இந்த நாட்டினில் ஏழைமா ணவர்பலர்
இருந்திடத் தினங்கண்டும்
எந்தச் செல்வரும் இரங்கிடார்; அவர் தமக்கு
இம்மியும் உதவாரே [19]

அடிகளாசிரியர் ஏழை மாணவராய் இருந்து கல்வியைப் பெறமுடியாமல் பெரிதும் துன்புற்றார் இச்செய்தியை அவரது வாழ்க்கை வரலாறு உணர்த்திற்று. இவ்வாறு இளமையில் பட்ட துன்பத்தை நினைந்து அவர் மேலது பாடலை இயற்றியுள்ளார்.

இளமையில் கல்விக்காக அவர்பட்ட துன்பங்கள் அவர் மனத்தை விட்டு நீங்கவில்லை. ஆதலால், அவர் பொருளாதார நிலையில் ஓரளவு உயர்ந்தவுடன் பல ஏழை மாணவர்களை அழைத்து வந்து கல்வியைக் கொடுத்துள்ளார். அவரால் கல்வியைப் பெற்ற பல ஏழை மாணவர்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர். இச்செய்தியை அவரே கூறக் கேட்டுள்ளேன். கல்விப் பயிரை வளர்க்கும்போது காமக்களையை வளர்க்கக் கூடாது என்றும் அடிகளாசிரியர் (பா. 52) சொல்லியுள்ளார். இதுகாறும் அவர் கல்விக்காக இயற்றிய பாடல்களைச் சிந்தித்தோம். இனி, அவர் பாடிய வேறு பாடல்களில் கல்வியைப் பற்றிக் கூறியுள்ள சிந்தனைகளை அறிவோம்.

ஏழைச் சிறுவருக்கே – கல்வி
ஏற்றம் அளித்திடிலோ – குருக்
கோழி முருகனுக்கே – உளத்தில்
கோடி மகிழ்ச்சிவரும் [20]

இந்தப் பட்டம் உனக்கு வேண்டாம்
இன்றே கிளிஞ்சிப் போகுமே
எம்மே பட்டம் பீயே பட்டம்
எடுக்க இன்றே எண்ணிக்கொள் [21]

கற்றுக் கொடுக்கும் அறிஞர் வந்தால்
கையை குவித்து வணங்குவான் [22]

பள்ளிக் கூடம் போகலாம்
பாடம் அங்குப் படிக்கலாம்
துள்ளிக் குதிச்சி ஆடலாம்
துன்பம் நீங்கப் பாடலாம் [23]

பாடம் படித்தால் இன்றைக்கு
பட்டம் பெறுதல் நாளைக்கு [24]

பள்ளிக் கூடம் போகும்முன்பு
பார்த்துச் செல்லும் கண்ணாம் [25]

அறிவு விளக்கு இருந்தால்
ஆக்கம் பலவும் உண்டாம்
வறுமை என்பது இல்லை
வாழும் வழிகள் தெரியும் [26]

கல்வி கற்ற அறிவினாலே
தொழிலைத் தேடுவேன் [27]

இதுகாறும் மேற்கூறப்பெற்ற பாடலடிகளில் அடிகளாசிரியரின் கல்விச் சிந்தனைகளை நன்றாக உணர முடிந்தது. ஆதலால், வருங்காலத் தமிழகம் அடிகளாசிரியரின் கல்விச் சிந்தனைகளைப் பின்பற்றி உயர்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். இப்பணியே அடிகளாசிரியருக்குச் செய்யும் பெரும்பணியாகும். சிறுவர் இலக்கியத்தால் மாணவர்களாகிய சிறுவர்கள் ஏற்றம் பெற வேண்டும்.

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் தொழில் சிந்தனைகள்

இந்தியாவை மிகச் சிறந்த வல்லரசாக மாற்ற வேண்டுமானால் தொழில்வளம், சிறக்க வேண்டும். ஒரு நாட்டில் தொழில்நிலை உயர்ந்தால் தான் அந்நாடு மிகச்சிறந்த நாடாகக் கருதப்படும். இத்தகைய சிந்தனைகளில் அடிகளாசிரியர் ஆர்வம் கொண்டவர். ஆதலால்தான் அவர் 1993ஆம் ஆண்டு “தொழிலியல்” என்னும் இலக்கியத்தை இயற்றியுள்ளார். இவ்விலக்கியம் மட்டுமின்றி அவர் இயற்றிய வேறுபல இலக்கியங்களிலும் தொழிலின் சிறப்பை உணர்த்தியுள்ளார். அத்தகு நிலையில் அவரின் சிறுவர் இலக்கியத்தில் காணப்படும் தொழில் குறித்த சிந்தனைகளை எடுத்துரைக்க முயல்வோம்.

மேற்குறித்த அவர் சிந்தனைகளைப் பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

நாடும் நாமும் வாழ்ந்திடவே
நல்ல தொழிலைச் செய்திடுவோம்
காடும் மேடும் திருத்திடுவோம்
கழனிகள் பலபல செய்திடுவோம்

அணைகள் ஏரிகள் அமைத்திடுவோம்
ஆறும் குளமும் வெட்டிடுவோம்

இணையில் லாத உழுதொழிலால்
எல்லா உணவும் படைத்திடுவோம்

இரும்புத் தொழிலபல செய்திடுவோம்
இயந்திரம் எல்லாம் இயற்றிடுவோம்
கரும்பின் ஆலை பஞ்சாலை
கலைநூல் ஆலைகள் அமைத்திடுவோம்
போக்கும் வரவும் நடந்திடவே
புதுப்புது கார்கள் செய்திடுவோம்
கோக்கும் ரயிலைக் கப்பல்களைக்
குணத்தில் சிறக்கச் செய்திடுவோம்
வானக் கப்பலும் செய்திடுவோம்
வகையாய்ச் சைக்கிளும் இயக்கிடுவோம்
கானத் தியங்கும் வண்டிகளும்
காரில் சிறக்கச் செய்திடுவோம் [28]

மேலது, பாடல் கருத்திற்கு அடியாக, "ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்"[29] எனத் தொடங்கும் பாரதியாரின் கவிதைகளைச் சான்றாகக் கொள்ளலாம்.

அடிகளாசிரியர் இயற்றியுள்ள 'நல்ல வெல்லம்' என்னும் தலைப்பிலான பாடல் கரும்புத் தொழிலை அழகாக விளக்கிச் செல்கின்றது. அதாவது கரும்புத் தொழிலின் படிநிலைகளை ஒன்றன்பின் ஒன்றாக விளக்கிச் செல்கின்றது.

வெல்லமெங்கே விளையுது
வேலியுள்ள வயலிலே
நல்ல நல்ல கரும்பைநட்டு
நல்லவெல்லம் விளையுது

கரும்பை யெல்லாம் கத்திகொண்டு
கணுக்கணுவாய் நறுக்கணும்
கழனியிலே நீரைப்பாய்ச்சிக்
கருப் பம்புள்ளைப் பதிக்கணும்

நாட்கள் சில சென்றபின்பு
நல்லமுளை தோணுமே
நன்குகொத்தி எருவதனை
நாமும் வைக்க வேணுமே

சோலைவிட்டுக் கருப்பம்பயிர்
சோராக வந்திடும்
சோர்விலாமல் நீர்அதனைச்
சோம்பலின்றிப் பாய்ச்சனும்

பத்துமாதம் சென்ற பின்பு
பருத்து நீண்டு நின்றிடும்
பக்குவமாய் ஆளைவிட்டுப்
பார்த்துவெட்டிப் போடனும்

சோலைகளைக் கழித்துப்போட்டு
ஆலையிலே கொடுத்திட்டால்
ஆலைசுற்றி அரைத்து அரைத்துப்
பாலைவேறு படுத்துமே

கருப்பம் பாலைக் கொப்பரையில்
காய்ச்சிப்பாகு செய்திட்டால்
கட்டியாக அச்சதாக
கருத்தைப் போலச் செய்யலாம் [30]

கரும்புத் தொழிலின் படிநிலையை அடிகளாசிரியர் மேற்பாடலாகத் தந்துள்ளார்.

மேற்குறித்த இரண்டு பாடல்களின் தொழில் பற்றிய சிந்தனைகளை அறிந்தோம். அடிகளாசிரியர் இஃதோடு நில்லாது மேலும், பல இடங்களில் தொழில் சிந்தனைகளைக் குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு :

தொழிலைச் செய்யத் தூண்டிடும்
தொழிலுக்கு உதவி செய்திடும் [31]
வேலை பலவும் செய்திடுவோம்,
வீணே சோம்பித் திரியோமே [32]
கவர்னர் ஆகி வாழ்ந்திடனும் – இன்றேல்
கலெக்டர் ஆகி வாழ்ந்திடனும் [33]
கல்வி கற்ற அறிவினாலே
தொழிலைத் தேடுவேன் [34]

தொழிலில் கலப்படம் கூடாது என்பதை வலியுறுத்த எண்ணிய அடிகளாசிரியர்,

காசில் ஆசை கொண்ட கயவர்
கலப்புச் செய்யும் உண்பொருள்
மோச மான நோயைத் தந்து
முடிவும் செய்யும் அறிதியோ? [35]

என்று கூறிவிட்டு இதற்கு விடையாக,

கலப்புச் செய்யுங் கயவருக்குக்
கடவுள் தீமை செய்யலே [36]

என்று ஆதங்கமும் படுகின்றார்.

மேற்கண்டவாறு அடிகளாசிரியர் தொழில் குறித்த நல்லபல சிந்தனைகளைக் கூறியுள்ளார். அவர் கூறிய அச்சிந்தனைகளைப் பின்பற்றித் தொழிலை உயர்த்தி நாட்டை உயர்த்துவோம்.

முடிவுரை

1. அடிகளாசிரியரின் கடவுள் வாழ்த்து பொதுத் தன்மையாக விளங்குகின்றது.
2. அடிகளாசிரியரின் ஏனைய பாடல்களின் குறிப்புகள் சைவக் கடவுளை மட்டும் குறிக்கின்றன.
3. அடிகளாசிரியரின் கடவுள் சிந்தனைகள் சிறுவர்களுக்கு ஊக்க மருந்தாக விளங்குகின்றன.
4. அடிகளாசிரியரின் தமிழ்மொழி குறித்த சிந்தனைகள் அம்மொழியின் சிறப்பைக் காட்டுவனவாக உள்ளன. மேலும், தமிழ்ப்பாட்டுகள் எல்லாம் இசையோடு உறவுடையது என்றும் குறித்துள்ளார்.
5. அடிகளாசிரியர், ஆசிரியர்களைக் கடவுளாக உருவகப் படுத்தியுள்ளார். அத்துடன் சமுதாய வழிகாட்டிகளாக ஆசிரியர் விளங்க வேண்டும் என்றும் உணர்த்தியுள்ளார்.
6. சிறுவர்கள் இளமையிலே தொழில் குறித்த சிந்தனைகளைப் பெறவேண்டும் என்ற நோக்கில் தொழில் பாடல்களை இயற்றியுள்ளார்.
7. 'நல்ல வெல்லம்', என்னும் தலைப்பில் இயற்றப்பட்ட பாடல் கரும்புத் தொழிலின் படிநிலையை நன்கு விளக்கியுள்ளது.

அடிகளாசிரியர் இயற்றியுள்ள சிறுவர் இலக்கியப் பாடல்கள் சமுதாயத்திற்குப் பயன்படும் நல்ல பல சிந்தனைகளைத் தாங்கியதாகும்.

சான்றெண் விளக்கம்

1. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா. 1, ப.2.
2. மேலது, பா. 3, பக். 5,6.
3. மேலது, பா. 3, ப.6.
4. மேலது, பா.22, ப.28.
5. மேலது, பா.31, ப.39.
6. மேலது, பா.35, ப.44.
7. மேலது, பா.41, ப.50.

8. மேலது, பா.83, ப.92.
9. மேலது, பா.86, ப.96.
10. மேலது, பா.92, ப.101.
11. மேலது, பா.17, ப.24.
12. மேலது.
13. மேலது, பா.16, ப.22.
14. மேலது, பா.19, ப.26.
15. மேலது, பா.86, ப.86.
16. மேலது, பா.21, ப.27.
17. மேலது.
18. மேலது, பா.23, ப.30.
19. மேலது, பா.25, ப.32.
20. மேலது, பா.3, ப.6.
21. மேலது, பா.12, ப.17.
22. மேலது, பா.30, ப.37.
23. மேலது, பா.33, ப.41.
24. மேலது, பா.57, ப.68.
25. மேலது, பா.81, ப.90.
26. மேலது, பா.91, ப.100.
27. மேலது, பா.99, ப.108.
28. மேலது, பா.54, ப.65.
29. மகாகவி பாரதியார், பாரதியார் கவிதைகள், 5, பாரததேசம், பா. 9-12.
30. திரு. அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பா.66, ப.76.
31. மேலது, பா.6, ப.9.
32. மேலது, பா.41, ப.50.
33. மேலது, பா.87, ப.97.
34. மேலது, பா.99, ப.108.
35. மேலது, பா.103, ப.114.
36. மேலது, பா.103, ப.115.

துணைநின்ற நூல்கள்

1. ஔவையாரின் தனிப்பாடல்கள், முல்லைநிலையம், சென்னை.

2. சிறுவர் இலக்கியம், அடிகளாசிரியர், திரு. (பதி. அ.சிவபெருமான்), திருவருள் நிலையவெளியீட்டகம், முதல் பதிப்பு-2004, விழுப்புரம்.

3. தமிழ் விடு தூது, கழகப் பதப்பு, சென்னை, 1952.

4. திருமந்திரம், கழகப் பதிப்பு, சென்னை, 1984.

5. திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும், அடிகளாசிரியர், திரு. (உரையாசிரியர்), திருவருள் நிலைய வெளியீட்டகம், முதல் பதிப்பு-1999, விழுப்புரம்.

6. தொல்காப்பியம் (மூலம்), கழக வெளியீடு, சென்னை, 1943.

7. நீதிக்கோவை, ஸ்ரீ அய்யனார் ஸ்பின்னிங்மில்ஸ், மூன்றாம் பதிப்பு, விருதுநகர்.

8. பாரதியார் கவிதைகள், அம்மன் பதிப்பகம், முதல்பதிப்பு-1993, சென்னை.

இயல் - 5

தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களில் கருத்தியல் பண்பு

முன்னுரை

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்களில் கருத்தியல் பண்பு என்ற இவ்வியலானது கருத்தியல் என்ற சொல்லையும் பொருளையும் விளக்கிவிட்டு, செய்தியே கருத்தியல் பண்பின் கருவாகத் திகழ்வதையும் சுட்டிக் காட்டுகின்றது. அடுத்து, அடிகளாசிரியர் கருத்தியலைக் கூறிட மேற்கொண்டுள்ள உத்தி முறைகளையும், சிறுவர்களுக்கான கருத்தியல் உருவாக்கம் பற்றியும் சிந்திக்கின்றது. நிறைவாக அடிகளாசிரியரின் கருத்தியல் பண்புகளையும், கருத்தியலின் மறுப்புப் பண்புகளையும் வெளிப்படுத்த முயல்கின்றது.

கருத்தியலின் கரு

மனிதனின் மனத்தில் ஒன்றைப் பற்றி எழுகின்ற உணர்வின் பயனே கருத்து என்று கூறப்படுகின்றது. பால் என்றவுடன் இனிக்கும் என்பது செய்தி. பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது கருத்து. எனவே, செய்தியும் கருத்தும் வேறு வேறானவை என்றாலும் கருத்தின் கருவாகச் செய்தி அமைகின்றது.

> சின்னப் பயலே சின்னப் பயலே
> சேதி கேளடா – நான்
> சொல்லப் போற வார்த்தையை
> நல்லா எண்ணிப் பாரடா!'

என்ற பட்டுக்கோட்டையாரின் அடிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. செய்தி செய்தியாகவே இருக்கும்; ஆனால் அது கருத்துகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும்.

கருத்தை வெளியிடுவது செய்தி கூறுவதைப் போன்று எளிதானதல்ல, கருத்தை வெளியிட உரிமை பெற வேண்டியுள்ளது. நடைமுறையில் செய்தித்தாள்கட்கு உரிமை பெறுவதும் கருத்துகளை உரிமையின்றி வெளியிடுவதும் நிகழ்வதைக்

காண்கின்றோம். எடுத்துக்காட்டாக மேடையில் அரசியல்வாதி எவ்வித உரிமையும் பெறாமல் தன்கருத்தைக் கூறுகின்றார். அவரது கருத்து உரிமம் பெற்ற செய்தித்தாளில் வருகின்றது. இது கருத்தியலுக்கு (Logic) முரணானது.

செய்தியால் பெரிய தீமை எதுவும் விளையப் போவதில்லை. அச்செய்தியால் தூண்டப்படும் கருத்தாலேயே தீமை எற்பட வாய்ப்புண்டு. எனவே, செய்தியும் கருத்தியலும் முறையாகப் பேணப்படுதல் வேண்டும். News Logic என்ற சொற்கள் இரண்டுமே Mental observing என்ற மனக் கிரகித்தலின் பாற்பட்டவை. எனவே, சமுதாய நலனில் அக்கறை கொண்டவர்கள் கருத்தியலை, கத்தியின் மேல்நடப்பதாகக் கருதி மிகக் கவனமாகக் கையாள்வர்.

அடிகளாசிரியரின் கருத்தியல் உத்திகள்

அடிகளாசிரியர், கருத்துக் கூற மேற்கொள்ளும் உத்திகள் மூன்று நிலைகளில் அமைகின்றன. அவை வருமாறு :

1. மேற்சென்று இடித்தல்
2. தகாது எனத்தடுத்தல்
3. தக்கவைப் படுத்தல்

அடிகளாசிரியரின், மேற்சென்று இடித்தல் உத்திக்கு அவரியற்றிய தொழிலியல் நூலின் பாடல்கள் நல்ல எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

காலத்தைப் பயனிற்றிக் கொலையே செய்யும்
கலனார் பலர்வாழும் நாட்டின் கண்ணே
ஞாலத்தின் உயிரான தொழிலின் கூறு
நன்றாக நடவாதே; தொழில்கள் எல்லாம்
ஏலத்தான் இடம்குருவி செய்வோ ரெல்லாம்
இயைபாக அமைந்திடினும் முடிதற் கேற்ற
காலந்தான் கிடைத்துவிடில் மடிதான் இன்றி
காரியத்தைச் செய்பவர்க்கே வாய்க்கும் கண்டீர்[2]

என்று தொழில் செய்வோர் சோம்பியிருத்தலை மேற்சென்று இடித்துரைக்கின்றார். சோம்பல் அற்றவர்க்கே நல்வாய்ப்புகள் உண்டென்று கூறுகின்றார். சோம்பல் கொண்டவர்கள் காலத்தையே கொலை செய்கின்ற எமன்கள் என்று கூறுவதிலிருந்து அடிகளாசிரியரின் இடித்துரைக்கும் கருத்தியல் பண்பு நன்றாக வெளிப்படுகின்றது.

அடுத்து அடிகளாசிரியரின் தகாது எனத் தடுத்தல் உத்தியைக் காணலாம். இதற்கும் தொழிலியல் நூல் பாடலே சான்றாகும். அப்பாடல் வருமாறு:

உடல்மெலிந் தாலும் உரைமெலிந் தாலும்
　　உளம்மெலி யாதஉலக் கத்தோர்
அடல்பெற முறையாய்த் தொழில் புரிந்திடுவர்
　　ஆயினும், அவிறந் தூக்கின்
இடமெனும் உடலம் தோய்ந்தழிந் திடுமே;
　　எண்ணியே அளவோடு முயன்றால்
கடல்மலி உலகில் கைவினை சிறக்கும்
　　கணக்கிலா நலமெலாம் வருமே[3]

மேற்பாடல், மிகுதியாய் உழைப்பதைக் கூடாது என்று கூறுகின்றது. உழைப்பு வேண்டியதுதான். ஆனால் அதற்காக இடைவிடாது உழைத்துக் கொண்டிருப்பது தகாது என்று கூறுகின்றார். எனவே, அளவுக்கு மீறாமல் வேண்டிய அளவிற்கு மட்டுமே உழைப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருமென்று உறுதிபடக் கூறுகின்றார்.

இறுதியாகத் தக்கவைப் படுத்தல் உத்தியைப் பயன்படுத்தியுள்ள திறத்தைக் காண்போம்.

அடிகளாசிரியர் சைவத்தையும், தமிழையும் உயிராகவும், உணர்வாகவும்கொண்ட கொள்கையர். இடைவிடாது இறைவழிபாடு செய்யும் பழக்க முடையவர். இவரது இறைமைக் கொள்கைகளுக்கு எதிரணியில் உள்ள பகுத்தறிவு இயக்கத்திலுள்ள ஒருவர் தந்தை பெரியாரின் மேல் ஒரு சிற்றிலக்கியம் செய்து கொண்டு வந்து அடிகளாசிரியரிடம் வாழ்த்துப்பா வேண்டி நின்றார். இறைமறுப்புக் கொள்கை தமக்கு உடன்பாடு இல்லாத ஒன்று என்றாலும் தமிழுணர்வு எல்லோருக்கும் இயல்புதானே என்ற நிலையில் அந்நூலுக்கு வாழ்த்து வழங்குவது தகுந்ததுததான் என்று எண்ணிப் பின்வரும் பாடலை எழுதிக் கொடுத்தார்.

அனைத்துயி ரொன்றென் றெண்ணி
　　அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
　　வஞ்சம் பொய்களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாய் என்று
　　செப்பிய பெரியார் தம்மேல்
வனத்தபா மாலை சாற்றி
　　வணங்கினன் இறைக்கோ அன்பால்[4]

தனக்கு உடன்பாடில்லா ஒன்றாயினும் உலகுக்குத் தக்கதாயின் அதனை உடம்படுத்தல் முறையே என்ற அடிகளாசிரியரின் கருத்தியல் பண்பு இதன்வழியே விளங்குகின்றது.

சிறுவர்களும் கருத்தியலும்

கருத்தியலை முதிர்ச்சிபெற்ற பெரியவர்களிடம் விளங்க வைக்கலாம். மன முதிர்ச்சியடையாத சிறுவர்களுக்குக் கருத்தியல் பற்றி விளங்க வைப்பது மிகவும் கடினமாகும். எனவே தான் சிறுவர் இலக்கியங்கள் என்பவை குறைந்த அளிவிலேயே வளர்ந்து வருகின்றன.

சிறுவர்களின் மனநிலைக்கு ஏற்பச் சொல்லப்படும் கருத்துகள் அவர்கள் மனத்தில் பதியும். அத்துடன் அவர்கள் விரும்புகின்ற வகையில் கதை சொல்லுதல், பாட்டுப் பாடுதல், விளையாட்டுடன் கருத்துக் கூறல் ஆகியவற்றின் வழியாகவும் கருத்தியலை எடுத்துச் செல்லலாம்.

ஆடுகிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டும்
பாடுகிற மாட்டை பாடிக்கறக்க வேண்டும்

என்பது உலக வழக்கு. இவ்வழக்கின்படி சிறுவர்களுக்கு எது பிடித்ததோ அதைச் செய்து அவர்களிடம் கருத்தைச் சொல்ல வேண்டும். அஃதாவது, சிறுவர்களுக்கு அவர்கள் போக்கிலேயே சென்று கருத்தை ஊட்ட வேண்டும்.

கண்பார்க்கக் கை செய்ய வேண்டும் என்பார்கள். இவ்வழக்கு சிறுவர்களுக்கு மிகப் பொருத்தமாக அமையும். எவ்வாறெனில் சிறுவர்கள் கண்ணால் கண்டதை அப்படியே மனத்தால் வாங்கிவிடும் திறன் பெற்றவர்கள். ஆதலால் சிறுவர்களுக்குக் கருத்தை உணர்த்த காட்சிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பர்.

அடிகளாசிரியர் சிறுவர் இலக்கியத்தில் கருத்தியல்

சிறுவர்களுக்கு மனோபலம் உண்டு. சிறுவர்களிடம்தான் கருத்துகளை விதைக்க முடியும். அதே சமயத்தில் சிறுவர்களிடமிருந்தும் கருத்துகளைப் பெறவும் முடியும். இவ்வாறான கொள்கையுடைய அடிகளாசிரியர் தாம் இயற்றிய சிறுவர் இலக்கியத்தில் சிறுவர்களின் மன கருத்துகளைக் கூறியுள்ளார். அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

எளிமையும் நுட்பமும் உடைய கருத்து

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் எளிய பொருட்களைப் பற்றி, எளிய நிகழ்ச்சிகளைக் காட்டி, எளிய

சொற்களின் வழியே அமைந்துள்ளது. சான்றாகப் பின்வரும் பாடலைக் கொள்ளலாம்.

வெள்ளை வெள்ளை பூனைக் குட்டி
வீட்டைச் சுற்றும் பூனைக் குட்டி
அள்ளி வைச்ச சோற்றை விட்டு
அடுப்பின் மேலே ஏறிக் கிட்டு

(வேறு)

காச்சி வைச்சப் பாலையெல்லாம் மிச்சம் வைக்கலே;
கலந்து வைச்ச காப்பியையும் பாக்கி வைக்கலே
வெள்ளைநிறம் ஆனாலும் கள்ளம் போகுமோ?
வேப்பங் காயும் பேரிக்காய்போல் மிகஇனிக்குமோ[5]

மேற்பாடல் எளிய சொற்களின் வழியே கருத்தை உணர்த்தினாலும் மிக நுட்பமான கருத்தையும் உணர்த்திச் செல்கின்றது. வெளித்தோற்றம் கண்டு ஏமாந்துவிடக் கூடாது என்ற கருத்தைச் சிறுவர்களுக்குப் புரியும்படியாகக் கூறியுள்ள திறம் பாராட்டத் தக்கதாகும்.

வெள்ளை நிறத்தில் அழகான பூனைக் குட்டியென்றால் அதனுடன் விளையாடச் சிறுவர்கள் மிக விரும்புவார்கள். அதன் அழகுக் கவர்ச்சியால் அதைத் தம்முடன் வைத்துக் கொள்ள விரும்புவர். ஆனால் பூனையோ எத்தனை சிறுவர்களின் நட்பு இருந்தாலும் நல்ல உணவு வகைகள் பல இருந்தாலும் திருட்டுத்தனமாய்ப் பாலைக் குடிப்பதிலேயே குறியாய் இருக்கும். எனவே, அதைப் பற்றிய கவனம் தேவை என்பதை அடிகளாசிரியர் சிறுவர்களுக்கு உணர்த்துகின்றார்.

உடன்சென்று உணர்த்தும் பண்புக் கருத்து

சிறுவர்கள் தங்கள் விருப்பம்போல் விளையாட வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் அவர்களிடம் சாப்பிடு, குளி, தூங்கு எனப் பெற்றோர்கள் வற்புறுத்தக் கூடாது. அவ்வாறு வற்புறுத்தினால் சிறுவர்களுக்கு அது சலிப்பாகவே அமையும். இந்நிலையில் சிறுவர்கள் “போம்மா அப்புறம் சாப்பிடறேன்” என்று கூறித் தப்பிக்கப் பார்ப்பார்கள். உடனே, தாய் சரிடா நீ சாப்பிட வேண்டாம். ஒன்னோட காக்காய்க்கு, பச்சைக்கிளிக்குச் சோறுபோடு என்று கூறி அவர்களுடன் தெருவிற்குச் சென்று சிறிது சோற்றைத் தெருவில் இறைத்துவிட்டு, “நீ சாப்பிட்டாத்தான் கிளி, காக்கா எல்லாம் சாப்பிடும். எங்கே . . .நீ முதல்ல சாப்பிடு பார்க்கலாம்” என்று கூறி சிறிது சிறிதாகச் சோற்றை ஊட்டிவிடுவர். இச்செய்தியை அடிகளாசிரியர் கீழ்க்கண்ட பாடலில் கூறியுள்ளார்.

சாப்பி டம்மா சாப்பிடு
சப்பிச் சப்பிச் சாப்பிடு
பருப்புச் சோற்றைச் சாப்பிட
பறக்கும் காகம் வந்திடும்
பாலும் சோறும் சாப்பிட
பச்சைக் கிளியும் வந்திடும்
காக்கை கிளிகள் சாப்பிடக்
கலத்தில் சோற்றைச் சாப்பிடு
உனக்கு ஒருவாய் வாங்கிக்கோ
கிளிக்கு ஒருவாய் கொடுக்கிறேன்
காக்கைக்குக் கொஞ்சம் போடுகிறேன்
கையில் மிச்சம் சாப்பிடு[6]

மேற்பாடலால் சிறுவயதிலேயே பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பினை வளர்க்க முடியும் என்று அடிகளாசிரியர் உணர்த்த விரும்புகின்றார். சிறுவர்களிடம் உடன் சென்று உணர்த்தாமல் போனால் அப்பண்பு அவர்களிடம் வளராமல் போகும்.

'பக்கத்துவீட்டு அண்ணன் வர்றான். அவன் வர்றதுக்குள்ள சாப்பிடு' என்று கூறி சிறுவர்களுக்கான மனநிலையை எதிர்நின்று கொடுக்கக் கூடாது.

காண வைத்து உணர்த்தும் பண்புக் கருத்து

சிறுவர்களுக்கு விருப்பமான பொருட்களைக் காட்டி அப்பொருளின் வழியே அவர்களுக்கு ஏற்ற கருத்துகளைக் கூறி மனத்தில் பதிய வைத்திடல் வேண்டும். இம்முறையில் அரிய கருத்துகளைக்கூட விளையாட்டாக அவர்களது மனத்தில் புரியும்படி பதிந்து வைக்க முடியும் எனக் கருதுகின்றார் அடிகளாசிரியர்.

"வெள்ளை வெள்ளைக் கண்ணாடி
வீட்டில் மாட்டும் கண்ணாடி
பள்ளிக் கூடம் போகுமுன்பு
பார்த்துச் செல்லும் கண்ணாடி
என்னைப் போன்ற உருவத்தை
எதிரில் காட்டும் கண்ணாடி
முன்னே நின்ற பொருளையெலாம்
முழுதும் காட்டும் கண்ணாடி.
கண்ணால் எல்லாப் பொருள்களையும்
கண்டு கண்டு மகிழலாம்
கண்களையும் காட்டு கின்ற
கருவி ஆகும் கண்ணாடி

கண்ணாடி போல் பொருளைக் காட்டும்
கவிகள் கூறும் புலவரை
விண்நாட்டில் வாழும் தேவரைப்போல்
விரும்பி நாமும் வணங்கலாம்"[7]

மேற்பாடலின் வழியே சிறுவர்கள் விரும்பிப் பார்க்கின்ற கண்ணாடியைக் காட்டி அதைப் போன்றே புலவர்களின் பாடல்கள் வாழ்க்கையை எதிரொளித்துக் காட்டுவதை அவர்களுக்கு உணர்த்தியுள்ளார்.

புலவர்களை வணங்க வேண்டும் என்ற எண்ணத்தையும் சிறுவர்களிடம் உண்டாக்குவதற்குக் கண்ணாடி ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்த ஊடக உத்தி நூறுவிழுக்காடு வெற்றியும் பெறுகின்றது. ஆனால் சிறுவர்களுக்கான "காண வைத்து உணர்த்தும் ஊடகங்கள்" சரியானவையாக இருக்க வேண்டும். இன்றைய உலகம் தொலைக்காட்சி, திரைப்படம் போன்ற ஊடகங்களால் சீரழிவதைக் கருத்தில் கொண்டு சிறுவர்களுக்கென்று நல்ல தன்மையுள்ள ஊடகங்களையே பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தையும் உணர்த்திச் செல்கின்றது.

வேண்டுகோள் பண்பை உணர்த்தும் கருத்து

சிறுவர்களிடம் வேண்டுகோளாகச் சொல்லப்படும் சொற்களுக்கு, நல்ல பலன் விளையும். இதனாலேயே பள்ளுத்தமிழ் பாடுபவர்கள் செங்கீரை ஆடுக, முத்தம் தருக, அம்புலி ஆடுக, சிறுபறை முழக்குக என்று வேண்டுகோள் வடிவத்தில் பாடியுள்ளார். எனவே, அடிகளாசிரியரும் வேண்டுகோள் பண்பைத் தனது பாடல்களில் கையாண்டுள்ளார்.

சிறுவர்கள் பெரும்பாலும் புகழ்ச்சிக்கு மயங்கிவிடும் மனநிலை உடையவர்கள். 'அம்மா நான் நல்ல புள்ளேதானே' என்று கேட்டால், 'ஆமாங்கண்ணு ஒன்னப் போல நல்ல பிள்ளைங்க யாரும் இல்லை' என்று சொல்லிவிட்டு, 'கண்ணு கடையிலே போய் காப்பித்தூள் வாங்கிட்டு வர்றியா? என்று கேட்டால் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஓடுவார்கள். 'டே தம்பி கடையில காப்பித்தூள் வாங்கிட்டு வாடா' என்று கண்டிப்புடன் கூறினால் போகாமல் மறுத்து விடுவார்கள். இந்த வேண்டுகோள் உணர்த்தல் உத்தியை அடிகளாசிரியர் கீழ்வரும் பாடலில் வெளிப்படுத்தியுள்ளார்.

சுற்றித் திரியும்நல்ல தம்பீ–நீயும்
சோம்பற் கிடங் கொடாதே தம்பீ–!

கற்றுத் தெளிய வேணுந் தம்பி–கல்வி
கண்கள் உனக்குமிகத் தம்பி.

பொய்யுந் திருட்டும் வேண்டாம் தம்பீ–அவை
பொல்லாக் கொடுமை தரும் தம்பீ!
மெய்யும் ஒழுக்கமுமே தம்பி–இந்த
மேதினிக்கு வேண்டுமடா தம்பீ!

தேய்த்துக் குளிக்க வேணுந் தம்பீ–தினம்
தோய்த்த துணியைக் கட்டுத் தம்பீ!
ஏய்த்து பிழைத்திடாதே தம்பீ! அது
என்றைக்கும் தீங்குதரும் தம்பீ!

கண்ட உமிழ்ந்திடாதே தம்பீ
காறி உமழ்ந்திடாதே தம்பீ!
மண்டலம் தூய்மையானால் தம்பீ–எங்கும்
மக்களுக்கு நோய் வராது தம்பீ![8]

மேற்கண்ட பாட்டில் அடிகளாசிரியரின் வேண்டுகோள் பண்பு மிகவும் தெளிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கட்டளைப் பண்பை உணர்த்தும் கருத்து

சிறுவர்கள் ஆட்டம், பாட்டம் இவற்றில் ஆர்வம் கொண்டு செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யாமல் இருப்பர். அப்பொழுது எவ்வளவுதான் அன்பாகப் பேசினாலும் அவர்கள் காதில் ஏறாது.

எனவே, அவர்களைக் கடுமையாகப் பேசித்தான் ஆகவேண்டும். அதைச் செய், இதைச் செய் என்று கட்டளையிட்டே கூற வேண்டும். இது ஒருவித மனநலம் காககும் செயல். சிறுவர்கள் தங்கள் கடமையை மறந்தால் செய்ய வைப்பது கொடுமையல்ல, அவர்களுக்குக் காட்டப்படும் நல்வழியாகும்.

அடிகளாசிரியருக்குத் தமிழகம் வீடாகத் தெரிகின்றது. தமிழன் தன்தம்பியாகத் தெரிகின்றான். அவன், தமிழ்மொழி வளர்க்கும் கடமையைச் செய்யாமல் பிறவற்றில் ஈடுபட்டு நிற்கின்றான். இவ்விடத்தில் அடிகளாசிரியரின் கட்டளைப் பண்பைப் பயன்படுத்தியுள்ளார்.

தம்பித் தம்பித் தமிழா!
தமிழை நாளும் கற்பாய்!
நம்பி நம்பித் தமிழா!
நாளும் நாளும் கற்பாய்

பழமை உற்ற மொழிகள்
பழுத்து வீழ்ந்து போச்சு
செழுமை உற்ற மொழிகள்
சிறந்து கிளைக்க லாச்சு.

காலப் போக்கை வெல்லும்
கருவை உடைய தமிழைச்
சால நாட்கள் வேண்டாம்
சடுதி யாகக் கற்பாய்

எழுத்து மிகவும் குறைவு
எளிய இனிய சொற்கள்
பழுத்த சுவைகள் உண்டு
பயன்செய் பொருளும் உண்டு.

வாழக் கருதும் நமக்கு
வாழ்வைக் கொடுக்கும் தமிழை
ஆழ, மாகக் கற்றால்
அறிவில் உயர்ந்து[9]

மேற்பாடல் தமிழனுக்குக் கட்டளையிடும் பண்பை உணர்த்துவதாகும்.

அடிகளாசிரியரின் கருத்தியலில் மறுப்புப் பண்பு

சிறுவர்களிடம் அதைச் செய்யாதே இதைச் செய்யாதே என்று நேரடியாக மறுப்புக் கூறினால் அவர்கள் நாம் சொன்னதற்கு நேர்மாறாகத்தான் செய்வார்கள். எனவே, மறுப்பு என்பதை நேரடியாகக் கூறாமல் அவர்கள் தாமாக அறிந்து கொள்ளும்படி ஏதாவது உத்தியைக் கையாண்டுதான் கூற வேண்டும்.

'ஓடாதே நில்' என்று நாம் கூறும் போதுதான் அவர்கள் வேகமாக ஓடுவார்கள். 'அம்மாவால் நடக்க முடியல கண்ணு, அம்மாவக் கையப் பிடிச்சி அழைச்சிட்டுப் போறியா?' என்றால் அவர்கள் தானாக நம்முடன் நடந்து வரத் தொடங்குவார்கள். இந்த உளவியல் அடிப்படையில் அடிகளாசிரியர் சிறுவர்களிடம் மறுப்புத் தெரிவிக்கும் இடங்களில் மிகமிகக் கவனமாகச் சில உத்திகளைக் கையாண்டு தன் மறுப்பைத் தெரிவிக்கின்றார்.

நகைத்து மறுத்தல்

சிறுவர்கள் சிறுவர்களாகவே இருப்பதில்லை. அவர்களும் சமயத்தில் பெரிய மனிதர்களைப் போன்றே பேசி பெரியவர்களை மடக்கி விடுவார்கள். அவர்களின் மறுப்புக்கு மறுப்புச் சொல்ல பெரியவர்களால் முடியாது. அத்தகைய ஒரு சூழலை ஒருபாட்டில் அடிகளாசிரியர் காட்டியுள்ளார். சிறுவர்களை ஏமாற்ற நினைப்பவர்களுக்கு அவர்களின் அறிவுத்திறன் தெரியும்போது மிகுந்த சங்கடமாகி விடுவதை நகைச் சுவையுடன் அடிகளாசிரியர் காட்டியுள்ளார். அப்பாடல் வருமாறு:

பேரன்

பாட்டி பாட்டி தட்டிலே
பழமி ருக்குது பார்த்தியா?
சின்ன பழத்தை எடுத்துக்கோ
பெரிய பழதததை எனக்குத்தா

பாட்டி

சின்ன பையன் நீயடா
சின்ன பழத்தை எடுத்துக்கோ
பெரிய பாட்டி நானடா
பெரிய பழம் எனக்குத்தான்

பேரன்

அப்படியா!

கூனல் பாட்டிக் கையிலே
கோணக் கோலு இருக்கனும்
ஏனோ நல்ல கோலினை
எடுத்து நடந்து திரியறே[10]

மேற்கண்ட பாட்டில் மறுப்பு வெளிப்படும். வகையானது நகைத்து மறுப்பதுடன் நகைப்பையும் வரவழைக்கின்றது. இத்தகைய பாடல்கள் சிறுவர்கள் மனத்தில் எளிதில் பதிவதுடன் அவர்களது ஆற்றலையும் வளர்க்க உதவி செய்யும்

சினந்து மறுத்தல்

ஏழ்மையின் காரணமாகத் தன்மகளை விளையாட அனுமதிக்காத ஒருதாயிடம் அம்மகள் சினந்து மறுத்துக் கூறுவதுபோல் உள்ள இப்பாடல் சிறுவர் மனநிலையைக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கின்றது.

ஓடி விளையாட்டில் – என்றன்
உள்ளம் களிப்படையும் – அம்மா!
கூடி விளையாட்டில் – எனக்குக்
கோடி மகிழ்ச்சி வரும்.
ஓடி விளையாட – இங்கே
ஒருசாண் இடமுமில்லை
கூடி விளையாட – ஒரு
குழந்தையும் இல்லையம்மா.
வீட்டிற் சிறைகிடந்து – நெஞ்சின்
வேட்கை அழித்தேனே – நல்ல
நாட்டின் நிலையறியேன் – கிணற்றுள்
நண்ணுந் தவளையைப் போல்
காலைப் பொழுதினிலே – வீட்டுக்
காரியம் பார்த்திடினும் – இந்த
மாலை பொழுதிலேனும் – இயற்கை
மாண்பினைப் பார்க்கவிடு"

இப்பாடல் சிறுவர்களுக்கென்று ஓர் உலகம் உள்ளதைக் காட்டுகின்றது. ஆனால் இன்றைய பெற்றோர்கள் அச்சிறுவர்களது உலகத்தை மறந்து விட்டனர் என்பதை அடிகளாசிரியர் காட்டுகின்றார்.

இரங்கி மறுத்தல்

சிலர், செல்வமே பெரிது என்று எண்ணி நாளும் செல்வம் சேர்ப்பதிலேயே குறியாய் இருந்து வருகின்றனர். வாழ்வில் இன்பம் காணாமல் துன்பத்தில் உழலும் அவர்களைக் கண்டு, அவர்களின் செல்வச் சிறப்பை மறுத்துக் கூறுகின்றார் அடிகளாசிரியர். இக்கருத்தை உணர்த்தும் பாடல் வருமாறு.

மாடி வீட்டில் வாழ்பவரே!
மனத்தில் உமக்கு மகிழ்ச்சியுண்டோ?
மணலால் வீட்டைக் கட்டுகிற
மகவின் மகிழ்ச்சி தனைப் பாரீர்!

வெள்ளிக் கலத்தில் உணவுண்டு
விரைந்து காரில் செல்பவரே!
உள்ளம் தம்மில் உமக்கனமதி
உண்டோ? உண்மை யாய் உரைப்பீர்!

சின்ன குழந்தை மனம்போலச்
சிறந்த மனத்தைப் பெற்றுவிட்டால்
பொன்னும் பொருளும் உடையவரே!
பொருந்தி நிற்பீர் நல்லின்பம்"[12]

மேற்பாடல் இரக்க உணர்வும், கருத்தியல் பண்பும் கலந்துவர, சிறுவர்களின் மகிழ்ச்சி என்ற 'பொருள்' பொருளால் வந்ததல்ல என்ற தத்துவப்பண்பையும் விளக்கி நிற்கின்றது.

முடிவுரை

அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியத்தில் கருத்தியல் பண்பு என்ற இவ்வியலின் வழியே இதுகாறும் ஆய்ந்து கண்ட முடிவுகள் வருமாறு:

1. கருத்தியல் (Logic) என்பதன் சொல், பொருள் ஆகியவற்றை இவ்வியல் விளக்கிக் கூறியுள்ளது.
2. செய்தி என்பதே கருத்தியலின் கருவாகக் காணப்படுகின்றது. இருப்பினும் செய்திக்கும் கருத்தியலுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.
3. அடிகளாசிரியர் 'கருத்தியல்' என்பதைச் சிறுவர்களிடம் கொண்டு செல்ல மேற்கொண்டுள்ள உத்திமுறைகளை இவ்வியல் தெளிவாக விளக்கியுள்ளது.
4. சிறுவர் இலக்கியத்தில் கருத்தியல் பண்புகள் உருவாக்கம் பற்றி இவ்வியல் ஆய்ந்து விளக்கியுள்ளது.
5. சிறுவர் இலக்கியத்தில் கருத்தியல் பண்புகள் கையாளப் பெற்றுள்ள திறனைப் பற்றி இவ்வியல் விரிவாக ஆராய்ந்துள்ளது.
6. அடிகளாசிரியரின் கருத்தியல் பண்புகள் கீழ்வரும் தலைப்புகளில் நெறிப்படுத்தப்பட்டுள்ளதை இவ்வியல் புலப்படுத்தியுள்ளது 1. உடன்சென்று உணர்தல் 2. காண வைத்து உணர்த்தல் 3. வேண்டுகோள் 4. கட்டளை.
7. அடிகளாசிரியரின் கருத்தியலில் மறுத்தல் பண்பு பெறுகின்ற இடத்தை ஆய்ந்து. கூறியுள்ளது நகைத்து மறுத்தல், சினந்து மறுத்தல், இரங்கி மறுத்தல் ஆகிய மூன்று பண்புகளால் அடிகளாசிரியர் மறுப்புகளைத் தனது கருத்தியலில் கொண்டுள்ளதை இவ்வியல் வெளிப்படுத்தியுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. பட்டுக் கோட்டையாரின் திரையிசைப் பாடல், அரசிளங் குமரியின் திரைப்படப்பாடல்.
2. திரு. அடிகளாசிரியர், தொழிலியல், பாடல்-10.

3. மேலது, பாடல்-37.

4. கி. இறைக்கோ, பெரியார் மும்மணிக் கோவை, வாழ்த்துப்பா.

5. திரு அடிகளாசிரியர், சிறுவர் இலக்கியம், பாடல்-69.

6. மேலது, பாடல்-50.

7. மேலது, பாடல்-81.

8. மேலது, பாடல்-22.

9. மேலது, பாடல்-17.

10. மேலது, பாடல்-37.

11. மேலது, பாடல்-62.

12. மேலது, பாடல்-45.

துணைநின்ற நூல்கள்

1. ஔவையாரின் தனிப்பாடல்கள், முல்லைநிலையம், சென்னை.
2. சிறுவர் இலக்கியம், அடிகளாசிரியர், திரு. (பதி. அ. சிவபெருமான்), திருவருள் நிலையவெளியீட்டகம், முதல் பதிப்பு, விழுப்புரம், 2004.
3. தமிழ் விடுதூது, கழகப் பதிப்பு, சென்னை, 1952.
4. திருமந்திரம், கழகப் பதிப்பு, சென்னை, 1984.
5. திருமூல ஔவையார் அருளிய நல்வழி மூலமும் உரையும், அடிகளாசிரியர், திரு. (உரையாசிரியர்), திருவருள் நிலைய வெளியீட்டகம், முதல் பதிப்பு, விழுப்புரம், 1999.
6. தொல்காப்பியம் (மூலம்), கழக வெளியீடு, சென்னை, 1943.
7. தொழிலியல், அடிகளாசிரியர், திரு. திருவருள் நிலைய வெளியீட்டகம், முதற்பதிப்பு, குகையூர் அஞ்சல், விழுப்புரம், 1993.
8. நீதிக்கோவை, ஸ்ரீ அய்யனார் ஸ்பின்னிங்மில்ஸ், மூன்றாம் பதிப்பு, விருதுநகர்.
9. பாரதியார் கவிதைகள், அம்மன் பதிப்பகம், முதல்பதிப்பு, சென்னை, 1993.

பின்னிணைப்பு - 1

அடிகளாசிரியர் படைப்புகள்

1. உரை நூல்கள்

அ) உரைப் பதிப்புகள்

(உரையோடு விளங்கிய நூல்களைப் பதிப்பித்தல்)

1. அருணகிரி அந்தாதி - சரசுவதிமகால் வெளியீடு 1967
2. மருதூரந்தாதி உரை - சரசுவதிமகால் வெளியீடு 1968
3. காலச் சக்கரம் - சரசுவதிமகால் வெளியீடு (சோதிட நூல்) 1969-79
4. வராகர் ஓராசாத்திரம் (சோதிட நூல்) சரசுவதி மகால் ெளியீடு 1970-8-90
5. சிவஞான தீபம் உரை-சரசுவதி மகால் வெளியீடு 1970
6. சிவப்பிரகாச விகாசம் உரை- சரசுவதி மகால் வெளியீடு 1977

ஆ) உரைவரைவுகள்

(தாமே உரை எழுதி வெளியிட்டவை)

7. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் உரை 1938
8. சேக்கிழார் பிள்ளைத் தமிழ் உரை 1967
9. தமிகக் கல்வெட்டு விளக்கவுரை (மு. கோவிந்தராசனாருடன் இணைந்து எழுதியவை) 1967-68
10. திருவலஞ்சுழி தேவரப்பாடல்கள் உரை 1956
11. திருவாசகக் கோயில் திருப்பதிகம் உரை 1981
12. சிவபுராணச் சிற்றுரை 1986-99
13. சதமணிமாலை மூலமும் உரையும் 1990
14. சித்தாந்த சிகாமணி அங்கத் தலத் திரட்டு உரை 1991
15. ஸ்ரீமத் சிவஞான பாலதேசிகர் திருப்பள்ளி எழுச்சி உரை 1991
16. குதம்பைச் சித்தர் பாடலும் உரையும் 1999
17. இட்டலிங்க அபிடேக மாலை மூலமும் உரையும் 2001

18. சசிவன்ன போதம் மூலமும் உரையும் 2002
19. பஞ்சதிகார விளக்கம் மூலமும் உரையும் 2003
20. நல்லவை நாற்பது

2. பதிப்பு நூல்கள்

(ஓலைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தவை)

21. வீரசைவப் பிரமாணம் 1936
22. சமணிமாலை (மூலம் மட்டும்) 1938
23. சிவப்பிரகாச விலாசம் (மூலம் மட்டும்) 1939
24. காமநாதர் கோவை 1957
25. மேன்மைப் பதிகம் 1957
26. சதுர்லிங்க தசகோத்திர சதகம் 1958

3. ஆராய்ச்சி நூல்கள்

27. தொல்காப்பியம் - எழுத்து - இளம்பூரணம் (அரிய ஆராய்ச்சிப் பதிப்பு) 1966
28. ஐவகையடியும் என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்கம் (சென்னைப் பல்கலைக்கழகம்) 1977
29. தமிழ் இலக்கண இலக்கியங்களில் சைவசித்தாந்தம் 1978
30. தொல்காப்பியம்-சொல்-இளம்பூரணம் 1990
31. தொல்காப்பியம்-பொருள்-செய்யுளியல் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 1985
32. தொல்காப்பியம்-பொருள் எட்டு இயல் மட்டும் (தமிழ்ப் பல்கலைக்கழகம்) 2008

4. படைப்பிலக்கிய நூல்கள்

அ) செய்யுள் வடிவம்

33. பிள்ளைப்பாட்டு 1945
34. திருஅரசிலிக் காதை 1948
35. குழந்தை இலக்கியம் 1963
36. சான்றாண்மை (கோப்பெருஞ்சோழன் பற்றியது) 1964-1975
37. சென்னிமலை முருகன் தோத்திரம் 1980
38. அரசியல் இயக்கம் 1981
39. பல்சுவைப் பண்ணத்திப் பாடல்கள் (குழந்தை இலக்கியம்) 1983
40. அருள்திரு மாரியம்மன் திருப்பதிகம் 1982
41. உளத்தூய்மை 1984-94

42. தன்னிழல் (திருமுடிக்காரியைப் பற்றிய அரிய இலக்கியம்) 1990
43. மறவர் நத்தக்குன்றமரும் திருமுருகன் 1993
44. தொழிலியல் 1993
45. மெய்பொருட் காதை (மெய்பொருள் நாயனார் வரலாறு)
46. தமிழ் மாண்பும் தமிழ்த் தொண்டும் (தமிழியக்க வெளியீடு) 1996
47. உன்பான்கோள் வணக்கப் பாடல்கள் (தமிழியக்க வெளியீடு) 1993
48. சிறுவர் இலக்கியம் 2003-04
49. திருநாளைப் போவார் திருக்காதை 2006
50. தனிப்பாடல்கள் 2007

ஆ) உரைநடை

51. எங்களூர் 1937
52. தொடக்கப்பள்ளி - நாடகம் 1949
53. வீரசைவ சிவ பூஜாவீதி 1984
54. விலையேற்றமும் வாழும் வழியும் 1984
55. திருமூலரும் பேருரையும் (தமிழக அரசின் முதற்பரிசு பெற்ற நூல்) 1998
56. காயத்துள் நின்ற கடவுள் 1999
57. திருவாசக அநுபூதி 2000
58. கீதையின் அறிவுப்பொருள் 2000
59. திருமந்திர உணர்வு 2001
60. தொல்காப்பியச் செய்யுளில்-உரைநடை 2008

பொருள் முட்டுப்பாட்டினால் முடங்கிக் கிடக்கும் அச்சேறா நூல்கள்

1. கலித்தொகை உரை (குறிஞ்சிக்கலி).
2. பிரபுலிங்கலீலை உரை
3. அடிகளாசிரியரின் சமுதாயப் பாடல்கள்.
4. அடிகளாசிரியரின் இலக்கணக் கட்டுரைகள்.
5. அடிகளாசிரியரின் இலக்கியக் கட்டுரைகள்.
6. திருக்குறள் உரை (133 குறள் உரை).
7. முப்பால் - உரைநடை
8. சிவஞான பாலைய சுவாமிகள் கலம்பகம் மூலமும் உரையும்.

பின்னிணைப்பு - 2

சிறுவர் இலக்கியத்தைப் பாராட்டிய குடியரசுத் தலைவரின் மடல்

A.P.J. Abdul Kalam

Rashtrapati Bhavan
New Delhi - 110004

ஆகஸ்ட் 17, 2004

முனைவர் சிவபெருமான் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களது கடிதமும் 'இலக்கியங்களில் வானியல்' முதலான மூன்று நூல்களும் கிடைத்தன. நன்றி.

'இலக்கியங்களில் வானியல்' மற்றும் 'தமிழரின் வானியல் திறன்' ஆகிய நூல்களில் தமிழிலக்கியங்களில் காணப்படும் வானியல் தொடர்பான செய்திகளை நல்லமுறையில் தொகுத்துள்ளீர்கள். 'சிறுவர் இலக்கியம்' சந்த நயத்தோடு இயைந்த குழந்தைகளுக்கான நல்ல இசைநூல்.

உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,

(கையொப்பம்)
(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)

राष्ट्रपति सचिवालय,
President's Secretariat,
राष्ट्रपति भवन,
Rashtrapati Bhavan,
नई दिल्ली - 110004.
NEW DELHI - 110004.

To
Dr. A. Sivaperuman,
Professor, Tamil Department
Annamalai University
Annamalai Nagar – 608 002
Chidambaram,
Tamil Nadu.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	280.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
[illegible] பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00
குளோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம்	60.00

---

635 தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் — 30.00